# இஸ்லாத்தின் வெற்றி

உருது மூலம்

ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது (அலை...) அவர்கள்

*வாக்களிக்கப்பட்ட மஸீஹ் மற்றும் மஹ்தி*
*அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் தோற்றுநர்*

தமிழாக்கம்

ச. செ. ஹஸன் அபூபக்கர்

வெளியிடுவோர்

தமிழக புத்தக வெளியீட்டுக் குழு
**அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்**
11, முதல் பிரதான சாலை, யு.ஐ. காலனி,
கோடம்பாக்கம், சென்னை- 600 024.

Copyrights Reserved

**Islaathin Vetri**

Tamil version of

**'Fat-he-Islam'** **(Urdu)**

By Hadhrath Mirza Ghulam Ahmad
(Founder of the Ahmadiyya Muslim Jama'ath, The Promised Messiah & Mahdi)

**First Edition 1978**
**Second Edition 2010**

**ISBN : 978 81 7912 249 5**

Published by :

**Tamilnadu Book Publishing Committee**
**AHMADIYYA MUSLIM JAMA'ATH**
No. 11, First Main Road,
United India Colony, Kodambakkam,
Chennai - 600 024. Tamilnadu.
**Website: www.alislam.org\tamil**
**E-mail: amjchennai@yahoo.in**

For:
**NAZAARAT NASHR-O-ISHAAT**
Sadr Anjuman Ahmadiyya, Qadian

بسم الله الرحمن الرحيم

# முன்னுரை

அல்லாஹ்வின் பேரருளால், அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் தோற்றுநர் ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது (அலை) அவர்களால் பிற மதங்களிலிருந்து இஸ்லாத்தின் மேன்மையை எடுத்துக் கூறுவதற்காக, அல்லாஹ்வுக்கும் அவனது அடியார்களுக்கும் இடையே ஓர் உயிரோட்டமுள்ள தொடர்பை ஏற்படுத்துவதற்காக எழுதப்பட்ட எண்பதிற்கும் மேற்பட்ட நூல்களில் ஒன்றான ‘ஃபத்ஹே’ இஸ்லாம் எனும் நூலின் தமிழாக்கத்தை இஸ்லாத்தின் வெற்றி என்னும் தலைப்புடன் அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் தமிழக புத்தக வெளியீட்டுக் குழு வாயிலாக வெளியிடுவதில் மிக்க மகிழ்ச்சி அடைகிறோம்.

இந்நூலில், புனித நபி பெருமானார் (ஸல்) அவர்களின் முன்னறிவிப்பின்படி, ‘வரவிருந்த மஸீஹ் இவர்தான். விரும்பினால் நீங்கள் அவரை ஏற்றுக் கொள்ளுங்கள்’ என ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது (அலை) அவர்கள் அழைக்கின்றார்கள். ( 19 ஆம் பக்க அடிக்குறிப்பு காண்க)

மேலும் இந்நூலில், ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது (அலை) அவர்கள், ‘இஸ்லாத்திற்காக ஒரு புத்தம் புதிய ஒளிமிக்க நாள், முன்பு மலர்ந்தது போன்றே மலரும். இஸ்லாமிய சூரியன் முன்பு உதித்தது போன்றே முழுப் பிரகாசத்துடன் உதயமாகும்’ என்று அறிவிக்கின்றார்கள். மேலும், இஸ்லாம் உயிர் பெறுவதற்கு, நம்மிடமிருந்து அது ஒரு பரிகாரத்தை வேண்டுகிறது. அது என்ன? அது அதன் வழியிலேயே நாம் மரணிப்பதாகும். இந்த தியாகத்தின் மீது தான் இஸ்லாத்தின் வாழ்வு, முஸ்லிம்களின் வாழ்வு, உயிருள்ள இறைவனின் தோற்றம் யாவும் சார்ந்து நிற்கின்றன. இதன் மறு பெயர்தான் இஸ்லாம் என்றும் கூறுகிறார்கள். (பக்கம் 18, 19)

சுருக்கமாக, ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது (அலை) அவர்களின் வாதங்கள், அவர்களின் வருகையின் நோக்கம் இஸ்லாமிய மறு மலர்ச்சிக்கான செயல்முறைத் திட்டங்கள், அதனை சொல் வடிவில் கொண்டு வருவதில் உள்ள அவர்களது ஆதங்கம் இந்நூலின் வாயிலாக கலப்பற்ற முறையில் அவர்களால் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

தமிழ் கூறும் நல்லுலகம் இந்நூலின் வாயிலாக, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் முன்னறிவித்துள்ளபடி இக்காலத்தில் தோன்றியுள்ள ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது (அலை) அவர்களை ஏற்றுக் கொண்டு இஸ்லாத்தின் மறுமலர்ச்சிக்காக உழைக்கும் வாய்ப்பினை இறைவன் வழங்குவானக. இப்புத்தகத்தின் ஆங்கில மொழியாக்கமான ‘தி விக்டரி ஆஃப் இஸ்லாம்’ என்னும் நூலை ஜனாப் ச. செ. ஹஸன் அபூபக்கர் அவர்கள் தமிழாக்கம் செய்து அதனை தமிழக புத்தக சரி பார்ப்புக் குழுவினால் சரி பார்க்கப்பட்டு மறுபதிப்பு செய்யப்பட்டுள்ளது.

இப்புத்தகத்தை வெளியிடுவதற்காக பணியாற்றிய அனைத்து சகோதர சகோதரிகளுக்கும் அல்லாஹ் மேலான நற்கூலியினை வழங்குவானாக.

1. 9. 2010

**- வெளியீட்டாளர்**

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ

نَحْمَدُهُ وَ نُصَلِّى عَلٰى رَسُوْلِهِ الْكَرِيْمِ

# இஸ்லாத்தின் வெற்றி

இஸ்லாத்தின் வெற்றியைப் பற்றியும் சர்வ வல்லமையுள்ள இறைவன் தன்னைப் பெருமளவில் வெளிப்படுத்திக் காட்டுதல் பற்றியும் ஒரு நற்செய்தி- அத்துடன் அவனுக்குக் கீழ்ப்படிந்து நடப்பதற்கான பாதையையும் அவனது உதவியைச் சம்பாதித்துக் கொள்வதற்கான வழி வகைகளையும் அறிந்து கொள்ளும்படி விடுக்கப்படும் ஓர் அழைப்பு.

رَبِّ انْفُخْ رُوْحَ بَرَكَةٍ فِىْ كَلَامِىْ هٰذَا وَاجْعَلْ اَفْئِدَةً مِّنَ النَّاسِ تَهْوِىْ اِلَيْهِ

என் இறைவா! எனது இந்த வார்த்தையில் நீ அருளின் ஆவியை ஊதுவாயாக! மேலும் நீ மக்களின் உள்ளங்களை இதன் பக்கம் சாய்ப்பாயாக!!

வாசகர்களே! இம்மையிலும் மறுமையிலும் அல்லாஹ் உங்களைக் காப்பானாக. ஒரு நீண்ட காலத்திற்குப் பிறகு, இந்த எளியவன் இம்முக்கியமான கட்டுரையை உங்களின் கவனத்திற்கு





கொண்டு வருகின்றேன். இக்கட்டுரை ஒரு தெய்வீக வேலைத் திட்டத்தைப் பற்றியதாகும். இஸ்லாம் மார்க்கத்தின் மேம்பாட்டிற்காக இச்செயல் திட்டத்தை நிறைவேற்ற இறைவன் என்னையே நியமித்திருக்கின்றான். இக்கட்டுரையில், இறைவன் எனக்கு அருளியிருக்கும் சொற்பொழிவாற்றும் சக்தியைக் கொண்டு இந்த வேலைத் திட்டத்தின் முக்கியத்துவத்தையும் அதற்கு உதவ வேண்டியதன் அவசியத்தையும் நான் உங்களுக்கு விளக்க விரும்புகிறேன். இதன் மூலம் நான் ஆற்ற வேண்டிய கடமை- அதாவது விளக்கம் கூறி உங்களுக்கு அழைப்பு விடுக்கும் கடமை- நிறைவேறிவிடும். உங்களுக்கு அழைப்பு விடுக்கும் என்னுடைய இக்கட்டுரை உங்களுடைய உள்ளங்களை எவ்வாறு கவரும் என்பதைப் பற்றி எனக்குக் கவலையில்லை. நான் கவலைப்படுவதெல்லாம் எனது தூதுச் செய்தியை உங்களுக்குத் தெரிவிக்க வேண்டிய கடமையைக் குறித்துத்தான். மக்கள் இத்தூதுச் செய்தியை விருப்பத்துடன் கேட்டாலும் வெறுப்புடன் பார்த்தாலும் என்னைப்பற்றி நல்லெண்ணம் வைத்திருந்தாலும் அல்லது தப்பெண்ணத்திற்கு தங்களது உள்ளத்தில் இடமளித்தாலும் ஒருவன் மற்றவனுக்குக் கொடுக்க வேண்டிய கடனுக்குக் கடமைப்பட்டிருப்பது போன்று நானும் இத்தூதை உங்களுக்கு தெரிவிக்க கடமைப்பட்டிருக்கின்றேன்.

وَ اُفَوِّضُ اَمْرِىْ اِلَى اللّٰهِ وَاللّٰهُ بَصِيْرٌ بِالْعِبَادِ

நான் எனது பணியை அல்லாஹ்விடம் ஒப்படைக்கின்றேன். அல்லாஹ் தனது அடியார்களை உற்று நோக்குபவனாவான். (40:45)

நான் இப்போது மேலே வாக்குறுதியளித்த என்னுடைய கட்டுரையின் பக்கம் திரும்புகிறேன். உண்மையைத் தேடுபவர்களே! இஸ்லாத்தை உண்மையாக நேசிப்பவர்களே! நாம் வாழ்ந்து வரும் இக்காலம் மிகவும் இருண்டது என்று உங்களுக்குத் தெரியும். மக்களின் நம்பிக்கையிலும் அவர்களின் நடத்தையிலும் நேர்மையற்றதன்மை புகுந்து விட்டது. தவறு மற்றும் வழிகேடு என்னும் ஒரு கொடிய சூறாவளிக் காற்று எல்லாத் திசைகளிலும் வீசுகின்றது.இறை நம்பிக்கை என்று கூறப்படும் இடத்தை

நாவினால் கூறும் சில சொற்கள் பிடித்துக் கொண்டன. ஒரு சில சடங்குகள் அல்லது ஒரு சில ஊதாரித்தனமான அனுஷ்டானங்கள் அல்லது வெளி வேஷங்கள் இவையே நற்செயல்களாகக் கருதப்படுகின்றன. உண்மையான நன்மை முற்றிலும் அறிந்து கொள்ளப்படவில்லை. இக்காலத்தின் தத்துவ ஞானமும் விஞ்ஞானமும் ஆன்மீக சீர்திருத்தத்திற்கு எதிராகவே இருக்கின்றன.

அதன் விளைவுகள் அதை அறிந்திருப்பவர் மீது மிக தீய தாக்கத்தை ஏற்படுத்துவதுடன் அவை அவர்களை இருளின் பக்கம் இழுத்துச் செல்பவையாக உள்ளன என்பது நிரூபணமாகின்றன. அபாயகரமான எண்ணங்களையும் ஷைத்தானிய உணர்ச்சி களையும் அவை தூண்டி விடுகின்றன. அவற்றை படிப்பதில் மூழ்கியிருப்பவர்கள் திடமான தமது மத நம்பிக்கைகளை இழந்து விடுகிறார்கள். எந்த அளவுக்கென்றால் தெய்வீக உண்மைகளை அலட்சியப்படுத்தத் தொடங்கி நிர்ணயிக்கப்பட்ட அடிப்படை கொள்கைகளை - தொழுகை, நோன்பு போன்ற வழிப்பாட்டு முறைகளை ஏளனமாகவும் கேலிக்குரியதாகவும் பார்க்கத் துவங்கி விடுகின்றனர். அவர்களுக்கு இறைவனும் அவன் இருப்பதும் மிக முக்கியமான விஷயங்களல்ல. அதிகமானோர் இயற்கை வாதச் சிந்தனையில் மூழ்கியவர்களாய், மதத்துக்கு எதிரான கருத்துடையவர்களாக இருக்கிறார்கள். முஸ்லிமாகப் பிறந்து முஸ்லிமாக வளர்ந்தும் இவர்கள் மத விரோதப் போக்குடையவர்களாய் மாறி விடுகிறார்கள். கல்லூரிக்கு செல்லும் இளைஞர்களோ கல்லூரியை விட்டு வெளியேறுவதற்கு முன்னரே தமது மதத்துக்கும் அம்மதத்தின் மீது தமக்குள்ள கடமைகளுக்கும் பிரியா விடை கூறிவிடுகிறார்கள்.

அருவருப்பான பிழையும் வழிகேடும் நிறைந்த காட்சியின் ஒரு பகுதிதான் இது. இக்காட்சியின் இதர பகுதிகள்- நூற்றுக்கணக்கில் எல்லாமே அருவருப்பானவைகளாய் இருக்கின்றன. நேர்மையும் நாணயமும் உலகத்தை விட்டு முற்றாக மறைந்தே போய்விட்டன. உலகத்தை சம்பாதிப்பதற்காக வஞ்சித்தலும், பொய் பேசுதலும் மிதமிஞ்சிப் போய்விட்டன. மிகவும் துஷ்ட மனிதர்கள் தகுதிமிக்கவர்களாகவும் மிகப் பொருத்தமானவர்களாகவும் கருதப்படுகிறார்கள். மோசடி நாணயமின்மை பல்வேறு விதமான





பாவங்கள், கடமைகளில் உணர்ச்சியின்மை, பொய் பேசல், திரித்துக் கூறல் படு மோசமான வகையில் சதித்திட்டம் தீட்டுதல் போன்றவை வளர்ந்து வருகின்றன. மிருகத்தனமான ஆசைகளையும் வன்முறைகளையும் தூண்டிவிடுகின்ற கசப்பான சண்டை சச்சரவுகளையும் கலவரங்களையும் இவற்றுடன் சேர்த்துக் கொள்ளலாம். இவை யாவும் ஒரு பயங்கரப் புயலைப் போன்றவையாகும்.

புதிய புதிய துறைகளில் மக்கள் எவ்வளவு அதிக அளவு அறிவாற்றல் பெறுகின்றார்களோ அவ்வளவுக்கவ்வளவு நிரூபித்து உணர்த்தப்பட்ட சட்டங்களைப் பற்றிய அவர்களின் அறிவும் அதிகரிக்கின்றது. அதே நேரத்தில் அவர்கள் நல்லொழுக்கத்திலும் நன்னடத்தையிலும் குறைபாடு உடையவர்களாகவும் ஆகிறார்கள். அத்துடன் அடக்கம், வெட்கம் ஆகியவற்றை விரும்புவதிலும், இறைவனுக்கு அஞ்சுவதிலும், நேரடியான நடவடிக்கைகளை நேசிப்பதிலும் குறைவுள்ளவர்களாகி விடுகிறார்கள்.

கிறிஸ்துவ மத போதனைகள் உண்மையையும், நேர்மையையும் தகர்ப்பதற்குப் பற்பல கண்ணிகளை அமைத்திருக்கின்றன. கிறிஸ்தவர்கள் இஸ்லாத்தை அழித்தொழிப்பதற்குக் கிளம்பியிருக்கிறார்கள். அவர்கள் பொய்களையும் கட்டுக் கதைகளையும் மிகப் பொருத்தமான வழிகளில் எல்லாச் சந்தர்ப்பங்களிலும் புத்தம் புதிய தொழில் நுட்பங்களின் துணையுடன் பயன்படுத்தி வருகிறார்கள். இவை யாவும் மக்களை ஏய்த்துத் தவறான வழியில் நடத்திச் செல்வதற்கே இயக்கப்படுகின்றன.

கிறிஸ்தவர்கள் முழுமையான மனிதராகிய ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை அவதூறாகப் பேசியும், அவர்கள் மீது வசை பாடியும் வருகிறார்கள். ஆனால் நபி பெருமானார் (ஸல்) அவர்களோ எல்லாக் காலங்களிலும் தோன்றிய மகான்களின் பெருமையை நிரூபித்தவர் ஆவார்கள். அத்துடன் உலகின் பல பாகங்களில் தோன்றிய ஞானவான்கள், இறை தூதர்கள் ஆகியோரின் தலைவர் என்றும் தம்மை நிரூபித்தவர் ஆவார்கள். இத்தகைய பெருமகானை அரங்குகளில் நடைபெறும் காட்சிகளில் கேலி செய்து இகழவும் கிறிஸ்தவர்கள் தயங்கவில்லை. தம்மால்

இயன்றவரை முயன்று மிகவும் வெறுக்கத்தக்க ஓர் உருவத்தை அன்னாரின் பெயரில் படைத்ததை மக்களின் முன்னிலையில் வைக்க முயல்கிறார்கள். இஸ்லாத்தையும், இஸ்லாத்தின் புனித நபிகள் பெருமானார் (ஸல்) அவர்களையும் இவ்வுலகின் பார்வையில் தாழ்த்தும் பொருட்டு விஷத்தன்மை கொண்ட தூய்மையற்ற உள்ளங்களால் எவ்வளவு இழிவாக எண்ணிப் பார்க்க முடியுமோ அந்த அளவுக்கு இழிவான முறையில் குற்றம் சுமத்தப்படுகின்றது.

முஸ்லிம்களே! இப்போது கேளுங்கள்; மிகுந்த கவனத்துடன் கேளுங்கள். இஸ்லாத்திற்கும் இஸ்லாத்தின் புனித தாக்கத்தை ஏற்படுத்தும் சக்திக்கும் எதிரான இந்த இயக்கத்தைச் சாதாரண வழிவகைகளால் தோற்கடிக்க முடியாது. கிறிஸ்தவர்களால் எந்த அளவுக்கு முடியுமோ அந்த அளவுக்குத் திட்டமிடப்பட்ட மிகச் சிக்கலான கட்டுக் கதைகளும் மிகவும் கவனத்துடன் திட்டமிடப்பட்ட சாதனங்களும் அவர்களிடம் ஆதரவாக இருக்கின்றன. இதற்காகும் பெருஞ்செலவைப் பற்றிக் கொஞ்சமும் எண்ணிப் பார்க்காமல் இவ்வேலை இரக்கமற்ற தன்மையில் தொடர்ந்து நடத்தப் படுகின்றது. மிகவும் அவமானத்திற்குரிய சில வழிமுறைகளையும் இவர்கள் விட்டு வைக்கவில்லை. அவற்றை இங்கு விவரித்துக் கூறமுடியாதபடி ஒழுக்கமுறை என்னைத் தடுத்து நிறுத்தி விடுகிறது. மாபெரும் திட்டம் ஒன்றின் அடிப்படையில் அவிழ்த்து விடப்பட்டுள்ள ஓர் இயக்கமாக இது இயங்கி வருகிறது. திரித்துவத்தைப் பின்பற்றும் கிறிஸ்தவர்களின் ஆகக் கெட்ட சூனியத்தால் இதற்கு ஊக்கமளிக்கப்படுகின்றது.

சாதாரண வழிமுறைகளால் இத்தகைய இயக்கத்தைத் தடுத்து நிறுத்திவிட முடியாது. இறைவனின் வல்லமை மிக்க கரத்தின் அற்புதமான வலிமையைக்கொண்டு இதனை எதிர்த்து நிற்காவிட்டால் இதன் வித்தையையும் சூனியத்தையும் அடித்து வீழ்த்த முடியாது. அந்த அற்புத வலிமை மட்டுமே இந்த இயக்கத்தை நசுக்க முடியும்; நசுக்கும். அது இல்லாமல் நம்முடைய ஆன்மாக்களை இந்த விஷத்தன்மைமிக்க மேற்கத்திய மாயத்திலிருந்து நம்மால் காப்பாற்றிக்கொள்ள முடியாது. வேறு எதைப் பற்றியும் சிந்திப்பது வெறும் முட்டாள்தனமாகும். எனவே,





நமது காலத்தில் உண்மையான முஸ்லிம்களுக்கு மத்தியிலிருந்து இறைவன் இந்த எளியவனைத் தேர்ந்தெடுத்திருக்கிறான். இந்த விஷம் மிகுந்த மாயம் செயல்படாமல் போவதற்காக தனது வெளிப்படுத்தப்பட்ட சொல்லினாலும் மற்றத் தெய்வீக ஆதரவாலும் எளியவனாகிய என்னை ஆசீர்வதித்திருக்கின்றான். இதில் ஆச்சிரியப்படுவதற்கு ஏதுமில்லை.

இறைவனை அடைவதற்குரிய பிரத்தியேகமான வழிகளை அவன் எனக்குக் கற்றுத்தந்திருக்கின்றான். இதர தெய்வீக உபகாரங்களையும், அற்புத சக்திகள், ஆன்மீக வாழ்வின் நுட்பமான ஞானத்தையும் அவன் எனக்கு அருளியிருக்கின்றான். இந்த அற்புதத்தின் உதவியினால் நம்முடைய காலத்தில் மேற்கத்திய மாயாஜாலம் எழுப்பியிருக்கும் மெழுகு சிலையை தகர்த்தெறிந்து விடலாம்.

சுருங்கக் கூறின், முஸ்லிம்களே! இந்த எளியவனின் வருகை மேற்கத்திய மாயா இருளைப் போக்கும் ஓர் அற்புதமாகும். மாயாஜாலத்திற்கு எதிராக அற்புதமும் உலகத்தில் வருவது அவசியமில்லையா? இந்தப் பயங்கர திட்டத்தை- இங்கு நான் மாயாஜாலம் என்று குறிப்பிடுபவைகளை- எதிர்த்து நின்று தோற்கடிப்பதற்கு வசீகர சக்தியுடைய ஓர் அற்புதத்தோடு இறைவன் தன்னை வெளிப்படுத்திக் காட்ட வேண்டும் என்பது உங்களுக்கு நூதனமாகவும் நடக்க முடியாததாகவும் இருக்கிறதா?

அறிவுடையவர்களே! தேவையான நேரத்தில், இந்த ஆழமான இருண்ட நாட்களில் இறைவன் ஒரு வானத்தின் ஒளியை இறக்கி யிருப்பதில் நீங்கள் ஆச்சிரியப்பட வேண்டாம்.எல்லாருடைய நன்மையையும் கருதி இஸ்லாத்தின் இன்குரலை மீண்டும் எழுப்புவதற்காக இறைவன் தன் அடியார்களில் ஒருவரை நியமித்திருக்கின்றான் புனித நபிகள் பெருமானாருக்கு நாம் கடன்பட்டிருக்கின்ற ஞானத்தையும் ஒளியையும் பரப்புவதற்காக, முஸ்லிம்களுடைய தனி நலன்களில் அவர்களை ஆதரித்து உதவுவதற்காக, அதே நேரத்தில் அவர்களிடத்தில் உள்ளார்ந்த ஒரு சீர்திருத்தத்தை உண்டாக்குவதற்காக அவர் நியமிக்கப் பட்டிருக்கின்றார். இத்தகைய வேளையில் இறைவன் மௌனம் சாதித்திருந்தால்தான் நீங்கள் ஆச்சரியப்படுவதற்கு காரணம்

இருந்திருக்கும். மேலும் இறைவன் இஸ்லாம் மார்க்கத்தை பாதுகாத்து அதை எப்போதும் ஆதரிப்பதாகவும் இவ்வுலகில் அதன் வலிமை, கீர்த்தி, செல்வாக்கு ஆகியவை ஒருபோதும் மறைந்து போகாமல் பார்த்துக் கொள்வதாகவும் வாக்களித்திருக்கின்றான். அத்தகைய இறைவன் எவ்வித அசைவுமற்றவனாகி இருள் மிகுந்த இந்நேரத்தில் எதுவுமே செய்யாதிருப்பானா? முஸ்லிம்களுக்கு நேர்ந்துள்ள உட்புற வெளிப்புற அபாயங்களில் கருத்து செலுத்த வேண்டிய பெருந் தேவை ஏற்பட்டுள்ள இந்நேரத்தில் எதுவுமே செய்யாது இருந்து விட்டால்தான் நாம் மிகுந்த ஆச்சரியத்திற் குள்ளாக வேண்டியிருக்கும். எவ்வளவு தெளிவாகக் கூற முடியுமோ அவ்வளவு தெளிவான வார்த்தைகளில் சொல்லப்பட்ட, அவனது சொந்த வர்த்தைகளாலேயே உதவி செய்வதாக அளிக்கப்பட்ட வாக்குறுதியை அவன் மறந்துவிட்டால்தான் நாம் மிகுந்த ஆச்சரியத்திற்குள்ளாக வேண்டியிருக்கும். புனித நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் சொற்களில் அடங்கியுள்ள வாக்குறுதி நிறைவேற்றப்படாமல் போய்விட்டால்தான் வியப்படைவதற்குரிய சந்தர்ப்பம் நமக்குக் கிட்டியிருக்கும். ஒவ்வொரு நூற்றாண்டின் தொடக்கத்திலும் அவனது மார்க்கத்தைப் புதுப்பிப்பதற்காக இறைவன் தன் அடியார்களில் ஒருவரை எழுப்பிக் கொண்டிருப்பான் என ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அருளியுள்ளார்கள். (✸ அடிக்குறிப்பு-1 காண்க)

✸**அடிக்குறிப்பு**-1 இலாபகரமான ஒரு வியாபாரமாக அல்லது ஒரு வழக்கமாகக் கொண்டு திருக்குர்ஆன் மொழி பெயர்ப்புகளைப் பிரசுரிப்பதும், ஹதீது புத்தகங்களையும் இதர நூற்களையும் உருது அல்லது பாரசீக மொழியில் மொழி பெயர்த்து மக்கள் மத்தியில் சுற்றுக்கு விடுவதும் பித்அத் (புதுமை) ஆன உயிரற்ற பழக்க வழக்கங்களைக் கற்பிப்பதும் நம் காலத்தில் ஒரு வாடிக்கை ஆகிவிட்டது. இவற்றை உண்மையாக, முழுமையாக தஜ்தீதே தீன் (மார்க்கத்தை புதுப்பித்தல்) என்று கூற முடியாது. இவற்றில் கடைசியாக குறிப்பிட்டது அதாவது பித்அத்தான உயிரற்ற பழக்க வழக்கங்களைக் கற்பிப்பது சாத்தானியக் கொள்கைகளை வளர்ப்பதற்குச் சமமாகும். இது உண்மையான மார்க்கத்திற்குத் தலைகீழானதாகும். திருக்குர்ஆனையும் ஆதாரப்பூர்வமான ஹதீதுகளையும் பிரசுரித்து அவற்றை மக்கள்





எனவே, நான் கூறுவனவற்றில் ஆச்சரியமடைவதற்கு ஒன்றுமில்லை. அதற்கு மாறாக இறைவனுக்கு நன்றி செலுத்துவதற்கு- ஓர் அரிய சந்தர்ப்பமாகவே இது அமைந்திருக்கிறது. நம்பிக்கை மற்றும் நம்பிக்கையின் உறுதிப்பாட்டைப் புதுப்பிப்பதற்கு உரிய நேரமாகவே இது வாய்த்துள்ளது. இறைவன் தனது அருளினாலும் கருணையினாலும் தன்னுடைய வாக்குறுதியை நிறைவேற்றி விட்டான் என்றுதான் சொல்ல வேண்டும். தனது தூதரின் முன்னறிவிப்பில் ஒரு நிமிடம் கூட தாமதிக்க விடவில்லை. அவனது திருத்தூதர் அருளிய தீர்க்க தரிசனம் மட்டுமல்ல, ஆயிரக்கணக்கான இதர தீர்க்க தரிசனங்கள்- அதாவது இதர அற்புதங்கள்- நிறைவேறுவதற்குரிய கதவு கூடத் திறக்கப்பட்டிருக்கிறது. எனவே, உங்களுக்கு நம்பிக்கை இருக்கு மாயின் நீங்கள் இறைவனுக்கு நன்றி செலுத்த வேண்டும். உங்களுடைய நன்றியறிதலைத் தெரிவிக்கும் முகமாக நீங்கள் மீண்டும் மீண்டும் அவன் முன்னால் சிரம் தாழ்த்திப் பணிய வேண்டும். இதுவே உங்களுடைய முன்னோர்கள் ஆவலோடு எதிர்பார்த்த காலமாகும். ஆனால், அப்போது இது வரவில்லை. பற்பல தலைமுறைகள் கடந்து சென்றுவிட்டன. இது வரவில்லை. அந்த காலத்தை நீங்கள் பெற்றுள்ளீர்கள். நீங்கள் இதற்கு மதிப்பளிப்பதும் மதிப்பளிக்காமலிருப்பதும், இதிலிருந்து பயன்

மத்தியில் சுற்றுக்கு விடுவது சந்தேகத்திற்கிடமின்றி பாராட்டுதலுக்கு உரியதுதான். இக்காரியம் மிகுந்த கவனத்துடனும், அக்கறையுடனும், ஒழுங்கு முறைப்படியான தேவைகள் யாவற்றிலும் கவனம் செலுத்திச் செய்யப்பட வேண்டும். இருப்பினும் இதனை உண்மையான சேவையென்று மதிப்பிட முடியாதிருக்கிறது. உண்மையான ஊழியம் என்பது உள்ளத்தின் ஒரு பக்குவப்பட்ட நிலையிலிருந்து- திருக்குர்ஆன், ஹதீது ஆகியவற்றின் தாக்கத்தை உருவாக்கும் சக்தியை ஏற்றுக்கொள்ளும் நிலையிலிருந்து பெருக்கெடுத்து வருவதாகும்.

இது இல்லாமல், திருக்குர்ஆன், ஹதீது ஆகியவற்றுக்குச் செய்யும் ஊழியம் என்பது உயிரற்றது; பொருளற்றது. இத்தகைய உயிரற்ற ஊழியத்திற்கு சிறிது கல்வியறிவுதான் தேவை. அத்தகைய ஊழியம் நாம் எப்போதும் அறிந்திருப்பதுதான். உண்மையான தஜ்தீதுக்கும் (மார்க்கத்தைப் புதுப்பித்தல் என்பதற்கும்)இதற்கும் எவ்வித சம்பந்தமும்

பெறுவதும் பயன் பெறாமலிருப்பதும் உங்கள் கைகளில்தான் இருக்கின்றது.

நான் இவ்விடத்தில் ஒன்றை மீண்டும் மீண்டும் கூறியாக வேண்டும். மார்க்கத்தைத் திரும்பக் கொண்டு வருவதற்காக, மக்களின் உள்ளங்களில் மார்க்கத்தை நிலைநிறுத்துவதற்காக வாக்களிக்கப்பட்ட வழிகாட்டி நானே என்று நான் திரும்பத் திரும்பக் கூறிவருவதை யாரும் தடுத்து நிறுத்திவிட முடியாது. கலீமுல்லாஹ் என்று மக்களால் அழைக்கப்பட்ட இறைவனின் அடியாரைப் பின்பற்றும்படி என்னுடைய மூலப்பிரதியானவர் அனுப்பப்பட்டிருந்தார். என்னுடைய மூலப்பிரதியானவரைப் போலவே நானும் துல்லியமாக அனுப்பப்பட்டிருக்கிறேன். ஏரோதின் காலத்தில் யாருடைய ஆன்மா துன்பங்களுக்குள்ளாகி இறுதியில் பரலோகத்திற்கு உயர்த்தப்பட்டதோ அவரைப்

---

இல்லை. இறைவனின் கண்களில் இது செத்துக் காய்ந்து உலர்ந்துபோன எலும்புகளைச் சேர்த்து வியாபாரம் செய்வதாக இருக்குமேயன்றி வேறு எவ்வழியிலும் அதைவிட அதிகமாக இராது. இறைவன் கூறுவதாவது:

لِمَ تَقُولُونَ مَا لَا تَفْعَلُونَ كَبُرَ مَقْتًا عِنْدَ اللّٰهِ اَنْ تَقُولُوا مَا لَا تَفْعَلُونَ

நம்பிக்கை கொண்டவர்களே! நீங்கள் செய்யாத செயல்களை (பிறர் செய்யுமாறு) ஏன் கூறுகிறீர்கள்? நீங்கள் செய்யாததைக் நீங்கள் கூறுவது அல்லாஹ்வின் பார்வையில் மிக்க வெறுக்கத்தக்கதாக இருக்கிறது. (61: 3,4)

يَا اَيُّهَا الَّذِيْنَ اٰمَنُوْا عَلَيْكُمْ اَنْفُسَكُمْ لَا يَضُرُّكُمْ مَّنْ ضَلَّ اِذَا اهْتَدَيْتُمْ

நம்பிக்கை கொண்டவர்களே! நீங்கள் உங்களைக் காப்பாற்றிக் கொள்ளுங்கள். நீங்கள் நேரான வழியில் சென்றால், வழி தவறிய எவருடைய தீங்கும் உங்களைப் பாதிக்காது. (5:106)

தன்னளவில் குருடனாக இருக்கும் ஒருவன் மற்றக் குருடர்களுக்கு வழிகாட்ட முடியாது. தானே குஷ்டரோகியாய் இருப்பவன் மற்றவர்களின் உடம்பிலிருந்து அந்த நோயை அப்புறப்படுத்த முடியாது. தஜ்தீது என்பது உண்மையான சீர்த்திருத்தத்தில் பேரார்வம் கொள்வதாகும். தெய்வீக வெளிப்பாடு என்னும் வரம் அருளப் பெற்ற ஒருவருடைய





போன்றவராக நான் வந்திருக்கிறேன். இரண்டாவது கலீம் முதலாவது கலீமை விடப் பெரியவரும் நபிமார்களின் தலைவரும் ஆவார். அத்தகைய இரண்டாவது கலீமின் வருகைக்குப் பிறகு என்னுடைய வருகை தவிர்க்க முடியாததாகிவிட்டது. தமது காலத்திலிருந்த ஃபிர்அவ்ன்களைத் தோற்கடித்து அவர்களை அவமானத்திற் குள்ளாக்கவே இந்த இரண்டாவது கலீம் வந்தார். அன்னாரைக் குறித்தே புனித திருமறையில் இவ்வாறு கூறப்பட்டுள்ளது:

اِنَّا اَرْسَلْنَا اِلَيْكُمْ رَسُوْلًا شَاهِدًا عَلَيْكُمْ كَمَا اَرْسَلْنَا اِلٰى فِرْعَوْنَ رَسُوْلًا

நாம் ஃபிர்அவ்னுக்கு அனுப்பிய ரசூலைப்போன்ற ஒரு ரசூலை சாட்சியாக உங்களுக்கும் அனுப்பியுள்ளோம். (73:16)

இதன்படி முதல் கலீமை (மூஸாவை)ப் போன்றவரும் ஆனால் ஆன்மீகப் பதவியில் அவரை விட உன்னதமானவரும் ஆகிய

---

உள்ளத்தில் முதன் முதலில் அது இறங்கி ஒரு புனித நிலையில் அங்கிருந்து ஊற்றெடுத்து ஓடுகிறது; அவரிடமிருந்து புறப்பட்டுச் சென்று மற்றவர்களையும் அடைகிறது. சீர்திருத்தும் இந்த ஆற்றலை இறைவனிடமிருந்து பெற்றுக் கொண்டவர்கள் செத்த எலும்புகளைச் சேர்த்து வியாபாரம் செய்வதில்லை. மாறாக அவர்கள் உண்மையிலேயே ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் உதவியாளர்களாகவும், ஆன்மீகமான முறையில் அன்னாரின் கலீஃபாக்களாகவும் இருக்கிறார்கள். நபிமார்கள், ரசூல்மார்களுக்கு வழங்கப்படும் எல்லா அருட்கொடைகளுக்கும் அல்லாஹ் அவர்களை வாரிசாக்கி விடுகின்றான். அவர்கள் சொல்வதெல்லாம் எந்த முயற்சியின்றியும் தட்டுத்தடங்கலின்றியும் அவர்களின் உள்ளத்திலிருந்து வருகிறது.

அவர்கள் தமது வாய்ச் சொல்லால் மட்டும் போதிப்பதில்லை. சொல், செயல் இரண்டாலும் போதிக்கிறார்கள். இறைவனிடமிருந்து வெளியாகும் வார்த்தைகள் அவர்களுடைய உள்ளங்களுக்கு ஒளி யூட்டுகிறது. கஷ்ட காலங்களில் பரிசுத்த ஆவியிடமிருந்து அவர்கள் வழிகாட்டலைப் பெறுகிறார்கள். அவர்களின் சொல்லிலும், நடத்தை யிலும் உலகத்தை வணங்குதல் என்ற கலப்படம் இருப்பதில்லை. அவர்கள், உள்ளும் புறமும், மாசுமறுவற்ற தூய்மையுடன் திகழ் கிறார்கள். அவர்கள் இறைவன் பக்கமே முழுவதும் திரும்பியவர் களாயிருக்கிறார்கள். (அடிக்குறிப்பு 1 முடிவுற்றது.)

இரண்டாவது கலீமுக்கும் (ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கும்) முதல் கலீமுக்கு அனுப்பப்பட்டவரைப் போன்ற ஒரு மஸீஹ் வாக்களிக்கப்பட்டிருந்தது. இந்த இரண்டாவது மஸீஹ், வலிமையிலும், பண்பிலும் முதலாவது மஸீஹை ஒத்தவராக வந்திருக்கின்றார். முதல் மஸீஹின் காலத்தை ஒத்த ஒரு காலத்திலேயே இரண்டாவது மஸீஹும் தோன்றியிருக்கின்றார்.

முதலாவது மஸீஹ் தமது கலீமுக்கு பின்னால் எவ்வளவு கால இடைவெளிக்குப் பிறகு தோன்றினாரோ அவ்வளவு காலத்திற்குப் பிறகு- அதாவது இரண்டாவது கலீமுக்குப் பின்னால் 1400 ஆம் வருடத்தில் - இரண்டாவது மஸீஹ் தோன்றியிருக்கிறார். தீர்க்கதரிசனங்களில் அன்னாரது வருகையானது வானத்திலிருந்து இறங்கி வரும் வருகையாக வருணிக்கப்பட்டுள்ளது. ஆனால், இது ஓர் ஆன்மீக வருகையாகும். திருமறைச் சொல் வழக்கில், பூரணத்துவத்தை அடைபவர்கள் வானத்திற்கு எழும்பிச் செல்வதாக கூறப்படும். அத்தகையோர் தமது மக்களைச் சீர்திருத்துவதற்காக முன் வரும் போது வானத்திலிருந்து இறங்குவதாகக் கூறலாம். எல்லா முக்கிய அமைப்பிலும் முதலாவது மஸீஹின் - அதாவது மர்யமின் மகனாகிய மஸீஹின் - காலத்தை ஒத்திருக்கின்ற ஒரு காலத்தில், புரிந்து கொள்பவர்களுக்கு அது ஓர் அடையாளமாக இருக்க வேண்டும் என்பதற்காக அவ்வாறு நடந்தது.(✸அடிக்குறிப்பு 2 காண்க )

இந்நிலையில் மறுப்பதற்கு அவசரப் படாதிருப்பது ஒவ்வொருவரின் பொறுப்பாகும்; அவசரப்பட்டு மறுத்துத்

✸ அடிக்குறிப்பு 2: வெளிப்புற வடிவங்களுக்கு முக்கியத்துவம் அளிப்பதும் உள்ளுரையும் ஆன்மா உண்மையான பக்தி ஆகியவற்றில் கருத்தற்று இருப்பதும் உச்சநிலை எய்தியிருக்கும் காலமே நம் காலமாகும். அவ்விதமே, நேர்மை, நியாயம் ஆகியவை காணாமற்போயிருப்பதும் உண்மை, ஒழுக்கம், தூய்மை ஆகியவற்றை கைவிட்டிருப்பதும் நம் காலத்தில் உச்சநிலையை அடைந்துள்ளன. இதே விதமே செல்வங்களின் மீது பேராசையும் இவ்வுலகின் பேரில் நேசமும்,மர்யத்தின் மகனாகிய இயேசுவின் காலத்திய யூதர்களிடையே தடையின்றிப் பரவியிருந்ததைப் போன்றே இக்கேடுகள் இன்றைய தினமும் பரவியுள்ளன. இயேசு தோன்றிய காலத்தில் யூதர்கள் உண்மையான நல்லொழுக்கத்தை முற்றிலும்





தள்ளுவதென்றால் அது இறைவனிடம் சவால் விடுப்பதே ஆகும். இருள் நிறைந்த எண்ணங்களிலும் பழைய கற்பனைகளிலும் மூழ்கிக் கிடப்பவர்கள் இதை ஏற்றுக் கொள்ள மாட்டார்கள். ஆனால் அவர்களின் கெடுதிகளையும், தவறுகளையும் இறைவன் அவர்களுக்குத் தெளிவாக எடுத்துக்காட்டும் நேரம் நெருங்கிவிட்டது. இறைவன் அருளியிருப்பதாவது:

دنیا میں ایک نذیر آیا۔ پر دنیا نے اس کو قبول
نہ کیا لیکن خدا اُسے قبول کریگا اور بڑے زور
آور حملوں سے اس کی سچائی ظاہر کر دیگا۔
میں تجھے اسقدر برکت دوں گا کہ بادشاہ
تیرے کپڑوں سے برکت ڈھونڈیں گے۔

(الوصیت صفحہ 5 روحانی خزائن جلد 20 صفحہ 303)

அறியாதவர்களாக இருந்தனர். அவர்களின் வாழ்வில் நல்லொழுக்கத்தின் இடத்தை சம்பிரதாயங்களும் பயனற்ற பழக்க வழக்கங்களும் பிடித்துக் கொண்டிருந்தன. நாணயமும், உண்மையான நடத்தையும் உளத்தூய்மையும், நேர்மை, நியாய உணர்வும் அவர்களிடமிருந்து முற்றிலும் மறைந்து போயிருந்தன. உண்மையான இறைவணக்கம் என்ற இடத்தை பல்வேறு படைப்பின வணக்கங்கள் பிடித்துக் கொண்டன.

இதைப்போன்றே இந்தக் கேடுகள் யாவும் ஒட்டு மொத்தமாக நம்முடைய காலத்தில் தலைதூக்கியிருக்கின்றன. நல்ல விஷயங்கள் ஏற்றுக் கொள்ளப் படாதிருப்பதுடன் நாம் செலுத்த வேண்டிய நன்றியுணர்வும், பணிவும் அவற்றிற்குத் தரப்படவில்லை. தீய விஷயங்களில் நாம் காட்டவேண்டிய வெறுப்பு, அருவருப்பு இல்லாமற்போய்விட்டது. இறைவனின் முக்கியமான கட்டளைகள் சுய விளக்கங்களின் மூலமாக தூர ஒதுக்கப்படுகின்றன.

நம் காலத்திய பெரும்பாலான ஆலிம்கள் அந்தக் காலத்து வேதபாரகர்களுக்கும் பரிசேயர்களுக்கும் எந்த வகையிலும் பிற்பட்டவர்கள்

உலகில் ஓர் எச்சரிப்பவர் தோன்றினார் ; ஆனால், உலகம் அவரை ஏற்றுக்கொள்ளவில்லை. ஆயினும் இறைவன் அவரை ஏற்றுக் கொள்வான். மேலும் வல்லமை மிக்க தாக்குதல்களினால் அவரது உண்மையை வெளிப்படுத்துவான்.

இவை மனிதனின் வார்த்தைகள் அல்ல. இறைவனின் அறிவிப்பும் கம்பீரமான இறைவனின் வார்த்தைகளுமாகும்.இந்த முன்னறிவிப்புகளில் கூறப்பட்ட வல்லமை மிக்க தாக்குதல்கள் நடைபெறும் நாட்கள் மிக அருகில் உள்ளன என்று நான் நம்புகிறேன். ஆனால், இந்தத் தாக்குதல்கள் இவ்வுலகக் கருவிகளாலோ, வாள்கள், துப்பாக்கிகளாலோ நடத்தப் படுவதில்லை; அவற்றின் தேவையுமிருக்காது. மாறாக, ஆன்மீக ஆயுதங்களுடன் அது நடக்கும். இறைவனின் உதவி இறங்கும்.

---

அல்ல. இவர்கள் ஓர் ஒட்டகத்தை விழுங்கிவிட்டு ஒரு கொசுவின் விஷயத்தில் பெரும்பாடுபடுவார்கள். இறைவனின் ராஜ்யத்தை இவர்கள் மக்களுக்கு முன்னால் அடைத்துவிடுகிறார்கள். அதில் இவர்களும் நுழைவதில்லை. மற்றவர்களையும் நுழைய விடுவது இல்லை. நீண்டதொரு நேரத்தை இவர்கள் நமாஸில் (தினசரி தொழுகையில்) செலவழிக்கவே செய்கிறார்கள். ஆனால், அவர்களின் உள்ளங்களில் உண்மையான இறைவனைப் பற்றிய அன்பும், அவனது மாண்பையும் பெருமையையும் பற்றிய உணர்வும் அற்றுப் போயிருக்கிறது. மேடைகளிலிருந்து அவர்கள் வழங்கும் சொற்பொழிவுகள் மனிதர்களின் கண்களிலிருந்து கண்ணீரை வரச் செய்யும். ஆனால், அவர்களின் சொற்பொழிவுகளுக்கும் அவர்களின் செயல்களுக்கும் எவ்வித பொருத்தமும் இல்லை. அவர்களின் உள்ளங்கள் கலகத்தையும், தீய எண்ணங்களையும் கொண்டிருந்தும் கண்ணீர் வடிக்கும் திறமை கொண்டிருக்கும் அவர்களின் கண்கள் நூதனமானவைதான்! அவர்களின் நாவுகளும் நூதனமானவையாக இருக்கின்றன. அவை கடும் அந்நியத்தன்மை கொண்டவையாக இருந்தும் உள்ளங்களை அடையாளம் கண்டுகொண்டதாக பீற்றுகின்றன. பிரபலமான அந்த யூத குணம் அவர்களிடத்தில் பெரிதும் குடி கொண்டிருக்கிறது.

இறைபக்தியும், இறை அச்சமும் வீழ்ந்து கொண்டிருக்கின்றன. உண்மையான நம்பிக்கையின்மை, மக்களை உணர்ச்சியற்றவர்களாக்கி இறைவனைப் பற்றிய எண்ணமற்றவர்களாக்கிவிட்டது. இவ்வுலக நேசமானது இறை நேசத்தின் இடத்தைப் பிடித்துக்கொண்டுவிட்டது. இவை யாவும் அப்படியே நடக்க வேண்டியிருந்தன. ஏனெனில், நமது தலைவரும்





யூதர்களோடு கடுமையான ஒரு யுத்தம் உண்டாகும். இந்த யூதர்கள் யார்? வெளிப்புறத் தோற்றங்களை மட்டுமே மதித்து மரியாதை செய்பவர்களே இந்த யூதர்கள் ஆவர். இவர்களே ஆதி காலத்து யூதர்களை முழு அளவில் ஒத்திருக்கிறார்கள்; அல்லாஹ்வின் விண்ணுலக வாள் அவர்களை வெட்டிச் சாய்த்துவிடும். யூதப் பண்பு முறியடிக்கப்படும்.மேலும் ஒவ்வொரு உண்மையை மறைக்கின்ற, உலகத்தை வணங்குகின்ற, ஆன்மீகக் கண்ணை இழந்துவிட்ட ஒற்றைக்கண் தஜ்ஜாலும் முறியடிக்கக் கூடிய சான்றுகள் என்னும் வாளினால் கொல்லப்படுவான். உண்மைக்கு வெற்றி கிடைக்கும்.

இஸ்லாத்திற்காக ஒரு புத்தம் புதிய ஒளிமிக்க நாள், முன்பு மலர்ந்தது போன்றே மலரும். இஸ்லாமிய சூரியன் முன்பு உதித்தது போன்றே முழுப் பிரகாசத்துடன் உதயமாகும். ஆனால், இது

---

எஜமானருமான ஹஸ்ரத் முஹம்மது (ஸல்) அவர்கள் தமது முன்னறிவிப்பில், ஒரு காலம் வரும். அப்போது இந்த உம்மத்து (சமுதாயம்) யூதர்களைப் பெருமளவில் ஒத்துள்ள குணங்களைப் பெற்றிருப்பார்கள் என்றும், யூதர்கள் தமது காலத்தில் செய்த ஒவ்வொரு காரியத்தையும் செய்து கொண்டிருப்பார்கள் என்றும் அருளியுள்ளார்கள். எந்த அளவுக்கென்றால், யூதர்கள் ஒரு எலியின் பொந்தில் நுழைவதற்கு முயன்றிருந்தால் இந்த உம்மத்திலும் அதே காரியத்தைச் செய்வதற்கு முயலும் மனிதர்கள் இருப்பார்கள். அத்தகையதொரு காலத்தில் பாரசீக இனத்தைச் சேர்ந்த ஒருவர் ஈமானை போதிப்பதற்காகத் தோன்றுவார் என்று பெருமானாரின் முன்னறிவிப்பு தொடர்ந்து கூறுகிறது. ஈமான் சுரய்யா (கார்த்திகை) நட்சத்திரத்தளவில் போய்விட்டால், இந்த பாரசீக வழித் தோன்றல் அதனைப் பூமிக்குக் கொண்டு வருவார். இது புனித நபிகள் பெருமானார் (ஸல்) அவர்களின் முன்னறிவிப்பாகும்.

இதன் பொருள், இறை வெளிப்பாட்டின் மூலம் எனக்குத் தெளிவாக்கப்பட்டிருக்கிறது. அதன் விளக்கங்கள் யாவும் எனக்குத் தெளிவாக எடுத்துக் காட்டப்பட்டு விட்டன. இதன் பொருள் யாதெனில், யூதர்கள் தம் மதத்தில் வலிமை குன்றியவர்களாய்ப் போன காலத்தில், பல்வேறு விதமான தீமைகளை அவர்கள் அனுபவிக்க நேர்ந்த காலத்தில் அதாவது விசுவாசம் குன்றியிருத்தல் என்ற நோய் பரவியிருந்த காலத்தில் மோசேயிக்கு 1400 வருடங்களுக்குப் பிறகு மர்யத்தின் மகனான மஸீஹ் அவர்களின் மதத்திற்கு புத்துயிரூட்டும் ஒருவராக வந்து தோன்றினார். ஆகையால் புனித நபிகள் பெருமானார் (ஸல்) அவர்களின் வருகைக்கு

உடனடியாக நடக்காது. கடின உழைப்புக்கு நம்மை அர்ப்பணித்துக் கொள்வதன் மூலமும், நம்முடைய உயிரையே தியாகம் செய்வதன் மூலமும், நமது ஓய்வையும் அமைதியையும் தியாகம் செய்வதன் மூலமும், இஸ்லாத்தின் கௌரவத்திற்காக எல்லா இழிவுகளையும் நாம் ஏற்றுக்கொள்வதன் மூலமும், நாம் நம்முடைய தகுதியை நிரூபிக்காத வரையில் இது நடைபெற முடியாது. ஆயினும் இது தவிர்க்க முடியாத தியாகங்களாகும்.

இஸ்லாம் உயிர் பெறுவதற்கு, நம்மிடமிருந்து அது ஒரு பரிகாரத்தை வேண்டுகிறது. அது என்ன? அது அதன் வழியிலேயே நாம் மரணிப்பதாகும். இந்தத் தியாகத்தின் மீதுதான் இஸ்லாத்தின் வாழ்வு, முஸ்லிம்களின் வாழ்வு, உயிருள்ள இறைவனின் தோற்றம் யாவும் சார்ந்து நிற்கின்றன. இதன் மறு பெயர்தான் இஸ்லாம். இந்த இஸ்லாத்தை உயிர்ப்பிக்கவே இறைவன் இப்போது விரும்புகிறான்.

---

ஏறத்தாழ 1400 ஆண்டுகளுக்குப் பிறகு, யூதர்கள் தமது காலத்தில் எந்தெந்தத் தீமைகளை அனுபவித்தார்களோ அதே கேடுகளை இந்த உம்மத்தும் (முஸ்லிம் சமுதாயம்) அனுபவிக்கும் படி ஆகியிருக்கிறது. அவர்களைக் குறித்துக் கூறப்பட்ட முன்னறிவிப்பு நிறைவேறித் தீரும்படியே இவ்வாறு நேர்ந்தது. எனவே இந்த உம்மத்துக்குக்கூட இவர்களின் மார்க்கத்தை புத்துயிரூட்டும் பொருட்டு முதல் மஸீஹை ஒத்த ஒரு மஸீஹ் எழுப்பப்பட்டிருக்கிறார். சர்வ வல்லமையுள்ள இறைவன் தனது அளவற்ற வல்லமையாலும் கருணையாலும் இதனைச் செய்திருக்கின்றான். வரவிருந்த மஸீஹ் இவர்தான். விரும்பினால் நீங்கள் அவரை ஏற்றுக்கொள்ளுங்கள். கேட்பதற்குக் காதுள்ளவர்கள் கேட்கட்டும். இது சர்வ வல்லமையுள்ள இறைவனின் வேலையாகும். இது மக்களின் கண்களில் ஆச்சரியம் மிக்கதாக இருக்கிறது. எவராவது இதை மறுக்கின்றார் என்றால், முன்னர் வந்த உண்மையாளர்களும் மறுக்கப்பட்டனர் என்பதை நினைவில் கொள்ளுங்கள். யோவானை அதாவது ஸகரிய்யாவின் மகனாகிய யஹ்யாவை யூதர்கள் ஒருபோதும் ஏற்றுக் கொள்ளவில்லை. ஆனால் ஆகாயத்திற்கு உயர்த்தப்பட்டவர் இவரே என்றும், ஆகாயத்திலிருந்து மீண்டும் வருவார் என்று யாரைக் குறித்து புனித வேத நூற்களில் முன்னறிவிக்கப்பட்டிருந்ததோ அவரே இவர் என்று சொல்லி, அவரது உண்மைக்கு மஸீஹ் (இயேசு) சாட்சி கூறினார். இறைவன் எப்பொழுதும் உருவகங்களை பயன்படுத்துகிறான். வலிமையிலும் பண்பிலும் திறமையிலும் ஒருவரைப் போலவே இருக்கும் இன்னொருவரை அந்த ஒருவரின் பெயரால் அழைப்பது அவனளவில்





இப்பெரும் மாற்றத்தை உருவாக்குவதற்காக இறைவனே ஒரு மகத்தான செயல் திட்டத்தை- எல்லாவகைகளிலும் திறன் மிக்கதாயும் போதிய அளவுள்ளதாயும் உள்ள ஒரு செயல் திட்டத்தை உருவாக்க வேண்டியது அவசியமாயிற்று. அறிவாற்றலும் வல்லமையும் மிக்க அல்லாஹ் இந்த எளியவனை மனித குலத்தைச் சீர்திருத்தும் இந்தப் பணியை மேற்கொள்வதற்கு அனுப்பி வைத்ததன் மூலம் இந்தச் செயல் திட்டத்தை நடைமுறைப்படுத்தி அருளினான்.

அவன் இந்தச் செயல் திட்டத்தைப் பற்பல பிரிவுகளாகப் பிரித்திருக்கிறான். இவை எல்லாம் உண்மையை எங்கும் எடுத்துரைப்பதற்கும், இஸ்லாத்தைப் பரப்புவதற்குமே தேவைப்பட்டன. இப்பிரிவுகளிலே ஒரு துறை, புத்தகங்கள் தயாரித்தலைப் பற்றியது. நான் செய்து முடிக்கும்படி இந்த

---

சாதாரண விஷயமாகும். குணத்தில் ஆபிரகாமை ஒத்திருக்கும் ஒருவர் இறைவனளவில் ஆபிரகாமாகவே இருக்கிறார். ஃபாரூக் ஆகிய உமரைப் போன்ற ஒருவர் அவனுடைய கருத்துப்படி உமரே ஃபாரூக்காகவே இருக்கிறார்.

இறைவன் யாரிடம் பேசுகிறானோ அந்த முஹத்தஸீன்களை இந்த உம்மத்து பெற்றிருந்தால், அத்தகைய முஹத்தஸ் உமர் ஆவார் என்ற நபிமொழியை நீங்கள் படிக்கவில்லையா? எனவே, உமருக்குப் பிறகு முஹத்தஸிய்யத் முற்றுப் பெற்றுவிட்டது என்று நீங்கள் கூறுவீர்களா? இல்லவே இல்லை. அந்த ஹதீதின் பொருள் என்னவென்றால் முஹத்தஸ் தோன்றக்கூடிய காலம் வரும்போது, உணர்விலும் வலிமையிலும் ஹஸ்ரத் உமரைப் போன்று இருப்பவர் யாராயினும் அவர் ஒரு முஹத்தஸாகவே இருப்பார். இந்தப் பொருளில் தான் எளியவனாகிய நான் ஒருமுறை இந்த இறை வெளிப்பாட்டைப் பெற்றேன்:

فيك مادة فاروقية

நீர் உமருடைய குணங்களை அருளப்பெற்றவராக இருக்கின்றீர்.

குணத்தில் மற்ற புனித மகான்களைப் போன்றே எளியவனாகிய நானும் இருக்கிறேன். இவ்விஷயம் என்னுடைய பராஹீனே அஹ்மதிய்யாவில் விளக்கமாக எடுத்துக் கூறப்பட்டுள்ளது. இந்த இயல்பான ஒப்புமையின் காரணமாகவே இந்த எளியவன் சிலுவை கொள்கை தூள் தூளாக்கப்படும் பொருட்டு (ஈசா) மஸீஹின் பெயரில் அனுப்பப்பட்டிருக்கிறேன். எனவே

எளியவனிடம் ஒப்படைக்கப்பட்ட பணிகளில் இதுவும் ஒன்று. இந்தப் பணியைச் செய்து முடிப்பதற்காக எனக்கு சிறப்பான ஞானம் அருளப்பட்டிருக்கிறது. இந்த ஞானம் மனிதனுடைய தகுதிக்கு உட்பட்டதல்ல. இதை இறைவனின் உதவியுடன்தான் பெற்றுக் கொள்ள முடியும். இவ்வுதவி மனிதனுடைய முயற்சியினால் வருவதன்று. இது பரிசுத்த ஆவியின் வாயிலாகவே வருகிறது. பரிசுத்த ஆவியினால் கிடைக்கும் போதனை எம்முடைய கஷ்டங்களைக் கரைத்துவிட்டது.

இச்செயல் திட்டத்தின் **இரண்டாவது பிரிவு** பிரசுரங்களை வெளியிடுதல் சம்பந்தப்பட்டதாகும். இது இறை கட்டளையினால் சான்றை முழுமைப்படுத்துவதற்காக தொடங்கப்பட்டுள்ளது. இஸ்லாத்தின் உண்மைக்கான சான்றுகளை மற்ற சமுதாயங்கள் மத்தியில் நிரூபித்துக் காட்டுவதற்காக 20,000க்கும் மேற்பட்ட

நான் சிலுவையை முறிப்பதற்காகவும், பன்றிகளைக் கொல்வதற்காகவும் அனுப்பப் பட்டுள்ளேன்.

என்னுடைய வலது புறத்திலும் இடது புறத்திலும் தூய வானவர்களோடு நான் ஆகாயத்திலிருந்து வந்திருக்கிறேன். அத்துடன் எனக்கு ஹஸ்ரத் (ஈஸா) மஸீஹின் இயல்புடன் ஒரு குறிப்பிட்ட ஒப்புமை இருக்கிறது. என்னுடன் இருக்கும் என் இறைவன் என் வேலைகளை நிறைவேற்றுவதற்காக ஒவ்வொரு நல்ல உள்ளத்திலும் அந்த வானவர்களை நுழைப்பான் -ஏன்- நுழைத்துக் கொண்டிருக்கின்றான். இது என்னுடைய வருகையின் நோக்கத்தை நிறைவேற்றி வைப்பதற்கே. நான் ஏதும் பேசா விட்டாலும், எழுதா விட்டாலும் கூட என்னோடு இறங்கியுள்ள வானவர்கள் தம் வேலையைத் தொடர்ந்து செய்வார்கள். சிலுவையை உடைத்து மனித வணக்கமென்னும் சிலையை உடைத்தெறிய அவர்கள் தமது கையிலே அவர்களுக்கு கொடுக்கப்பட்ட கட்டியக்கோல்களை வைத்திருக்கிறார்கள். வானவர்கள் ஆகாயத்திலிருந்து இறங்குகிறார்கள் என்பதன் பொருள் என்ன? என்று அறியாமையால் சிலர் கேட்கலாம். மக்கள் கூட்டத்தைச் சீர்திருத்தி அவர்களை மார்க்கத்தின் பக்கம் மீண்டும் திருப்புவதற்காக ஒரு இறைதூதர் அல்லது நபி அல்லது முஹத்தஸ் அல்லது ஒருவர் ஆகாயத்திலிருந்து இறங்கும்போது, வானவர்களும் அவரோடு சேர்ந்து இறங்குகிறார்கள் என்பதை அவர்கள் அறிந்து கொள்ளட்டும். இந்த வானவர்கள் மனித இதயங்களில்- விருப்பத்துடன் ஆயத்தமாக இருக்கும் இதயங்களில்- நுழைகிறார்கள். நற்பண்பின் பக்கம் அவர்களை





பிரசுரங்கள் பிரசுரிக்கப்பட்டுவிட்டன. எதிர் காலத் தேவைக்குத் தகுந்தாற்போல இப்பணி தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கும்.

இந்தச் செயல் திட்டத்தின் **மூன்றாவது பிரிவு**, பார்வையாளர்கள், விசாரித்தறிபவர்கள், உண்மையைத் தேடுவதற்காகவோ, வேறு காரியங்களுக்காகவோ பயணம் செய்து என்னிடம் வந்து சேருபவர்கள் ஆகியோரைப் பற்றியது. இந்தச் செயல்திட்டத்தைப் பற்றி அவர்கள் கேள்விப்பட்டிருக்கிறார்கள். ஆதலால் அவர்கள் என்னிடம் வருகிறார்கள். இந்தப் பிரிவின் வேலையும் தொடர்ந்து வளர்ந்து கொண்டேயிருக்கிறது. பார்வையாளர்களின் எண்ணிக்கை காலத்திற்குக் காலம் வேறுபடுகிறது என்பதில் ஐயமில்லை. சில குறிப்பிட்ட தினங்களில் அதிகமில்லை. ஆனால் வேறு சில தினங்களில் மிக அதிகமாக இருக்கிறது. கடந்த ஏழு ஆண்டுகளில்

ஈர்க்கிறார்கள். இறைமறுப்பும், தவறான வழிகாட்டலும் மறைந்து இறை நம்பிக்கையும் நேர்மையும் தன் முகத்தைக் காட்டும் வரை அவர்களை இழுத்துக்கொண்டே இருக்கிறார்கள். உண்மையில் சர்வ வல்லமையுள்ள இறைவன் திருக்குர்ஆனில் கூறுவதாவது:

تَنَزَّلُ الْمَلٰٓئِكَةُ وَالرُّوْحُ فِيْهَا بِاِذْنِ رَبِّهِمْ مِنْ كُلِّ اَمْرٍ سَلٰمٌ هِيَ حَتّٰى مَطْلَعِ الْفَجْرِ

அதில், சக்தி மிக்க அந்த இரவில் மலக்குகளும் ஒரு புனித ஆவியும் தங்கள் இறைவனின் கட்டளையின்படி சகல காரியங்களுடன் இறங்குகின்றன! சாந்தி சமாதானத்துடன் விடியற்காலை உதயமாகும் வரை. (திருக்குர்ஆன் 97:5,6)

சொல்லப்போனால் ஆகாயத்திலிருந்து வானவர்களும், பரிசுத்த ஆவியும் இறங்கி வருவது, ஒரு பெரிய மனிதர்- தேர்ந்தெடுக்கப்பட்ட ஒருவர்- பிரதிநிதித்துவம் அளிக்கப்பட்டவராகவும் தெய்வீக வெளிப்பாடுகளால் ஆசீர்வதிக்கப்பட்டவராகவும் இப்பூமியின் மீது இறங்கும்போதுதான் நடைபெறுகிறது. பரிசுத்த ஆவி இம்மனிதருக்காக விசேஷமாக வேலை செய்யும்படி ஏவப்பட்டிருக்கிறது. வானவர்களும் உலகம் நெடுகிலுமுள்ள விருப்பமுள்ள இதயங்களில் இறங்குகிறார்கள். மேலும், நல்லெண்ணமும் திறமையும் கொண்ட மனிதர்கள் எங்கெல்லாமிருக்கிறார்களோ அங்கெல்லாம் இம்மனிதரிடமிருந்து வெளிவரும் ஒளி இறங்குகிறது. அப்படியானால், முழு உலகத்திலும் ஓர் ஒளி பரவி விடுகின்றது. வானவர்களின் தூய தாக்கங்களினால் உள்ளங்களில் தானாகவே நல்ல

**60,000 அல்லது அதைவிட அதிகமான விருந்தினர்கள் வந்திருப்பார்கள். அவர்களுக்கு என்னால் என்ன செய்ய முடிந்தது என்பது இறைவனுக்கு மட்டுமே தெரியும். காது கொடுத்துக் கேட்பதற்கு ஆவலுள்ளவர்களோடு பேசிக் கொண்டும், அவர்களின் கஷ்டங்களைத் தீர்ப்பதற்கு உதவிக் கொண்டும், பற்பல வழிகளில் அவர்களுக்கு உற்சாகமூட்டிக் கொண்டும் இருந்தேன்.**

---

சிந்தனைகள் உருவாகத் தொடங்கி விடுகின்றன. ஏக இறைவனின் நேசம் அவர்களைக் கவரத் தொடங்குகிறது. எளிய, நேரிய உள்ளங்கள் உண்மையைத் தேடும் நேசத்தால் நிரப்பப்பட்டு விடுகின்றன. வலிமை குன்றியவர்கள் வலிமை பெறுகிறார்கள். எல்லா இடங்களிலும் மாற்றமெனும் தென்றல் வீசத் தொடங்குகிறது. மறைவான கரம் ஒன்று மனிதர்களை நேர்மையின்பால் நடத்துகிறது. மனித இனத்தார் யாவரும் தாம் முன்னோக்கித் தள்ளப்படுவதை உணரத் தொடங்குகிறார்கள். உண்மையில் எந்த அளவுக்கென்றால், மனிதர்களில் அறியாமை மிக்கவர்கள் உலகமானது அதன் சொந்த முயற்சியாலேயே நேர்மையின்பால் திரும்பிவிட்டது என்று எண்ணத் தொடங்குகிறார்கள். உண்மையில் இந்த மாற்றமானது அல்லாஹ்வின் பிரதிநிதியுடன் ஆகாயத்திலிருந்து இறங்கி வருகிறது. அது உண்மையைப் புரிந்து கொள்வதற்கும் அதை ஏற்றுக் கொள்வதற்கும் விசேஷ வலிமையை அருளும் வானவர்களின் வேலையே ஆகும்.

அவர்கள் தூங்கினவர்களை எழுப்புகிறார்கள்; வாழ்க்கையை இழந்து மந்தப் பட்டவர்களை சுறுசுறுப்படையச் செய்கிறார்கள். செவிடர்களுக்கு காது கேட்கும்படிச் செய்கிறார்கள். செத்துப் போனவர்களுக்கு உயிரூட்டுகிறார்கள். கல்லறைக்குள் வைக்கப்பட்டவர்களை அவர்களின் கல்லறைகளிலிருந்து எழுப்புகிறார்கள். அப்போது மக்கள் திடீரென்று தம் கண்களைத் திறந்து முன்பு தம்மிடமிருந்து மறைக்கப்பட்டிருந்தவற்றை புரிந்துகொண்டு அவற்றை உணர்ந்தறியத் தொடங்குகிறார்கள்.

உண்மையில் இந்த வானவர்கள், அல்லாஹ்வின் கலீஃபாவை விட்டும் தனித்தவர்கள் அல்ல. அவரது முகத்தில் பிராகாசிக்கும் ஒளியே அவர்கள். அவரது தீரம் அவரது உறுதி ஆகியவற்றின் பல அடையாளங்களும் அறிகுறிகளும் அவர்களே. இந்த ஒளி அதாவது இந்த அடையாளங்களும், அறிகுறிகளும் மாறுதல்களுக்குப் பொருத்தமான மனிதர்களை தமது காந்த சக்தி நிறைந்த தன்மையின் மூலம் தம் பக்கம் இழுக்கின்றன. உடலளவில் அவர்களுக்கிடையேயுள்ள தூரம் அவர்களைப் பிரிக்கலாம். அல்லது பிரிக்காது இருக்கலாம். அவரது பக்கம் இழுக்கப்பட்டவர்கள் நண்பர்களாயும் இருக்கலாம்: முழுக்க முழுக்க அன்னியர்களாயும் இருக்கலாம்.





**புத்தகங்கள், பிரசுரங்கள் வாயிலாக அவர்களை அணுகுவதைவிட மக்களோடு பேசுவதும், அவர்களின் கேள்விகளுக்கு விடை கூறுவதும் மிகவும் பயனுள்ளதென்று சில வேளைகளில் நிரூபணமாகியுள்ளது. இந்த முறை நல்ல தாக்கத்தை ஏற்படுத்தக் கூடியதாகவும், விரைவில் உள்ளத்தில் இடம் பிடிக்கக் கூடியதாகவும் இருக்கிறது.அதனால் தான் இந்த முறையை தீர்க்கதரிசிகள் (நபிமார்கள்) பேணி வந்திருக்கிறார்கள். தீர்க்கதரிசிகள் தங்களுக்கு**

---

சுருக்கக்கூறின், புதியதொரு மனநிலையை நோக்கி ஏற்படும் மாற்றம், உண்மையின்பால் ஏற்படும் ஒரு புதிய உணர்ச்சி, ஆர்வம் ஆகியன வானவர்களிடமிருந்து - பிரதிநிதியானவருடன் இறங்கும் வானவர்களிடமிருந்து- வெளிப்படும் தூய தாக்கத்தை உருவாக்கும் சக்தியாலேயே உண்டாகின்றன. அவர்கள் ஆசிய மக்களாகவோ, ஐரோப்பிய மக்களாகவோ, அமெரிக்க மக்களாகவோ இருக்கலாம். அவர்கள் யாராயினும் அவர்களை நெகிழச் செய்பவர்கள் வானவர்களே. இதுவே இறைவனின் சட்டமாகும். அதில் எந்த மாற்றத்தையும் நீங்கள் காணமாட்டீர்கள். இது புரிந்து கொள்வதற்கு மிக இலேசானதும், மிக எளிதானதுமாகும். நீங்கள் இதற்கு காது கொடுத்துக் கேட்காவிட்டால், அது உங்களின் துர்ப்பாக்கியமே. எளியவனாகிய நான் இறைவன் புறமிருந்து உண்மையுடன் வந்திருக்கின்றேன். அந்த உண்மையின் அடையாளங்களை நீங்கள் எல்லாப் பக்கங்களிலும் கண்டு கொள்ளலாம். வானவர்கள் ஆகாயத்திலிருந்து கூட்டங் கூட்டாமாக இறங்கி ஆசியாவிலும், ஐரோப்பாவிலும், அமெரிக்காவிலும் உள்ள மக்களின் உள்ளங்களை நெகிழச் செய்வதை நீங்கள் காணப்போகும் காலம் வெகு தூரத்தில் இல்லை. மாறாக, அது வெகு அருகிலேயே இருக்கிறது.

அல்லாஹ்வின் பிரதிநிதியுடன் வானவர்களும் இறங்க வேண்டும் என்பது திருக்குர்ஆனிலிருந்து நீங்கள் அறிந்திருப்பீர்கள். அவர்கள் மனிதர்களின் உள்ளங்களை உண்மையின் பக்கம் திருப்புவார்கள். எனவே, இந்த அடையாளங்கள் தோன்றுவதற்காக நீங்கள் காத்திருப்பது நல்லதே. வானவர்கள் இறங்காவிட்டால், அதாவது அவர்கள் இறங்குவதன் தெளிவான தாக்கங்களை நீங்கள் உலகத்தில் காணாவிட்டால், உண்மையை நோக்கி ஓர் அசைவு பொதுவாக - அதாவது வழக்கமான முறையைவிட அதிக அளவில் ஒரு மாற்றம் - ஏற்படாவிட்டால், அப்போது யாருமே வானத்திலிருந்து வரவில்லை என்று நீங்கள் கருதலாம். ஆனால், இவை யாவும் நடந்தேறினால் உண்மையை மறுப்பதை விட்டும் தவிர்ந்து கொள்ளுங்கள். இறைவனின் பார்வையில் கட்டுப்படாத சமுதாயமாக மாறிவிடாதீர்கள்.

**அருளப்பெற்ற போதனைகள் எல்லாருக்கும் போய்ச் சேர வேண்டும் என்பதற்காக அவற்றைப் பதிவு செய்யும் படியும் செய்தார்கள். மக்களுக்குத் தருவதற்காக அவர்களிடம் என்னவெல்லாம் இருந்ததோ அது அவர்கள் வெவ்வேறு சந்தர்ப்பங்களில் - அந்தச் சந்தர்ப்பங்களுக்குப் பொருந்துமாறு - பேசிய பேச்சுக்களின் வடிவத்திலேயே அமைந்திருந்தன. இறைவனிடமிருந்து வெளிப்பாடாக அவர்களுக்குக் கிடைத்தது நிச்சயமாக எழுதி**

---

**இரண்டாவது அடையாளம்** ஒன்று உள்ளது. தேர்ந்தெடுக்கப்பட்ட அடியார்களுக்குக் கிடைக்கும் ஒளியை இறைவன் எனக்கு வழங்கியுள்ளான். அதில் மற்றவர்கள் போட்டி போட முடியாது. நீங்கள் சந்தேகப்பட்டால் என்னிடம் நேரில் வந்து பகிரங்கமாகப் போட்டியிடுங்கள். உறுதியாகப் புரிந்து கொள்ளுங்கள். உங்களால் ஒருபோதும் போட்டியிட முடியாது. உங்களுக்கு நாக்கு இருக்கிறது; ஆனால் உள்ளம் இல்லை. உடல் இருக்கிறது; ஆனால் உயிர் இல்லை. கண்கள் உண்டு; ஆனால் அவற்றில் ஒளி இல்லை. நீங்கள் பார்க்கும் பொருட்டு இறைவன் உங்களுக்கு ஒளியைத் தந்தருளுவானாக.

**மூன்றாவது அடையாளமாவது**: தேர்ந்தெடுக்கப்பட்ட எந்த நபியின் மீது ஈமான் கொண்டதாக நீங்கள் வாதிடுகின்றீர்களோ அந்த தூய நபி (ஸல்) அவர்கள் இந்த எளியவனைப் பற்றி ஸிஹாஹ்வில் பதிவு செய்யப்பட்ட வாக்கியங்களில் குறிப்பிட்டிருப்பதை பற்றி இன்று வரை நீங்கள் கவனம் செலுத்தவில்லை. எனவே ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களை உண்மைப்படுத்துவதற்கு பதிலாக அவர்களைப் பொய்ப்படுத்துவதற்கு கவலைப் பட்டுக் கொண்டிருக்கும் நீங்கள் அவர்களுக்கு மறைமுக எதிரியாக இருக்கின்றீர்கள்!

உங்களில் அநேகர் இப்போது குஃப்ர் ஃபத்வாக்கள் எழுதுவீர்கள். முடிந்தால் கொலையும் செய்வீர்கள். ஆனால், இந்த அரசாங்கமோ வேறுவிதமாக இருக்கும் படி நேர்ந்துவிட்டது. தூண்டுதலுக்கு எளிதில் இரையாகின்ற ஆட்களால், புரிந்து கொள்வதிலோ, சகிப்புத்தன்மையிலோ திறனற்ற ஆட்களால் இந்த அரசு நடத்தப்படவில்லை. யூத வழிமுறைகளை, யூத சிந்தனைப் போக்கை இந்த அரசு ஊக்குவிப்பதில்லை. ஈமானின் சிறப்புகளையும் அவற்றின் அருள்களையும் இந்த அரசு கொண்டிருக்கவில்லை என்பது உண்மையே. ஆனால், இந்த அரசு, மர்யத்தின் மகன் மஸீஹுக்கு தொடர்பு கொள்ள வேண்டியிருந்த ஏரொதின் அரசை விடப் பல மடங்கு சிறந்தது. பாதுகாப்பு மற்றும் நல்வாழ்வு சம்பந்தப்பட்ட வேலைகள், விடுதலை, ஆட்சி உரிமைகள் கல்வி, நீதிமன்றங்கள் மூலம்





**வைக்கப்பட்டு விசேஷ கவனத்துடன் மக்கள் மத்தியிலே பரவல் செய்யப்பட்டது. காது கொடுத்துக் கேட்டு அதற்குப் பொருத்தமாகப் பேசுகிறவர்களிடத்தில் பேசுவதே தீர்க்கதரிசிகளின் பொதுவான வழக்கமாக எப்போதும் இருந்து வந்திருக்கிறது. அவர்கள் தம்மிடம் கேட்பவர்களின் தேவைகளைத் தம் கருத்தில் பதிய வைத்துக் கொள்கிறார்கள்.**

**இன்றைய பேச்சாளர்களைப் போல அவர்கள் பேசவில்லை.**

---

கிடைக்கும் நியாயம், கடமையில் பொறுப்பற்று இருப்போர் மீது கட்டுப்பாடு அல்லது தண்டனை ஆகியவற்றை வழங்குவதில் தற்கால முஸ்லிம் அரசுகளை விடவும் இது சிறந்ததுதான். இங்கு ஒரு முக்கியமான ஒற்றுமை இருக்கிறது. யூதர்கள் உன்னத நிலையை எய்தியிருந்த காலத்திலோ, யூதர்கள் அரசுரிமை பெற்றிருந்த காலத்திலோ இயேசு அனுப்படவில்லை. புரிந்து கொள்பவர்களுக்கு ஓர் அடையாளமாக இருப்பதற்காக இந்த எளியவனின் விஷயத்திலும் இறைவன் அதேபோன்று கவனத்தோடு செய்து காட்டினான்.

எனவே தற்காலத்திலுள்ள நிராகரிப்பவர்கள் ஏளனத்தோடு என்னை ஒதுக்கித் தள்ளி என்மீது நம்பிக்கை கொள்ளாதார் இருந்தால் அதைப்பற்றி நான் வருந்துவதற்கு ஏதுமில்லை. ஏனெனில், இதற்கு முந்திய காலங்களில் இருந்தவர்கள் தமது காலத்தின் நபிமார்களை இதைவிட மிக மோசமாக நடத்தியிருக்கிறார்கள். ஈஸா மஸீஹும் பலமுறை ஏளனம் செய்யப்பட்டார். ஒருமுறை அவரது சொந்த சகோதரர்கள்- ஒரே தாய்க்குப் பிறந்தவர்கள்- அவரை பைத்தியக்காரர் என்று கூறி சிறையில் அடைத்துவிடச் சதி செய்தனர். அவரைக் கொலை செய்ய அவரது எதிரிகள் பலமுறை முயன்றனர். அவரைக் கல்லெறிந்தும், அவர் மீது உமிழ்ந்தும், இறுதியில் அவரைச் சிலுவையில் அறைந்தும் தமது கற்பனையின்படி அவருக்கு முடிவு கட்டினார்கள். (அதாவது அப்படி அவர்கள் எண்ணிக் கொண்டார்கள்.)

இருப்பினும் அவர் தப்பிப் பிழைத்தார். அவரது எலும்புகள் முறிக்கப்படவில்லை. நல்லெண்ணங்கொண்ட இரகசிய விசுவாசி ஒருவர் அவரைக் காப்பாற்றினார். தமது வாழ்வின் மீதியுள்ள காலத்தை வாழ்ந்து கழித்த பின்னர் அவர் பரலோகத்துக்கு உயர்த்தப்பட்டார். அவரைப் பின்பற்றியோரும் அவரது நண்பர்களும் தடுமாற்றம் அடைந்தனர். அவர்களில் ஒருவர் முப்பது வெள்ளிக் காசு லஞ்சம் வாங்கிக் கொண்டு அவரைக் காட்டிக் கொடுத்தார். மற்றொருவர் வெளிப்படையாகவே அவரைச் சுட்டிக்காட்டி, அவருக்கு முன்னாலேயே அவரைச் சபித்தார். பெரும் நட்புறவு வைத்திருப்பதாக மார் தட்டிக்கொண்டிருந்த மீதியுள்ள அவருடைய சீடர்களும் அவரை விட்டுவிட்டு ஓடி மறைந்து

இன்றைய பேச்சாளர்களோ தாம் எந்த அளவுக்குப் படித்திருக்கிறோம் என்பதைக் காட்டுவதற்காகப் பேசுகிறார்கள். மேலும் அவர்கள் பாமர மக்களை ஏமாற்றித் தமது பொய்யான தர்க்கங்கள், குதர்க்க வாதங்கள் ஆகியவற்றை ஏற்றுக் கொள்ளும்படிச் செய்வதற்காகப் பேசுகிறார்கள். இதன் மூலம் தாம் நரகத்திற்குச் செல்லும் பாதையைத் தாமாகவே மிக எளிதில்உருவாக்கிக் கொள்கிறார்கள். நபிமார்கள் அப்படி செய்வதில்லை. நபிமார்களோ தம் உள்ளத்தில் பொங்கி எழுந்ததை பிறருடைய உள்ளங்களில் இட்டு வந்தனர். அவர்களின் பேச்சுக்கள் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமாகவும், கேட்பவர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வனவாகவும், தூய்மையும் புனிதத் தன்மையும் நிறைந்தவையாகவும் இருந்தன.

உல்லாசமாகப் பொழுதுபோக்கிற்காக அவர்கள் பேசவில்லை. அவர்கள் அணுகிய முறை, தம்மைச் சுற்றியுள்ள ஆன்மீக நோயாளிகளைக் கண்டுகொண்டு அந்த நபர்களின் ஆன்மீக நோய்களுக்கு சிகிச்சையளிக்கும் அணுகு முறையாகவே இருந்தது. அல்லது தம்மிடம் வந்து காது கொடுத்துக் கேட்பவர்கள் பற்பல மன

விட்டார்கள்.மெசாயாவைப் பற்றிப் பல்வேறு விதமான சந்தேகங்கள் அவர்களிடம் இருக்கும்படி நேர்ந்தது. ஆனாலும் தமது வாதத்தைப் பொருத்த அளவில் அவர் உண்மையாளரே. எனவே, அவர் காலஞ்சென்ற பின்னர், இறைவன் அவரது சமயக் கொள்கைக்கு உயிரூட்டினான். கிறிஸ்தவர்கள் நம்பி வரும் இயேசுவின் உயிர்த்தெழுதல் உடல் சம்பந்தப்பட்டதல்ல. அது இயேசு என்னும் நபர் உயிர்த்தெழுந்ததல்ல. அது அவரது சமயக் கொள்கை உயிர்த்தெழுந்ததேயாகும். இதுபோன்ற இந்த நற்செய்தியை இறைவன் எனக்கும் வழங்கினான்.

மரணத்திற்கு பிறகு நான் உமக்கொரு புத்துயிர் அளிப்பேன்.

இறைவனுக்கு நெருக்கமானவர்கள், தம் மரணத்திற்குப் பின் மீண்டும் உயிர் பெறுவதாகவும் இறைவன் கூறினான்.

அவன் மேலும் கூறினான்: நான் என் ஒளியைக் காட்டுவேன். மேலும் என் வல்லமையை வெளிப்படுத்துவதன் மூலம் உம்மை உயர்த்துவேன்.

எனவே எனது இந்த இரண்டாவது வாழ்க்கை என்பதும் எனது குறிக்கோள்கள் என்னும் வாழ்க்கையேயாகும். ஆனால் இந்த இரகசியங்களைப் புரிந்துகொள்பவர்கள் மிகச் சிலரே. (2 ஆம் அடிக்குறிப்பு முடிவுற்றது.)





மயக்கங்களினால் அவதிப்படுவதைக் கண்டனர். அத்தகைய தருணங்களில் வலிமைமிக்க வாதப் பிரதி வாதங்களைக் கொண்டு இம்மன மயக்கங்களை அவர்கள் அகற்றி வந்தனர். அவர்கள் எப்போதும் வார்த்தைகளைச் சிக்கனமாக தேர்ந்தெடுத்து ஒரு சில வார்த்தைகளிலேயே அதிக அர்த்தத்தைப் பொருத்தி வைக்கிறார்கள். இதே முறையைத் தான் இந்த எளியவனும் பேணி வருகிறேன். நேரில் வருபவர்களுக்கும், விசாரித்து அறிபவர்களுக்கும் சில தேவைகளும் ஆன்மீக நோய்களும் உள்ளன. அவற்றிற்குத் தகுந்தாற்போல அவர்களின் திறமைகளை மனதில் கொண்டு எப்பொழுதும் சொற்பொழிவின் வாசல் திறந்திருக்கிறது. ✸(அடிக்குறிப்பு 3 காண்க )

ஆன்மீக நோய்களைக் குறியாக வைத்து அவற்றை எதிர்நோக்கி அதன் பிறகு அறிவுரை என்னும் அம்புகளை ஏவுவதன் மூலம் நன்கு முயன்று அந்த நோய்களைப் கூண்டோடு அழிக்கவும் ஒழுக்கக் குறைபாடுகளைச் சீர்படுத்தவும் முடியும். இவ்வாறெல்லாம் செய்வதற்கு, இடத்தை விட்டும் புரண்டுவிட்ட உறுப்பு ஒன்றை

✸ அடிக்குறிப்பு 3: இவ்விடத்தில் குறிப்பிடத்தக்க சுவையான சம்பவம் ஒன்றுள்ளது. சிறிது காலத்திற்கு முன்பு அலிகாருக்குச் செல்லும் சந்தர்ப்பம் எனக்குக் கிட்டியது. அதிக வேலைப்பளு காரணமாக முன்பு நான் காதியானில் இருக்கும் போதே கஷ்டப்பட்டவனாயிருந்தேன். இதன் விளைவாக, நீண்ட உரையாடல்களில் பங்கெடுத்துக் கொள்ளவோ மூளைக்கு வேலை தரும் கஷ்டமான பணியை மேற்கொள்ளவோ கூடிய நிலையில் நான் அப்போது இருக்கவில்லை. இப்போது கூட, நீண்ட உரையாடலில் பங்கு பெறுவதற்கோ கஷ்டப்பட்டுச் சிந்திப்பதற்கோ தகுதியான நிலையில் நான் இல்லை. இத்தகைய நிலையில் அலிகாரைச் சார்ந்த முஹம்மது இஸ்மாயில் என்ற ஒரு மௌலவி என்னிடம் ஒரு சொற்பொழிவு நிகழ்த்தும்படி பெரும் பணிவுடன் கேட்டுக் கொண்டார். என்னைப் பார்ப்பதற்கும் என் பேச்சைக் கேட்பதற்கும் மக்கள் ஆர்வமாக இருப்பதாகவும், பொருத்தமான ஓரிடத்தில் ஒரு கூட்டம் நடத்துவதே சரியென்றும், அவ்விடத்தில் நான் அவர்களின் முன்னிலையில் பேச வேண்டுமென்றும் அவர் சொன்னார்.

மக்களுக்கு முக்கியமான உண்மைகளை எடுத்துக் கூறுவதற்குச் சரியான சந்தர்ப்பங்களை எதிர் நோக்கியிருப்பதே எப்போதும் என்னுடைய பெரும் ஆசையாக இருந்து வந்திருக்கிறது. ஆகவே, இந்த அழைப்பை நான்

மீண்டும் அதனுடைய சரியான இடத்தில் பொருத்துவதைப் போலவே மருத்துவரின் முன்னால், நோயாளி ஆஜராகி இருக்கவேண்டியது அவசியமாகிறது. வேறெந்த வழியிலும் முறையான சிகிச்சையளிப்பது சாத்தியமில்லை. எனவே இறைவன் பல ஆயிரம் இறை தூதர்களையும் நபிமார்களையும் உலகிற்கு அனுப்பியுள்ளான். மக்கள் அவர்களைச் சுற்றிச் சூழ்ந்து கொண்டு அவர்களின் வாழ்க்கையிலிருந்தும் முன்மாதிரியிலிருந்தும் பயன்பெறுமாறு இறைவன் கட்டளையிட்டிருக்கிறான். ஒவ்வொரு காலத்தின் மக்களும் கண் கண்ட முன்மாதிரிகளைப் பெற்று (நபிமார்களாகிய) அவர்களை இறை வார்த்தையின் வடிவமாகக் கண்டு அவர்களைப் பின்பற்ற முயற்சி செய்ய வேண்டும் என்பதற்காக அவ்வாறு செய்தான்.

இப் புனிதவான்களின் தோழமையில் இருப்பது மதப் பயிற்சியின் முக்கிய அம்சங்களில் ஒன்றாகும். அப்படியில்லாவிட்டால் இறைவன் தூதர்கள், நபிமார்கள் எவரையும் அனுப்பாமல் தனது அருள் மிக்க வெளிப்பாடுகளை வேறு வகையிலும் இறக்கியிருக்கலாம். அல்லது தொடக்கத்தில் நபிமார்களையும் தூதர்களையும் அனுப்பி வைத்துவிட்டு அதன்

மன மகிழ்ச்சியோடு ஏற்றுக்கொண்டேன். இஸ்லாத்தின் உண்மை நிலையையும், உண்மையில் இஸ்லாம் எவ்வாறிருந்தது; இன்றையத் தினம் மக்கள் அதனை எவ்வாறு புரிந்து வைத்திருக்கிறார்கள் என்பன போன்ற விஷயங்களையும் ஒரு பொதுக்கூட்டத்தில் இச்சந்தர்ப்பத்தில் விளக்கிக்கூற என்னால் முடியும் என்று நான் எண்ணினேன். இறைவன் நாடினால், இஸ்லாம் என்ற பொருள் பற்றி நான் பேசப் போவதாக அந்த மௌலவி சாஹிபிடம் உறுதி கூறுனேன். ஆனால் நான் இவ்வாறு ஒப்புக்கொண்டதன் பின்னர், இதிலிருந்து இறைவன் என்னைத் தடுத்துவிட்டான். என்னுடைய உடல்நிலை காரணமாகவே கடும் உழைப்புத் தேவைப்படும் எக்காரியத்தையும், எனக்கு உடல் வருத்தத்தைத் தரக்கூடிய எதனையும் மேற்கொள்வதை சர்வவல்லமையுள்ள அல்லாஹ் விரும்பவில்லை என்று நான் உறுதியாகப் புரிந்துகொண்டேன். ஆதலால் இந்தச் சொற்பொழிவு நிகழ்த்துவதிலிருந்து நான் இறைவனால் தடுத்து நிறுத்தப்பட்டு விட்டேன்.

முன்பொரு முறை இவ்விதமாகவே எனக்கு நேர்ந்திருக்கிறது. அப்போது எனக்கு உடல் நலம் குன்றியிருந்தது. அப்போது ஒரு ஆன்மீகக் காட்சியில் கடந்த கால நபிமார்களில் ஒரு நபியை நான் கண்டேன். என் பேரிலுள்ள





பிறகு நபித்துவம், தூதுத்துவம், வஹி ஆகியவற்றின் தொடரை ஒரேயடியாக நிறுத்தியிருப்பான். ஆனால் இறைவனின் நுட்பமான ஞானமோ இத்திட்டத்தை ஒருபோதும் ஒப்புக் கொள்ளவில்லை. அதற்கு மாறாக இறை வெளிப்பாடுகள் அருளப்பட்ட தூயவர்கள் தேவையாய் இருந்த எல்லாக் காலங்களிலும் இறை வழிபாடற்ற தன்மையைச் சீர்படுத்தி இறைநேசத்தையும் வாழ்க்கையில் தூய்மையையும் மீண்டும் கொண்டு வருவதற்காகவும் மற்றவர்களுக்கு அன்றாட வாழ்வில் முன்மாதிரிகளாய் விளங்குவதற்காகவும் இறைவனிடமிருந்து வஹியைப் பெற்றவர்கள் தொடர்ந்து வந்து கொண்டே இருந்திருக்கிறார்கள்.

இவ்விரண்டும் ஒன்றுடன் ஒன்று மிகுந்த தொடர்புள்ளவை. தேவைப்படும் காலங்களில் வழிகாட்டலையும், சீர்திருத்தத்தையும் அருளுவதில் இறைவனுக்கு எப்பொழுதும் கவனம் இருக்கிறதென்றால், இறைவன் தனது சிறப்பான கவனத்தினால் பார்வைப் புலமையை வழங்கிய, தன் திருப்தியான வழியில் நிலைநாட்டிய மக்களும் எப்பொழுதும் வந்து கொண்டிருப்பதும் மிகவும் அவசியமானதாகும். அவர்கள் இறைவனிடமிருந்து ஞானத்தைப் பெறுகிறார்கள். இறைவனின் நாட்டத்தின்படியே

அனுதாபம், அக்கறை காரணமாக, ஏன் இந்த அளவுக்குக் கஷ்டமான மூளை வேலை செய்கிறீர்கள்? கவனமாயிராவிட்டால், நீங்கள் நோய் வாய்ப்படுவீர்கள் என்று அந்த நபி என்னிடம் கூறினார். சுருங்கக்கூறின், இறைவனே என்னைத் தடுத்து நிறுத்தி விட்டான். நானும் அந்த மௌலவி சாஹிபிடம் அவ்விதமே தெரிவித்துவிட்டேன். நான் காட்டிய காரணம் உண்மையான காரணமாகும்.

நீண்ட உரையாடலுக்குப் பிறகு கடினமான மூளை வேலைக்குப் பிறகும் நான் எவ்வாறு நோயால் கஷ்டப்பட்டேன் என்பதைப் பார்த்திருக்கிறவர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கு தன் அறியாமையின் காரணமாக எனது இல்ஹாம்களின் மீது நம்பிக்கை இல்லாவிட்டாலும் எனக்கு உண்மையிலேயே அந்த நோய் இருக்கிறது என்பது அவர்களுக்குத் தெரியும்.

லாஹூர் மருத்துவரும், கௌரவ நீதிபதியுமான டாக்டர் முஹம்மது ஹுசைன் கான் இன்னும் எனக்கு சிகிச்சை செய்து வருகின்றார்கள். இந்த மருத்துவர் எனக்குத் தொடர்ந்து கூறி வரும் அறிவுரை யாதெனில், கஷ்டம் அனுபவிக்கக்கூடிய சாத்தியக் கூறுகள் நீடித்திருக்கும்போது நான் கடினமான

நடப்பதற்குக் கற்றுக் கொடுக்கப்பட்டிருக்கிறார்கள். எனவே, ஒரு முழுச் சமுதாயத்தையும் திருத்தும் இமாலயப் பணியைப் பள்ளிப் படிப்பு முறைகளினால் நிறைவேற்ற முடியாது. இறைவனின் தூய தூதர்களால் எப்போதும் கடைப்பிடிக்கப்பட்டு வரும் முறைகளால் மட்டுமே இக்காரியம் நிறைவேற்றப்பட முடியும். தாக்கத்தை ஏற்படுத்தும் இந்த வழிமுறையை இஸ்லாம் தனது காலடியை எடுத்து வைத்ததுமே மிக்க வலுவாகவும், உறுதியாகவும் பழக்கப் படுத்தியிருக்கிறது.இதற்கு நிகரானதை மற்ற மார்க்கங்களில் ஒருபோதும் காணமுடியாது. புனித நபிபெருமானாரின் தோழர்கள் 10,000-க்கும் அதிகமாயினர். இருப்பினும், பெருந் தொகையான இத்தோழர்கள் புனித நபிகள் பெருமானாருடன் நெருங்கிய தொடர்பு கொண்டு பழகி வாழ்ந்தனர். அவர்கள் தெய்வீக உண்மைகளைப் பற்றிய ஞானத்தை பெறுவதற்கும், சத்திய தெய்வீக வாழ்வென்னும் கலையைக் கற்றுக் கொள்வதற்கும் ஆயத்தமாயிருந்ததுடன் உறுதியதான நம்பிக்கையுடனும் பணிவுடனும் இவற்றை அடைய ஆசை கொண்டவர்களாகவும் அந்த நபியைச் சுற்றியே இரவு பகலாகக் கிடந்தார்கள்.

ஹஸ்ரத் மூஸா (அலை) அவர்களுக்கும், அவரைப் பின்பற்றிய ஒரு கூட்டம், ஒரு ஜமாஅத் இருந்து வந்தது என்பது உண்மையே.

மூளை வேலையைத் தவிர்க்க வேண்டும் என்பது தான்.

என்னுடைய இந்த உடல் நிலைக்கு முதல் சாட்சி இந்த மருத்துவர்தான். இதைப்போலவே மற்ற நண்பர்களும் சாட்சி கூறுவார்கள். அவர்களில் ஜம்மு - காஷ்மீர் அரசாங்க மருத்துவர், எனது சகோதரர் மௌலவி ஹக்கீம் நூருத்தீன்; இவர் என்னிடத்தில் ஆழ்ந்த பற்றுக் கொண்டவர். அடுத்து, லாஹூரைச் சேர்ந்தவரும் லாஹூரிலேயே கணக்கராகப் பணிபுரிபவருமான முன்ஷி அப்துல் ஹக் என்பவர். நான் நோய் வாய்ப்பட்டிருந்த இக்காலத்தில் இவர்தான் என்னைக் கவனித்து வந்தார். வர்ணிக்கச் சாத்தியமில்லாத வழிகளில் இவர் எனக்காக ஊழியம் புரிந்துள்ளார். இத்தகைய நண்பர்கள் யாவரும் நன்கறிவார்கள். இவர்கள் என்னுடைய இந்த உடல் நிலைக்குச் சாட்சியாக இருக்கிறார்கள்.

எனவே, நான் வருத்தத்துடன் சொல்ல வேண்டியதிருக்கிறது; ஒவ்வொரு இறை நம்பிக்கையாளரும் நல்லெண்ணத்துடன் நடந்து கொள்ளுமாறு பணிக்கப்பட்டுள்ளார். ஆயினும் (அலிகாரைச் சேர்ந்த) மவ்லவி சாஹிப் எனது இந்த காரணத்திற்கு நல்லெண்ணத்துடன் மனதில் இடம் தரவில்லை.





ஆனால், அந்த ஜமாஅத் எவ்வகையானது? கிளர்ச்சி மனப்போக்குடன், முரட்டுத்தனமாக நடந்ததுடன் ஆன்மீக ஒழுங்கையும் நல்வாழ்வு முறைகளையும் ஒப்புக் கொள்வதில் வெகு தொலைவிற்கு விலகியவர்களாயும் இருந்தனர். பைபிளைப் படிப்பவர்களும், யூத வரலாற்றைப் பார்ப்பவர்களும் இதனை நன்கு அறிவார்கள். மோசேயின் சீடர்களுடன், புனித நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் தோழர்களை ஒப்பிட்டு நோக்கினால் பெருமானாரின் தோழர்கள் ஓர் உள்ளார்ந்த மாற்றம் எனும் மிக உன்னதமான அற்புதத்தை நம் முன் வைக்கிறார்கள். புனித நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைப் பின்பற்றியதன் மூலமாகவே இம் மாற்றம் நடந்துள்ளது. உணர்ச்சி வேகத்தில் அவர்கள் யாவரும் சமநிலையில் இருந்ததுடன் ஒருவருக்கொருவர் இசைவோடு நடப்பதிலும் தன்னிகரற்றவர்களாய்த் திகழ்ந்தனர். அவர்கள் இஸ்லாமிய சகோதரத்துவத்தின் அடிப்படையில் உண்மையிலேயே அவர்கள் அனைவரும் ஒரே உடலின் உறுப்புகள் போன்று ஆகி விட்டார்கள்.இந்த சகோதரத்துவம் முழுமை வாய்ந்தது. புனித நபிகள் பெருமானாரின் ஒளியும் செல்வாக்கும் அவர்களின் உள்ளங்களையும், ஆன்மாக்களையும் ஆழமாகத் துளைத்துச் சென்றுவிட்டது. ஒவ்வொருவரும் புனித நபிகள்

அதற்கு மாறாக, என் மீது அவநம்பிக்கை கொண்டதுடன் எனக்கு எதிராக வேண்டுமென்றே சாட்சி கூறவும் துணிந்துவிட்டார். அவரது நண்பர்களில் ஒருவரான ஜமாலுத்தீன் என்ற பெயருள்ள ஒரு டாக்டரைக் கொண்டு ஒரு வாக்கு மூலம் தொகுத்துத் தயாரிக்கப்பட்டுள்ளது. பொது மக்களுக்கு மத்தியில் பரப்பப்பட்டுள்ள இந்த வாக்கு மூலத்தின் ஆட்சேபனைகளுக்கு ஒன்றன்பின் ஒன்றாகப் பதில் கூறத் தொடங்குகிறேன்.

**அவர் கூறும் ஆட்சேபனை:** நான் அவரிடம் (அதாவது இந்தப் புத்தகத்தின் ஆசிரியரிடம், அவர் அலிகாரில் இருந்தபோது) நாளை வெள்ளிக்கிழமையாகும். அறிவுரை கூறுங்கள் எனக் கேட்டேன். அதற்கு அவர் ஒப்புக்கொண்டார். ஆனால் மறுநாள் காலையில் ஓர் இறை வெளிப்பாட்டினால் தாம் அவ்வாறு செய்வதிலிருந்து தடுக்கப்பட்டிருப்பதாக என்னிடம் ஒரு செய்தி சொல்லி அனுப்பினார். அவரிடம் பேசும் ஆற்றல் இல்லாததாலும், இதை ஒரு சோதனையாக எண்ணிப் பயந்ததாலுமே அவர் இப்படி நடந்து கொண்டார் என்று நான் நினைக்கிறேன்.

பெருமானாருடைய பண்புகளை பிரதிபலிக்கின்ற பிம்பங்களாக ஆகிவிட்டார்கள். மெய்யான பரிபூரண தீர்க்கதரிசி ஒருவர் நடந்து காட்டிய முன்மாதிரியின் விளைவுதான் இது. சிலை வணக்கத்தில் மிகப் பெருமளவில் மூழ்கிப் போயிருந்தவர்கள் கண்ணுக்குப் புலனாகாத ஏக இறைவனை வணங்குகிறவர்கள் ஆயினர். இவ்வுலக இன்பங்களில் மூழ்கிப்போனவர்கள் உண்மையான அன்புக்குரிய இறைவனின் பக்தர்களாக மாறினர். எந்த அளவுக்கு என்றால், அந்த இறைவனது பாதையில் தண்ணீரைப் போன்று தம் இரத்தத்தைச் சிந்துவதற்கு அவர்கள் ஒருபோதும் தயங்கவில்லை. உண்மையில் இது, ஒரு உண்மையான நபி, முழுமையான நபியின் தோழமையில் உளத்தூய்மையுடன் காலெடுத்து வைப்பதால் வாழ்வைக் கழிப்பதன் விளைவு ஆகும்.

இதன் அடிப்படையிலேயே இதைப்போன்ற ஒரு ஜமாஅத்தை அமைப்பதற்காக எளியவனாகிய நானும் நியமிக்கப்பட்டிருக்கிறேன். உண்மையில் இங்கு வந்து என்னுடன் தங்கி வாழும்

**நான் சொல்லும் பதில்:** மௌலவி சாஹிபிடத்தில் அவநம்பிக்கையைத் தவிர வேறொன்றுமில்லை. அவநம்பிக்கை கொள்ளுதல் ஷரீஅத்தில் கடுமையாகத் தடுக்கப்பட்ட காரியமாகும். மேலும் அது நல்ல இயல்புகொண்ட மக்களின் வேலையல்ல. நான் அலிகாருக்கு வந்து அந்த சந்தர்ப்பத்திலேயே இறையறிவிப்பு இறங்குவதாக வாதிட்டிருந்தால் அது தப்பெண்ணம் கொள்வதற்கு காரணமாக அமைந்திருக்கலாம். மௌலவி சாஹிபின் கல்வித்திறம், மதிநுட்பம் ஆகியவற்றால் ஏற்பட்ட மதிப்பினால் நான் பயங்கொண்டுவிட்டேன் என்றும் நான் செய்வதாக ஒப்புக்கொண்டிருந்த என்னுடைய பணியைச் செய்யாதிருப்பதற்கு ஒரு சாக்குப்போக்கைக் கண்டுபிடிக்க வேண்டிய அளவுக்கு நான் அவரைக் கண்டு அரண்டுபோய்விட்டேன் என்றும் நினைக்கக்கூடும். ஆனால் இறைவெளிப்பாடு எனக்குக் கிட்டுகிறது என்று இந்நாட்டில் நான் அறிவித்தது, நான் அலிகாருக்கு இப்போது வருவதற்கு ஏறத்தாழ ஆறு ஆண்டுகளுக்கு முன்னரே ஆகும். என்னுடைய வாதம் பல இடங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது. இவர் குறிப்பிடுவதுபோல் பொது இடத்தில் பேசுவதற்குரிய திறன் அந்த அளவுக்கு என்னிடம் இல்லாதிருந்தால் நண்பர்களும் விரோதிகளும் அடங்கிய பல்லாயிரம் மக்களின் முன்னிலையில் சொற்பொழிவாக நிகழ்த்தப்பட்ட சுர்மா சஷம் ஆர்யா போன்ற புத்தகங்களை நான் எவ்வாறு தொகுத்திருக்க முடியும்? பொதுக்





பார்வையாளர்களின் வட்டத்தைப் பெருக்குவதற்கே இறைவன் நாடுகிறான். தங்களுடைய ஈமானையும் தங்களுடைய இறைநேசத்தையும் தங்களின் நம்பிக்கைகளின் உறுதியையும் வளர்த்துக் கொள்ள ஆவலுள்ளவர்கள் இங்கு வந்து என்னுடன் தினசரி தொடர்புகொண்டு வாழவும், எளியவனாகிய எனக்கு வெளிப்படுத்திக் காட்டியிருப்பதைப்போன்று அவர்களுக்கு அந்த ஒளிகள் காட்டப்படுவதற்கும், இந்த எளியவன் அனுபவிப்பதைப் போன்று அவர்களுக்கும் ஆன்மீக அனுபவங்கள் கிட்டவும், இந்த எளியவன் பெற்றிருப்பதைப் போன்று மார்க்கத்தின் பேரில் பெரும் பற்றுதலும், பெரும் ஆர்வமும் அவர்களும் பெறவும், அதன் விளைவாக இஸ்லாத்தின் ஒளி எங்கும் பரவவும், தற்காலத்தில் முஸ்லிம்களைப் பற்றிய மோசமான கருத்து- வெறுத்து ஒதுக்கித் தள்ள வேண்டிய ஒரு கூட்டத்தார் என்ற மோசமான கருத்து அகலவும் அவன் பார்வையாளர்களின் வட்டத்தை அகலமானதாக ஆக்க நாடுகிறேன். இப்புரட்சி நடக்கப்போவதைக் குறித்த

கூட்டத்தில் பேசுவதில் தாழ்நிலையில் உள்ள என்னைப் போன்ற ஒருவனால் இத்தகைய பெரும்பணி ஒன்றை எவ்வாறு நிறைவேற்றி இருக்க முடியும்? எல்லா வகையான திறன்களும் சுவைகளும் உள்ள ஆயிரக்கணக்கான மக்களை எதிர்நோக்க வேண்டியதிருக்கும் ஓர் எழுச்சிமிக்கப் பொதுப்போரை நான் எவ்வாறு தொடர்ந்து நடத்திச் செல்ல முடியும்?

அந்தோ பரிதாபமே! இக்கால மௌலவிகள் அநேகரிடம் இந்த அளவுக்குப் பொறாமை நிறைந்திருக்கிறதே. மற்றவர்களுக்கு நல்ல விசுவாசிகளின் நற்பண்புகளை - சகோதரத்துவம், பரஸ்பர நல்லெண்ணம் போன்ற பண்புகளை - அவர்கள் போதிக்கிறார்கள். மேடைகளில் ஏறி நின்று திருமறையிலிருந்து எப்போதும் மேற்கோள் காட்டுபவர்களாகவும் இருக்கிறார்கள். ஆனால் அவர்களோ இக்கட்டளைகளைத் தொடுவது கூட இல்லை.

அன்புடையீர்! உங்களின் கண்களை இறைவன் திறப்பானாக. இறைவன் தனது இல்ஹாமைப் பெறும் ஓர் அடியார் செய்யவிருக்கும் ஏதோ ஒரு காரியத்தை, தனது தெய்வீக வெளிப்பாட்டின் மூலம் தனது அருள்மிக்க ஞானத்தினால் தடுத்து நிறுத்திவிடுவது அவனுக்குச் சாத்தியமற்றதா? அவ்வாறு தடுத்து நிறுத்தப்படுவதற்கு, உங்களுடைய உட்புற குணங்கள் சோதிக்கப்படுவதும், உங்களைப் போன்றவர்களின் கெட்ட எண்ணங்களை வெளிக்கொண்டு வருவதும் ஒரு காரணமாக இருக்கலாம்.

**நற்செய்திகளை வழங்கி இறைவன் என்னை அனுப்பியுள்ளான். இறைவன், ஆம்; இறைவனே என்னிடம் இவ்வாறு கூறினான்:**

**எழுவீராக! உமக்கு நியமிக்கப்பட்ட குறித்த நேரம் வந்துவிட்டது. இப்போது முஹம்மதைப் பின்பற்றுவோர் முன்னர் ஊன்றியிருந்ததைவிட தம் கால்களை மிகவும் உறுதியுடன் ஊன்றியவர்களாய் மிக உயர்ந்த ஒரு மினாராவின் மீது விரைவில் ஏறிச் செல்வார்கள்.**

உங்களுடைய கல்வியின் மகத்துவம் மற்றும் கம்பீரத்தால் நான் பயந்துவிட்டேன் என்ற உங்கள் ஆட்சேபனைக்குரிய பதில் என்னவெனில், எவர்கள் இருளிலும் மன இச்சை என்னும் இருள்களிலும் மூழ்கிக் கிடக்கின்றார்களோ அவர்கள் உலகத்தின் எல்லா தத்துவங்களையும் கல்வித்திறன்களையும் ஒருங்கே கொண்டவர்களாக இருந்தாலும், எனது பார்வையில் அவர்களுக்கு இறந்துபோன புழுக்களைத்தவிர வேறெந்த மதிப்புமில்லை. இருளிலும், சுயநல ஆசைகளிலும் மூழ்கியுள்ள கல்வி மான்களின் வியத்தகு கல்வித் திறத்தைப் பொருத்தவரை, அத்தகையோரிடத்தில் எனக்கு மரியாதை இல்லை. அறியப்பட்டுள்ள தத்துவங்கள், விஞ்ஞானங்கள் யாவற்றிலும் அவர்கள் முதிர்ச்சியடைந்தவர்களாய் இருந்தாலும் என்னுடைய கருத்தில் செத்த புழுக்களைக் காட்டிலும் அவர்கள் எவ்வகையிலும் சிறந்தவர்கள் அல்ல. அப்படியிருக்கையில் உங்களின் நிலை என்ன? நீங்கள் அந்த அளவு கல்வித்திறன் கொண்டவர்கூட இல்லை. பழைய எண்ணப்போக்கைக் கைக்கொண்ட ஒரு முல்லாதான். நீங்கள் இருண்ட சிந்தனைகளைக்கொண்ட முல்லாக்களிடம் காணப்படும் அதே கயமைத்தனம் உங்களிடமும் காணப்படுகிறது.

ஞாபகத்தில் கொள்ளுங்கள்; என்னிடம் வருபவர்களில் விஞ்ஞானத் துறைகளையும், கலைத்துறைகளையும் கற்றுத் தேர்ந்தவர்களும், விசாரித்தரிந்து அதிகம் விளங்கிக்கொள்ள ஆவலுள்ளவர்களும் இருக்கிறார்கள். அவர்கள் என்னிடம் வந்து நான் அவர்களுக்குக் கற்பிக்கின்ற ஆன்மீக நுண்ணறிவிலிருந்து பலன் பெறுகிறார்கள். என்னிடம் வரும் அத்தகைய பார்வையாளர்களோடு தங்களை ஒப்பிட்டு நோக்கும்போது, கற்கத் தொடங்கும் ஒரு சிறு குழந்தையைப் போலவே நீங்கள் இருக்கிறீர்கள் என்று நான் கூறினால் இத்தகைய ஒரு விளக்கம் கூட உங்களின் தகுதிக்கு அதிகமானதுதான்.

இப்போதும் உங்களின் தப்பெண்ணம் நீங்கவில்லையென்றால் அவநம்பிக்கையின் உணர்வுகள் குறையவில்லையென்றால் பிறகு,





**நான்காவது பிரிவு: எண்ணிக்கையில் பெருகிவரும் விசாரித்தறிபவர்கள். உண்மையைத் தேடுபவர்கள், நம்மை எதிர்ப்பவர்கள் ஆகியோருடன் கடிதத் தொடர்பு கொள்வது சம்பந்தப்பட்டதாகும். கடந்த வருடங்களில் 90,000 கடிதங்களுக்கு மேல் நமக்கு வந்திருக்கும். உண்மையில் வீணானவை; தேவையற்றவை எனக் கருதப்பட்ட ஒரு சில கடிதங்களைத் தவிர ஏனைய யாவற்றிற்கும் பதில் எழுதப்பட்டுவிட்டன. இந்த**

இறைவனின் உதவியோடும் கருணையோடும், பொதுமேடையில் ஒரு பேச்சுப்போட்டியில் தங்களை எதிர்கொள்ள நான் ஆயத்தமாக இருக்கிறேன். எனக்கு உடல்நலம் அவ்வளவு நன்றாக இல்லை. ஆதலால் நீண்ட பயணத்தை நான் மேற்கொள்ள இயலாது. நீங்கள் ஒப்புக்கொண்டால் பஞ்சாபிலுள்ள லாஹூர் போன்ற ஒரு மத்திய இடத்திற்கு என்னுடைய பொருட் செலவில் தாங்கள் பிரயாணம் செய்துவந்து சேரலாம். இத்தகைய ஒரு நேரடிப் போட்டிக்கும் ஒரு சோதனைக்கும் தங்களை அழைக்கவேண்டும் என்று நான் உணர்கிறேன். என்னுடைய அழைப்பில் நான் தங்களின் பதிலை எதிர்நோக்கியிருக்கிறேன்.

**அவர்:** இவர் (அதாவது இப்புத்தகத்தை எழுதியவர்) முழுக்க முழுக்க போட்டியிடத் தகுதியற்றவர். இவரிடத்தில் அதற்கான கல்வித்திறன் சற்றும் இல்லை.

**நான்:** மௌலவி சாஹிபே! இவ்வுலக அறிவைக் குறித்தும் ஞானத்தைக் குறித்தும் நான் சிறிதும் வாதிக்கவில்லை. இவ்வுலகத்தின் அறிவுத் திறன்களையும், தந்திரங்களையும் வைத்து நான் என்ன செய்வது? இவை ஆன்மாவைப் பிரகாசமாக்குவதில்லை; மக்களின் உள்ளங்களிலும் அவர்களின் உள்ளெண்ணங்களிலும் உள்ள அழுக்குகளையும், மாசுகளையும் இவை கழுவிச் சுத்தம் செய்வதில்லை. இவை பணிவையும் தன்னடக்கத்தையும் வளர்க்கவில்லை. அதற்குப் பதிலாகத் துருப்பிடித்த உள்ளங்களை மேலும் துருப்பிடிக்க வைக்கிறது. இறை மறுப்புக்குமேல் இறை மறுப்பை மேலும் அதிகமாக்குகிறது. இறையருள் என்னை அரவணைத்துக் கொண்டது. அது எனக்கு எத்தகைய ஞானத்தை வழங்கியதென்றால் அதை மார்க்க கல்விக் கூடங்களிலிருந்து பெற முடியாது. மாறாக அது வானத்தின் ஆசிரியனிடமிருந்து கிடைக்கிறது. எனக்கு அது போதும். என்னைக் கல்வி கற்காதவன் என்று வர்ணித்தால் அதில் நான் வெட்கப்படுவதற்கு என்ன இருக்கிறது? இன்னும் சொல்லப்போனால் இது பெருமைப்படக்கூடிய ஒரு விஷயமல்லவா? மனித இனம் முழுவதையும் சீர்திருத்தி எழுச்சி கொள்ளச் செய்ய வந்த என்னுடைய

வேலையும் தொடர்ந்து நடைபெற்று வருகிறது. ஒவ்வொரு மாதமும் அநேகமாக 300 லிருந்து 700 அல்லது 1000 கடிதங்கள் வந்து போய்க் கொண்டிருக்கின்றன.

**ஐந்தாவது பிரிவு:** விசேஷ இறை வெளிப்பாட்டின் மூலம் சர்வ வல்லமையுள்ள இறைவனால் நிறுவப்பட்ட வேலைத் திட்டத்தின் ஐந்தாவது பிரிவு நான் நம்புகிறபடி, இவ்வியக்கத்தில் அங்கத்தவராய்ச் சேர்பவர்களின் பெரும் எண்ணிக்கை- அதாவது பைஅத் செய்து இவ்வியக்கத்தில் தாம் சேர்ந்துள்ளதை அறிவிப்பவர்களின் எண்ணிக்கையைப் பற்றியதாகும். பைஅத்தை அறிமுகப்படுத்தும் வேளையில் இறைவன் என்னிடம் கூறியதாவது:

'வழிகேடு என்னும் புயலினால் பூமியானது தகர்த்தெறியப் பட்டிருக்கிறது. புயல் வீசும் இத்தருணத்தில் இப் படகைச்

தலைவர்- இறைவனுடைய படைப்பினங்கள் யாவற்றிலும் முதன்மையானவர் -(அதாவது ஹஸ்ரத் நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) எழுத்தறிவற்றவர் அல்லவா? தனது கல்வித்திறத்தில் பெருமை கொண்டு உட்புற, வெளிப்புறப் பண்புகளில் இருண்டிருக்கும் ஒருவனுக்கு என்னிடத்தில் மரியாதை இல்லை. திருக்குர்ஆனைப்படித்து புத்தகங்களைச் சுமந்த கழுதையின் உதாரணத்தைச் சிந்தித்துப் பாருங்கள். இது போதாதா?

**அவர்:** இறைவெளிப்பாடு தொடர்பாக சில கேள்விகளை நான் அவரிடம் (அதாவது இந்நூலை எழுதியவரிடம்) வினவினேன். சில பொருளற்ற விடைகளைத் தந்து, அவர் மவுனமாகி விட்டார்.

**நான்:** எனக்கு நன்றாக ஞாபகமிருக்கிறது. மிகவும் பொருள் செறிந்த விடைகள் கொடுக்கப்பட்டன. ஓரளவுக்கு அறிவுள்ளவருக்கு, சீர்தூக்கிப் பார்க்கக் கூடியவருக்கு அவை போதுமானவை. ஆனால் நீங்கள் அதைப் புரியவில்லை. அதில் யாருடைய முகத்திரை கிழிந்துள்ளது? உங்களுடையதா? அல்லது வேறு யாருடையதா? அதே கேள்விகளை நீங்கள் ஏதாவது ஒரு செய்தித் தாள்களில் பிரசுரித்து, புதிய பதில்களைப் பெற்று, உங்களைப் பற்றி நீங்களே நினைத்துக் கொண்டிருக்கும் கருத்துகளை சோதித்துப் பார்த்துக் கொள்ளுங்கள்.

**அவர்:** இவ்வளவு அருமையான புத்தகங்களை இவர்தான் எழுதினார் என்பதை ஒருபோதும் நம்பமுடியாது.

**நான்:** உங்களால் எப்படி நம்ப முடியும்? புனித நபிகள் பெருமானார்





செய்வீராக! இப்படகில் ஏறிக்கொள்பவர்கள், மூழ்கிப் போகாமல் காப்பாற்றப்படுவார்கள். தொடர்ந்து மறுத்துக் கொண்டே இருப்பவர்கள், மரணத்தையே வரவழைத்துக் கொள்கிறார்கள்.' மேலும் அவன் கூறினான்: 'தனது கையை உமது கையில் ஒப்படைக்கின்றவர், உமது கையில் அல்ல, இறைவனுடைய கையிலேயே கையை ஒப்படைக்கிறார்.'

மேலும் இறைவன் இந்த நற்செய்தியையும் எனக்கு அருளியிருக்கிறான்:

'நான் உம்மை மரணிக்கச் செய்து உம்மை என்னிடம் உயர்த்திக் கொள்வேன். ஆனால், உம்மை உண்மையோடு பின் பற்றுபவர்களும் நண்பர்களும், உம்மை மறுப்பவர்களின் மீது எப்போதும் ஆதிக்கம் செலுத்திக் கொண்டு மறுமை வரையிலும் வாழ்ந்திருப்பார்கள்.'

(ஸல்) அவர்களைத் தமது கண்களாலேயே கண்ட நிராகரிப்பவர்களாலும் இவ்வாறு நம்ப முடியவில்லை. அவர்களின் உள்ளங்கள் திரையிடப்பட்டிருந்தன. புனித நபிகள் பெருமானாரின் உண்மையான தகுதிகளை அவர்களால் உணர முடியவில்லை. எனவே அன்னாரின் வாயிலிருந்து வெளிவந்த கருத்துச் செறிவுள்ள சொற்கள், படைப்பினங்களுக்கு ஓதிக் காட்டப்பட்ட திருக்குர்ஆன் ஆகிய இந்த எல்லா சொற்றொடர்களும் உண்மையில் மற்றவர்களால் இயற்றப்பட்டவையாகும். அவை இரவு பகலாக அவருக்கு கற்றுக் கொடுக்கப்படுகின்றன என்றே அவர்கள் கூறி வந்தனர்.

ஒரு அர்த்தப்படி பார்த்தால் அவிசுவாசிகளின் குற்றச்சாட்டு சரியானதுதான் அதைபோன்று மௌலவி சாஹிப் சொல்லியிருப்பதும் சரியானதுதான் கருத்துச் செறிவிலும் ஞானத்திலும் திருக்குர்ஆன் புனித நபிகள் பெருமானாரின் அறிவாற்றலுக்கு அப்பாற்பட்டது. எந்த மனிதனுடைய சிந்தனைத்திறத்திற்கும் அது அப்பாற்பட்டது. யாவற்றையும் அறிந்தவனும், மிகுந்த வல்லமையுள்ளவனுமான இறைவனைத்தவிர வேறு யாராலும் அதைக் கூற முடியாது. அவன்தான் இந்த அருள் வாக்கை ஹஸ்ரத் நபி(ஸல்) அவர்களுக்குக் கற்றுத் தந்திருக்க முடியும். இதைப்போலவே, இந்த எளியவனால் இயற்றப்பட்ட புத்தகங்களும் என்னுடைய திறமைக்கும் தகுதிக்கும் அப்பாற்பட்ட - கண்ணுக்குப் புலனாகாத இறைவனிடமிருந்து வந்த இறையுதவியின் விளைவே ஆகும். எமது நன்றியெல்லாம் இறைவனுக்கே. பராஹீனே அஹ்மதிய்யா என்ற நூலில் முன்னதாகவே

**சர்வ வல்லமையுள்ள இறைவன் நிறுவிய – சொல்லப்போனால் அவனது கையினாலேயே நிறுவிய இந்த வேலைத் திட்டத்தின் ஐந்து பிரிவுகள் இவைதாம். விஷயங்களை மேலெழுந்தவாரியாகப் பார்ப்பவர்கள், புத்தகங்களைத் தயாரிக்கும் வேலை முக்கியமானதுதான்; ஆனால், இவ்வேலைத் திட்டத்தின் மற்றப் பிரிவுகள் வீணானதும், தேவையற்றதுமாகும் என்று நினைக்கலாம். ஆனால், இறைவனின் பார்வையில் எல்லாப் பிரிவுகளும் முக்கியமானவையே. அத்துடன் தேவையானதுமாகும்.**

பதியப்பட்டுள்ள ஒரு முன்னறிவிப்பும் மவ்லவி சாஹிபின் இந்தக் குற்றச் சாட்டினால் நிறைவேறியுள்ளது.

இது இவரால் எழுதப்பட்ட நூலல்ல; மாறாக வேறொரு மக்கள் இவருக்கு உதவி செய்கின்றனர் என்று இந்நூலை படிப்பவர்கள் கூறுவார்கள் என்பதே அந்த முன்னறிவிப்பாகும். அந்நூலின் 239ஆம் பக்கத்தில் அதனைக் காணலாம்.

بل اعانه عليه قومٌ اخرون

**அவர்:** நம்பத் தகுந்தவர் என்று நான் நினைக்கின்ற செய்யது அஹ்மது அரபி என்பவர் தான் அவருடன் (அதாவது இப்புத்தகத்தை எழுதியவருடன்) இரண்டு மாதங்கள் வாழ்ந்ததாகவும், அக்கால கட்டத்தில் அவர்மீது ஆழ்ந்த பற்று கொண்டோருடன் சேர்ந்து மிக நெருக்கமான நிலையில் எல்லாச் சந்தர்ப்பங்களிலும் கவனத்தோடு ஆஜராகியிருந்து மிகவும் உன்னிப்போடு ஒவ்வொரு காரியத்தையும் ஆழ்ந்து கவனித்து வந்ததாகவும் என்னிடம் சொன்னார். அவர் (அதாவது அந்த அரபி) அவரிடம் (அதாவது இப்புத்தகத்தை எழுதுகிறவரிடம்) ஜோதிடக் கணிதக் கருவிகள் இருந்ததையும். அவர் அவற்றை உபயோகித்து வந்ததையும் கண்டுள்ளார்.

**நான்:**

تعالوا ندع ابناء نا وابناء كم ونساء نا و نساء كم وانفسنا وانفسكم

ثمّ نبتهل فنجعل لعنة الله على الكذبين

வாருங்கள், நாம் எங்களுடைய பிள்ளைகளையும், உங்களுடைய பிள்ளைகளையும், எங்களுடைய மனைவிகளையும் உங்களுடைய மனைவிகளையும் எங்களின் மக்களையும் உங்களுடைய மக்களையும்





**இத்திட்டத்தின் ஐந்து பிரிவுகளையும் பயன்படுத்தாமல் வேறு வழிகளில், இறைவன் தொடங்கி வைத்துள்ள இப்பெரும் சீரமைப்புப் பணியைச் செயல்படுத்த முடியாது. இத்திட்டத்திற்கு விசேஷமான உதவி வாக்களிக்கப்பட்டிருக்கிறது என்பதும் உண்மையே. இத்திட்டம் இறைவனின் தனிப்பட்ட அருளையும் உதவியையும் சார்ந்தே நிற்கிறது. எனினும், இறைவனின் கட்டளைகள் அவனிடமிருந்து பெற்ற குறிப்புகள் ஆகியவற்றின் அடிப்படையிலும் எல்லா முஸ்லிம்களையும் நோக்கி இதற்கு**

அழைத்து வைத்துக்கொண்டு சத்தியம் செய்து பொய்யர்கள் மீது அல்லாஹ்வின் சாபம் உண்டாவதாக எனப் பிரார்த்திப்போம். (திருக்குர்ஆன் 3:62 காண்க)

இறைவனின் வசனங்களின் மூலமாக நான் எடுத்து எழுதியிருப்பதே உண்மையில் என் சார்பாக உள்ள பதிலாகும். என்னோடு இரண்டு மாதங்கள் இருந்த இந்த செய்யது அஹ்மதை எனக்கு ஒருபோதும் ஞாபகத்தில் இல்லை. அவரை என் முன்னிலையில் கொண்டுவந்து நிறுத்தவேண்டியது மௌலவி சாஹிபின் பொறுப்பாகும். அவர் என்னிடம் எந்தக் கருவியைக் கண்டார் என்ற கேள்வியை நாம் அவரிடம் கேட்போம். ஆயினும் இவையெல்லாம் எதற்கு? நான் உயிரோடு தானே இருக்கிறேன்! மௌலவி சாஹிப் என்னிடம் நேரில் வந்து இரண்டு மாதங்களுக்கு என்னுடன் தங்கி நடப்பனவற்றை அவரே பார்க்கட்டும். இதைச் செய்வதற்கு இடையில் அரபியோ அரபியல்லாதவரோ நமக்குத் தேவையில்லை.

**அவர்:** அவருக்குக் கிட்டியதாகச் சொல்லப்படும் இறை வெளிப்பாடுகளை நான் படித்து அவற்றைப் பற்றிச் சிந்தித்துப் பார்த்ததில் அவை இறைவெளிப்பாடுகள் என்ற நம்பிக்கையே எனக்கு ஒருபோதும் வரவில்லை.

**நான்:** புனித நபிபெருமானார் காலத்திலிருந்த அவிசுவாசிகளுக்கும் நம்பிக்கை வரவில்லை. சர்வவல்லமையுள்ள இறைவன் அவர்களைக் குறித்து இவ்வாறு கூறியிருக்கவில்லையா?

كَذَّبُوْا بِاٰيٰتِنَا كِذَّابًا

அவர்கள் நம்முடைய வசனங்களைப் பொய்யாக்கிக் கொண்டே இருந்தார்கள். (78:29) ஃபிர் அவ்னுக்கு நம்பிக்கை வரவில்லை. வேதபாரகர்களுக்கும், பரிச்சேயர்களுக்கும் நம்பிக்கை வரவில்லை. அபூஜஹ்லுக்கும், அபூலஹபுக்கும் நம்பிக்கை வரவில்லை. ஆனால்

**உதவும்படி அழைப்பு விடுக்கப்பட்டிருக்கிறது. கடந்தகால நபிமார்கள் கஷ்டங்கள் வரும் காலங்களில் தமது வேலைத் திட்டத்திற்கு உதவும்படி அவர்கள் எப்போதும் மக்களுக்கு அழைப்பு விடுத்தே வந்திருக்கிறார்கள். அவர்களைப் பின்பற்றியே நானும் கூறுகிறேன்.**

ஏழைகளுக்கும், உளத்தூய்மை கொண்டவர்களுக்கும் நம்பிக்கை வந்தது.

ایں سعادت بزور بازو نیست : تا نہ بخشد خدائے بخشندہ

அருளாளனாகிய அவனே அருளாத வரையிலும் ஒருவனுடைய சொந்தத் தசை வலிமையினால் இந்த அருள் கிட்டுவதில்லை.

**அவர்:** வாதிப்பது, அடையாளங்கள் காட்டுவதற்கு முரண்பாடாக இருக்கிறது. சந்தேகிப்பவர்கள் நேரில் வந்து காணலாம் என்பது அபத்தமான வாதமாகும்.

**நான்:** என்னுடைய வாதங்கள் உண்மையில் என்னுடையதல்ல. எந்த ஒரு வாதத்தையும் அறிவிப்பதற்கு தகுதியுடையவன் எவனோ அவனுடைய சார்பிலேயே அவை அமைகின்றன. பின்னர் உண்மையை நேசிக்கும் எவர்தான் இந்த வாதங்களை அபத்தம் என்று கூற முடியும்? இயற்கைக்கு அப்பாற்பட்ட சக்திகளைக் குறித்த வாதங்களை நபிமார்கள் கூட வாதிக்கவில்லை என்பது உண்மையே. ஆனால் அத்தகைய வாதங்களை ஒரு நபியின் மூலமோ, ரசூலின் மூலமோ முஹத்தஸ் ( இறைவனுடன் உரையாடுபவர்) மூலமாகவோ கூட இறைவனால் செய்ய முடியாதா என்ன?

**அவர்:** அவரை நான் சந்தித்த பிறகு அவரிடத்தில் எனக்கு விசுவாசம் அற்றுப்போய்விட்டது. அவரை (அதாவது இந்நூலை எழுதுகிறவரை) சந்திக்கும் ஒவ்வொருவனும் - ஏக இறைவனிடத்தில் விசுவாசம் கொண்ட ஒவ்வொருவனும் இதைப் போன்றே அவரிடத்தில் விசுவாசம் இழந்துவிடுவான். தனது தினசரித் தொழுகைகளைக் காலதாமதப் படுத்தி- மிகவும் தாமதப்படுத்தித் தொழுகிறார். ஜமாஅத்தாகத் தொழுவதைக் கடை பிடிப்பதில்லை.

**நான்:** மௌலவி சாஹிப் என்னிடத்தில் விசுவாசம் இழந்து விட்டார் என்பதை நான் பொருட்படுத்தப் போவதில்லை. ஆனால் பொய் கூறல், திரித்துக் கூறல், அளவுக்கதிகமான தப்பெண்ணம் கொள்ளல், இவற்றை அளவு கடந்த முறையில் கைக்கொண்டிருப்பது எனக்கு ஆச்சரியத்தைத்





**இத்திட்டத்தின் ஐந்து பிரிவுகளிலும் வேலையைத் துரிதப்படுத்தி மேம்படுத்துவதற்காக அனைத்து முஸ்லிம் பொது மக்களிடமிருந்தும் எந்த அளவில் உதவி தேவைப்படுமென்பது மிகவும் தெளிவான விஷயமாகும். உதாரணத்திற்கு புத்தகங்கள் போன்றவற்றைத் தொகுக்கும் வேலையை எடுத்துக் கொள்ளுங்கள்.**

தருகிறது. இறைவனே! புனித நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் இந்த உம்மத்தின் மீது இரக்கம் காட்டுவாயாக! இவர்களின் தலைவர்களும், வழிகாட்டிகளும் நண்பர்களும் இத்தகைய மௌலவிகளாக இருக்கிறார்களே!

மௌலவி சாஹிபின் இக் குற்றச்சாட்டை வாசகர்கள் யோசித்துப் பார்க்கட்டும். அதிகப்படியான பொறாமையாலும் காழ்ப்புணர்ச்சியாலுமே இக்குற்றச்சாட்டு எழுந்திருக்கிறது, நான் அலிகாரில் ஒரு சில நாட்கள் பயணியாக இருந்தேன் என்பது மிகவும் தெளிவு. இஸ்லாமிய ஷரீஅத்தால் பயணிகளுக்கு அனுமதிக்கப்பட்டுள்ள சலுகைகளை நான் கடைபிடிப்பதற்குக் கட்டுப்பட்டவனாக இருக்கிறேன். இந்தச் சலுகைகளிலிருந்து நிரந்தரமாக முகந்திருப்புவது மார்க்கத்தை புறக்கணிக்கும் செயலாகும். நான் என்ன செய்திருக்க வேண்டுமோ அதையே நான் செய்தேன். நான் அங்கு ஒரு சில தினங்கள் தங்கியிருந்தபோது சுன்னத்தின்படி இரண்டு வேளைத் தொழுகைகளை ஜம்வு செய்து (சேர்த்து) தொழுதேன் என்பதை நான் மறுக்கவில்லை. இவ்வாறு தொழுவது சுன்னத் ஆகும். நான் லுஹர் நேரத்தின் பிந்திய பகுதியில் லுஹர் தொழுகையையும், அஸர் தொழுகையையும் சேர்த்து தொழுதிருக்கிறேன். பயணம் செய்யாதிருக்கும் போதும், மழை தடுத்து நிறுத்தாத போதும் பொதுவாகக் கண்டிப்பான குணமுள்ள விசுவாசிகள், தாம் வீட்டில் இருக்கும் போது கூட தொழுகைகளைச் சேர்த்துத் தொழுகிறார்கள்.

இந்தச் சில நாட்களில் எல்லாத் தொழுகை வேளைகளிலும் நான் பள்ளிவாயிலில் ஆஜராக இருக்கவில்லை என்பதை நான் மறுக்கவில்லை. உடல் நலமற்றிருந்த போதிலும் பயணம் செய்தவனாக இருந்தபோதிலும் நான் எப்போதுமே பள்ளிக்குச் செல்லாமலும் இருந்ததில்லை. வெள்ளிக்கிழமை தொழுகைகளை நான் அவருக்குப் பின்னல் நின்றும் தொழுதேன் என்பது மௌலவி சாஹிபுக்குத் தெரியும். இது முறையானதா என்று இப்போது எண்ணிப் பார்க்கின்றேன். பயணம் செய்து கொண்டிருக்கையில் பள்ளி வாயில்களுக்குச் சென்று தொழுவதை நான் எப்பொழுதும் தவிர்க்கிறேன் என்பது உண்மையாகும். ஆனால் அதற்குக் காரணம் சோம்பேறித்தனமோ அல்லது இறை கட்டளைகளை அற்பமாகக்

முழுமையாக பிரசுரிப்பதற்கான இந்தப் பணியை நாம் பொறுப்பேற்றால் அதை நிறைவேற்றுவதற்கு என்னென்ன பொருளாதார வழிவகைகள் நமக்குத் தேவைப்படும் என்பதை சிந்தித்துப் பாருங்கள். மிகப் பரந்த அளவில் புத்தகங்களைச் சுற்றுக்கு விடுவதில் நாம் ஆர்வமுடையவர்களாயிருந்தால், மிகவும் தேவையுள்ளவர்களுக்கு கூடியவரையிலும் குறுகிய காலத்தில் ஏராளமான புத்தகங்கள் போய்ச் சேரும்படி நாம் பார்த்துக் கொள்ள வேண்டும்.

நம்முடைய புத்தகங்கள் போதிய ஆராய்ச்சிக்குப் பிறகும், கருத்துக்களை முழுமையாக அலசி ஆராய்ந்த பிறகும்தான் தொகுக்கப் படுகின்றன. உண்மையைத் தேடுபவர்களை, உண்மையின் வழியில் ஈர்க்கும் வகையிலே அவற்றிற்கு வடிவம் கொடுக்கப்படுகின்றன. தீய போதனைகளால் பாதிக்கப்பட்டு

கருதுவதோ அல்ல - நவூதுபில்லாஹ் (அவ்வாறு நடந்து கொள்திலிருந்து நாம் அல்லாஹ்விடம் பாதுகாப்புத் தேடுகிறோம்.)

துரதிருஷ்டவசமாக, நம்முடைய நாட்டில் பெரும்பாலான பள்ளிவாயில்கள் மிக மோசமான நிலையில் இருக்கின்றன. இத்தகைய பள்ளிவாயில்களில் ஒருவர் தொழுகையை முன்னின்று நடத்த விரும்பினால், அங்கு வேலையில் அமர்த்தப்பட்டிருக்கும் இமாம்கள் அதனைப் பரந்த மனப்பான்மையுடன் பொறுத்துக் கொள்வதில்லை. அவர்கள் அதிக கோபமடைகின்றனர்; விழி பிதுங்கி விடுகின்றனர். நியமிக்கப்பட்ட ஓர் இமாமின் பின்னால நின்று தொழ ஒருவர் முடிவு செய்தால் தொழுகைகள் ஒழுங்குடன் நிறைவேற்றப்படுகிறதா என்பது பற்றி நான் சந்தேகப்படுகிறேன். ஏனெனில் தொழுகைகளில் முன்னின்று தொழுவது இந்த இமாம்களுக்கிடையில் ஒரு வியாபாரமாகவே ஆகியிருக்கிறது என்பது எவ்வொருவருக்கும் நன்றாகத் தெரிந்திருக்கிறது. ஒரு நாளில் ஐந்து முறைகள் அவர்கள் தொழுகை இல்லத்தில் நுழையவில்லை; மாறாக அந்த நேரங்களில் சென்று திறக்கும் ஒரு கடையாக அது இருக்கின்றது. அந்த வருவாயைக் கொண்டே அவர்களும் அவர்களின் குடும்பத்தவர்களும் வாழ்கிறார்கள். குறிப்பிட்ட ஒருவர் இமாமாகத் தொடர்ந்து இருப்பதா, தொடர்ந்து இருக்கக் கூடாதா என்ற தகராறு கிளம்பும் போதெல்லாம் கட்சிக்காரர்கள் நீதிமன்றத்துக்குப் போகிறார்கள் மௌலவி சாஹிபுகள், இமாம்கள் என்ற தமது பதவியைக் காக்கும் பொருட்டு சட்டபூர்வமான தீர்ப்பைப் பெறுவதற்காக அப்பீலுக்குமேல் அப்பீல் செய்கிறார்கள்.





அழிவுக்குள்ளாக்கும் நோய்களில் பீடிக்கப்பட்டவர்களுக்கு அல்லது ஏறக்குறைய ஆன்மீக மரணத்தை நெருங்கியவர்களுக்கு அவை அதிகமாக சென்றடைய வேண்டும். தவறான வழிகாட்டல் என்னும் விஷத்தினால் மிகவும் அபாயகரமாக பாதிக்கப்பட்டுள்ள நாடுகளுக்கும் உண்மையை ஆராய்வதில் ஆர்வமுள்ள அனைவருடைய கைகளிலும் நமது புத்தகங்கள் விரைந்து போய்ச் சேர வேண்டும்.

விற்பனையின் மூலமாக மட்டுமே நாம் நமது புத்தகங்களையும், பிரசுரங்களையும் மக்கள் மத்தியில் பரவ விடுவதென்று முடிவு கட்டினால் இந்த நோக்கத்தை நிறைவேற்ற முடியாது. எப்படிப் பார்த்தாலும் இத்தகையதொரு விஷயத்தில் வியாபார நோக்கு தகுதியற்றதாகவும் ஆட்சேபணைக்குரியதாகவும் தோன்றுகிறது. இந்த வியாபார விதிக்கு நம்மை நாமே கட்டுப்படுத்திக் கொண்டால்

உண்மையான உயிர்த் துடிப்போடு தொழுகைகளை முன்னின்று நடத்தும் இமாமத்து இதுவல்ல. இது இமாமத்தை விட்டே அப்பால் விலகி தடுக்கப்பட்ட வழியில், மிகவும் வெறுக்கத்தக்க வழியில் வாழ்வதாகும். இதைப்போலவே, தாங்களும் ஒரு குறுகிய தன்னலத் தொழில் முயற்சியில் ஈடுபட்டிருக்கவில்லையா? நிலைமை இவ்வாறு இருக்கையில் ஒருவர் அறிந்து கொண்டே தன் ஈமானை எவ்வாறு வீணாக்குவது? பள்ளிவாயில்களில் நயவஞ்சகர்கள் ஒன்று சேர்வதை கடைசி காலத்தின் நிலைமைகளாக ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் ஹதீஸுகளில் கூறப்பட்டிருக்கிறது. அந்த முன்னறிவிப்பு இந்த முல்லாக்களைப் பற்றியே ஆகும். அவர்கள் தொழவைக்குமிடத்தில் நின்றுகொண்டு நாவினால் திருக்குர்ஆனை ஓதுகின்றனர். ஆனால் உள்ளத்தில் சாப்பாட்டைப் பற்றி நினைத்துக் கொண்டிருக்கின்றனர்.

பயணங்களில் லுஹர்,அஸர் தொழுகைகளையும் அல்லது மக்ரிப், இஷா தொழுகைகளையும் சேர்த்துத் தொழுவது எப்போதும் அனுமதிக்கப் பட்டதாகவே இருந்து வருகிறது. இந்த அனுமதி எப்போது தள்ளுபடி செய்யப்பட்டது என்பது எனக்குத் தெரியவில்லை! தொழுகை வேளைகளின் பிந்திய பாகத்தில் தொழுவதை ஹராம் (தடுக்கப்பட்டது) என யார் ஃபத்வா (மார்க்கத் தீர்ப்பு) கொடுத்தார் என்பதும் எனக்குத் தெரியவில்லை! புறம்பேசுதலை நீங்கள் ஹலால் என்று கருதுகிறீர்கள். ஆனால், ஒரு பயணி லுஹர் - அஸர் தொழுகைகளை அல்லது மக்ரிப்- இஷா தொழுகைகளைச்

நமது புத்தகங்களை எந்த அளவுத் திட்டத்திலும் விரைவாக நம்மால் பிரசுரிக்கவும் முடியாது. நியாயமான அளவில் குறுகிய காலத்தில் பெருமளவு வாசகர்களுக்கு அவை போய்ச் சேரும்படி செய்யவும் முடியாது. புத்தகங்களை இலவசமாக வழங்குவதன் மூலம் இருபது தினங்களுக்குள் ஒரு இலட்சம் பிரதிகளை மிக தொலைவிலுள்ள நாடுகள் வரை கொண்டு சேர்க்க முடியும். நமது புத்தகங்கள் எல்லா இடங்களுக்கும் ஏறத்தாழ மக்களின் எல்லாப் பிரிவினருக்கும் - உண்மையை அறிந்துகொள்ள ஆர்வத்துடனிருக்கும் யாவருக்கும் போய்ச் சேர்ந்திருக்கின்றன என்ற நிச்சயமும் நமக்கு ஏற்படும்.

நமது புத்தகங்களுக்கு ஒரு விலையைக் குறிப்பிடுவதனால் 20 வருடக் காலத்தில்கூட நாம் இதைச் செய்து முடிக்க முடியாது போகலாம். புத்தகங்களுக்கு விலை வைப்பதால் நமது புத்தகங்களை ஓரிடத்தில் ஒன்று திரட்டி வைத்துக்கொண்டு அவற்றை வாங்கக்கூடியவர்களை- இவர்கள் ஒருவேளை வரலாம் அல்லது வராமலும் போகலாம் - எதிர்பார்த்துக் காத்துக் கொண்டிருக்க வேண்டியது நேரும். இவ்வாறு காத்திருக்கும் காலத்தில் புத்தகங்களை விட்டுவிட்டு இவ்வுலகிலிருந்தே நாம் மறைந்துபோக நேரலாம் என்பதுவும் சாத்தியமே. எனவே, நமது நோக்கத்திற்கு விற்பனைமுறை இணக்கமாக இராது. அது நம்முடைய புத்தகங்கள் மக்களின் மத்தியில் பரவுவதை மிக மோசமாகத் தடுத்து நிறுத்தி நமது உண்மையான குறிக்கோளை அழித்து நமது செயல் திட்டத்தைப் பல நூற்றாண்டுகளுக்கு பின்தங்கச் செய்துவிடும். புத்தகங்களைப் பணம் கொடுத்து வாங்கி அவற்றை இலவசமாக வழங்குவதற்கு, தம் தகுதியை

சேர்த்துத் தொழுவது ஹராம் என்கிறீர்கள். இது எனக்கு மிகுந்த வியப்பைத் தருகிறது.

اتقوا الله ايها المُوَحِّدُوْنَ فان المَوت قَرِيْب والله يعلم ما تكتمون

ஓரிறை கொள்கை கொண்டவர்களே! ஏக இறைவனுக்கு அஞ்சுங்கள்; ஏனெனில் மரணம் அருகில் இருக்கிறது, மேலும் நீங்கள் மறைக்க முயலும் ஒவ்வொன்றையும் அல்லாஹ் நன்கறிவான். (3 ஆம் அடிக்குறிப்பு முடிவுற்றது.)





அடிப்படையாகக் கொண்டு அல்லாஹ்வுக்காக இக்காரியத்தை செய்வதற்கு எந்த ஒரு பணக்கார முஸ்லிமும் முன்வரவில்லை. கிறிஸ்தவ மிஷனரி சங்கங்களைப் போன்று - இத்தகைய காரியங்களில் முன் வந்து வேலையைச் செய்யக்கூடிய - ஒரு சங்கமும் முஸ்லிம்களிடமில்லை. ✸(அடிக்குறிப்பு 4)

வாழ்நாள் குறுகியது. ஆதலால் இவ் வேலையை முடிப்பதற்காகக் காலவரையின்றிக் காத்துக்கொண்டிருப்பதற்கு நம்மால் வகை செய்ய முடியாது.

எனவே நான் இயற்றுகின்ற எனது நூல்களில் பெரும் பகுதியை இலவசமாக விநியோகம் செய்ய வேண்டுமென்றே நியமித்திருக்கிறேன். அதன் மூலம் உண்மை எனும் ஒளியினால் நிரம்பியிருக்கும் இந்நூல்கள் கூடிய விரைவில் உலகத்தில் பரவ வேண்டும். ஆனால் இந்த மாபெரும் சுமையை நான் தன்னந்தனியாக சுமக்கும் வகையில் எனது சொந்தப் பொருள் வசதி இந்நோக்கத்திற்குப் போதியதாக இல்லாததாலும், செயல் திட்டத்தின் மற்ற பிரிவுகளின் செலவினங்களும் என்னை அழுத்தித் தாக்குவதாலும் புத்தகங்கள் பிரசுரித்தல் போன்ற பணிகள் ஓரளவுக்கு நடைமுறையில் இருந்த பிறகு நிறுத்த வேண்டியதாகி விட்டது. இன்றுவரை அது அப்படியேதான் இருக்கிறது.

இறைவனின் பார்வையில் இந்த எல்லா ஐந்து பிரிவுகளும் முக்கியமானவையே. செயல் திட்டத்தின் பாகங்கள் என்ற

✸அடிக்குறிப்பு4: பிரிட்டானிய வெளிநாட்டு பைபிள் சங்கம் தொடங்கிய காலத்திலிருந்து - அதாவது கடந்த 21 வருட காலகட்டத்தில் - கிறிஸ்தவ மதத்தை ஆதரித்து ஏழு கோடிக்கும் அதிகமான புத்தகங்களை அச்சிட்டு உலகம் முழுவதும் பரப்பியிருக்கிறார்கள். இவ்விஷயம் 1890 அக்டோபர் நவம்பர் மாதச் செய்திப் பத்திரிகைகளில் வெளிவந்திருக்கிறது. தற்காலத்திய செல்வச் செழிப்பும் சோம்பேறித்தனமும் ஒருங்கே கொண்ட முஸ்லிம்கள் இதனைக் கவனத்தோடு படித்து வெட்கப்படவேண்டும் எவ்வளவு பெரும் எண்ணிக்கையான புத்தகங்கள்! புத்தகங்களைப் பிரசுரிக்கும் தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களின் வேலையா இது? அல்லது தம் மதத்தின் பேரிலுள்ள ஆர்வத்தினால் புத்தகங்களை இவ்வாறு இலவசமாக விநியோகிக்கும் பணியைத் தாமே மேற்கொண்டுள்ள பற்றுறுதிகொண்ட ஒரு தேசிய ஸ்தாபனத்தின் வேலையா?

முறையில் அவை ஒவ்வொன்றும் சம அளவில் நிர்வகிக்கக் கூடிய தகுதி உடையவைகளே. ஆனால் இந்த ஐந்து பிரிவுகளில் ஈடுபடுத்தப்படும் செலவுத் தொகை ஒரு பெருந்தொகையாகும். இவ்விஷயத்தில் ஈடுபாடு காட்டுபவர்களின்- நேர்மையாக சந்தா செலுத்துவோரின் - விசேஷ ஆர்வமும் உன்னிப்பான கவனமும் அதற்குத் தேவை. மார்க்கம் சம்பந்தப்பட்ட இந்த வேலைக்குத் தேவைப்படுவன யாவற்றையும் நான் விளக்குவதென்றால் அது நீண்டுவிடும். ஆனால், எனது சகோதரர்களே! இங்கு வந்து செல்கின்ற மக்களைப் பற்றி மட்டுமே உதாரணத்திற்கு நீங்கள் சிந்தித்துப் பாருங்கள்! இவர்கள் யாவருக்கும் வசதி செய்து தரப்படவேண்டும். கடந்த ஏழு வருடங்களாக ஏறத்தாழ 60,000 அல்லது அதற்கும் அதிகமானோர் என்னிடம் வந்திருக்கிறார்கள். இத்தகைய பெரும் எண்ணிக்கையில் நம்மை தேடிவரும் விருந்தினரை உபசரிப்பதற்கு எவ்வளவு பெருந்தொகை செலவிடப் பட்டிருக்கவேண்டும். வெப்பமான கால நிலையிலும் குளிரான கால நிலையிலும் அவர்களின் வசதிக்காக அவசியமான முறையில் என்னென்ன நாம் செய்திருக்க வேண்டியிருந்திருக்கும் என்பதையும் உங்களால் அனுமானிக்க முடியும்.

இவ்வளவு பெரும் எண்ணிக்கையில் வரும் பார்வையாளர்களுக்கு கடந்த வருடங்களில் எவ்வாறு, என்ன வழிவகைகளைக் கொண்டு வசதி செய்தி கொடுக்கப்பட்டது என்றும் அது இன்னும் எவ்வாறு தொடர்ந்து நடைபெறுகிறது என்றும் தொலைநோக்குப் பார்வையுடையவர்கள் வியப்போடு எண்ணிப் பார்ப்பார்கள். அவ்வாறே அந்த 20,000 கைப் பிரதிகளை ஆங்கில மொழியிலும், உருது மொழியிலும் அச்சிட்டு வெளியிடுவதற்குரிய பொருள் வசதி எங்கிருந்து வந்தது? எதிர்க்கின்ற கூட்டங்களைச் சார்ந்த ஏறத்தாழ 12,000 தலைவர்களுக்கு இப்பெருமளவு பிரசுரங்களை அனுப்பிக் கொடுப்பதற்கு ஆன பதிவுத் தபால் செலவையும் இத்துடன் சேர்த்துக் கொள்ளுங்கள். இந்நாட்டிலுள்ள ஒவ்வொரு கிறிஸ்தவ மதக் குருவுக்கு அவருடைய பெயரில் பிரசுரம் அனுப்பித் தரப்பட்டு விட்டது. ஐரோப்பாவிலும், அமெரிக்காவிலுமுள்ள மக்கள் கூட இப்பிரசுரத்தைப் பதிவுத் தபாலில் பெற்றுக் கொண்டார்கள். மிக அற்பமான வழிகளைக் கொண்டே இப்பெரும் வேலை தொடர்ந்து





நடைபெறுகிறது என்பது ஆச்சரியமல்லவா? ஆயினும் பெரிய வேலைகளை மட்டுமே நான் இங்கு குறிப்பிட்டிருக்கிறேன். பார்வைக்கு மிகச் சிறிய வேலையைப் போலத் தோன்றும் கடிதப் போக்குவரத்து கூட ஒவ்வொரு மாதமும் ஒரு குறிப்பிடத்தக்க அளவுக்குப் பொருட் செலவை உண்டாக்குகிறது. வருங்காலத்தில் இது எவ்வாறு தொடர்ந்து நடைபெறும் என்பது எனக்குத் தெரியாது. நான் அறிந்த வேறு எந்த இடத்திலிருந்தும் எனக்கு உதவி கிடையாது.

அடுத்து, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் காலத்தில் அஸ்ஹாபுஸ் ஸுஃப்பா செய்ததைப்போல- மார்க்கம் சம்பந்தமான விஷயங்களைக் காது கொடுத்துக் கேட்டு அவற்றைக் கற்றுக் கொள்வதற்காகவே இங்கு வந்து என்னோடு நிரந்தரமாக வாழ்பவர்களும் இருக்கிறார்கள். அவர்களின் செலவினங்களுக்காகவும் நான் வானத்தையே பார்க்க வேண்டியதிருக்கிறது. வேலைத் திட்டத்தின் ஐந்து பிரிவுகளையும் நடத்துவதற்கான வழிவகைகள் உருவாக்கப்படும் என்பதும் எனக்குத் தெரியும். யாருடைய விசேஷ கட்டளையினால் இவ்வேலைத் திட்டம் நடைமுறைக்குக் கொண்டு வரப்பட்டதோ அந்த வல்லமை மிக்க இறைவனாலேயே அவை தொடர்ந்து செயல்படுத்தப்படும். ஆனால் தூதுச் செய்தியை எட்டவைக்கும் நோக்கத்தில் அதை சமுதாயத்திற்குத் தெரிவிப்பது அவசியமானதாகும்.

சிலர் உண்மையான விவரங்களைச் சரியாக அறியாததால் நான் ஏறத்தாழ 3000 ரூபாயை பராஹீனே அஹ்மதிய்யாவுக்குக் கிரயத் தொகையாகப் பெற்றுக் கொண்டதாகவும், சந்தாவாகப் பெற்றுக் கொண்டதாகவும் ஆனாலும் புத்தகத்தின் எல்லாப் பாகங்களும் இன்னும் பிரசுரிக்கப்படவில்லை என்றும் என் பேரில் குற்றம் சுமத்துவதாகக் கேள்விப்பட்டிருக்கிறேன்.

இதற்குப் பதில் கூறுமுகமாக நான் இவ்விஷயத்திற்கு விளக்கம் தர விரும்புகிறேன். மக்களிடமிருந்து கிடைத்த பணம் 3,000 ரூபாயல்ல. ஏறத்தாழ 10,000 ரூபாய் அல்லது அதற்கும் அதிகமாகும். இது புத்தகங்களை வாங்குவதற்காகவோ சந்தா

தொகையாகவோ செலுத்தப்பட்டதல்ல. மாறாக, துஆவுக்காக வேண்டியவர்கள் அன்பளிப்பாகக் கொடுத்துள்ளார்கள். எமது பேரிலுள்ள நேசம் காரணமாக எங்களுக்கு உதவிய நண்பர்களிடமிருந்து ரொக்க நன்கொடையாகவும் இப்பணம் வந்தது. ஆயினும் இப்பணம் முழுவதும் இந்த வேலைத் திட்டத்தின் அடிப்படையிலேயே செலவு செய்யப்பட்டது.

புத்தகம் தயாரிக்கும் வேலை வருங்காலத்தை உணர்ந்த இறைவனால் இக்காலகட்டத்தில் நிறுத்தி வைக்கப்பட்டு விட்டது. அத்துடன் இதற்கான பணத்தையும் இத்தருணத்தில் திரட்ட முடியாது. ஏனெனில் நம் கைக்குக் கிடைத்துள்ள நிதி,வேலைத் திட்டத்தின் மற்றப் பிரிவுகளை நிர்வகிப்பதற்காகச் செலவிடப்படுகிறது. புத்தகத்தைப் பிரசுரிப்பதிலே ஏற்பட்ட காலதாமதம் ஞானமிக்க இறைவனின் ஒரு வேலைதான். இது சிக்கல் மிகுந்த விஷயங்களை முழுமையாகப் புரிந்து கொள்வதற்கான நேரத்தை எனக்குத் தந்தது. அத்துடன் விரோத எண்ணங் கொண்ட குற்றங்குறை கூறுவோருக்கு இப்புத்தகத்தைப் பற்றிச் சொல்வதற்கு முழு நேரமும் கிடைத்தது.

எது எப்படியிருப்பினும் புத்தகங்களைத் தயாரிக்கும் பணிக்குத் திரும்பியபோது உதவுவதற்காக விடுக்கப்படும் இந்த அழைப்பை உடனடியாகத் தொடுப்பது பற்றி இறைவன் எனக்கு கவன மூட்டினான். எனவே நான் ஒவ்வொருவரையும் நோக்கி அழைப்பு விடுத்துப் புத்தகங்களைத் தயாரிக்கும் வேலை தொடர்ந்து நடக்க வேண்டுமென்று கூறுகிறேன். பராஹீனின் ஒரு பெரும் பகுதி அச்சாக வேண்டியதிருக்கிறது. அச்சகத்திலிருந்து இது வந்ததும் ஏற்கெனவே பொருள் தந்திருப்போருக்கும் அல்லாஹ்வுக்காக இப்புத்தகத்தின் முதல் பாகம் எவர்களுக்கெல்லாம் அனுப்பப்பட்டுள்ளதோ இனி வரும் பாகங்களும் அனுப்பித் தரப்படும் என எவர்களுக்கு வாக்குறுதி கொடுக்கப்பட்டுள்ளதோ அப்படிப்பட்ட அனைவருக்கும் பிரதிகள் அனுப்பி வைக்கப்படும். அவ்வாறே மற்றப் புத்தகங்களும் எம் கருத்தில் உள்ளன. ஷஹாதத்துல் குர்ஆன், ஸிராஜுல் முனீர், தஜ்தீதே தீன், அர்பயீன் ஃபீ அலாமாத்தில் முகர்ரபீன் ஆகியவற்றை உதாரணமாகக்





காட்டலாம். திருக்குர்ஆனுக்கு ஒரு விரிவுரை வெளியிட வேண்டுமென்று விருப்பமும் இருக்கிறது. கிறிஸ்தவ மதம் போன்ற பொய்யான மதங்களின் அபத்தங்களைப் பற்றி விளக்குவதுடன் அவர்களின் பத்திரிகைகள் போன்றவற்றில் தொடர்ந்து பிரசுரிக்கப்பட்டு வரும் குற்றச்சாட்டுகளுக்குத் தகுந்த பதில் அளிப்பதற்கு ஒரு மாதப் பத்திரிகையை வெளியிட்டுவரவும் உள்ளம் விரும்புகிறது.

ஒரு சரியான மூலதனமும், அதிலிருந்து மீண்டும் கிடைத்துக் கொண்டிருக்கும் பொருள் உதவியும் இருந்தால் மட்டுமே இத்திட்டங்களை நம்மால் நெடுங்காலம் நிலைத்து நிற்கும் அடித்தளத்தின் மீது பொருத்த முடியும். ஓர் அச்சகம், நம்முடைய வேலைகளையே கவனிக்கக் கூடிய பொறுப்பை எடுக்கும் ஒருவர், இதன் தொடர்புள்ள மற்ற காரியங்கள்– அதாவது காகிதம், இதர பணியாட்கள் போன்ற விஷயங்கள் இவை யாவற்றையும் நம்மால் ஏற்படுத்திக் கொள்ள முடியுமானால் நமது வேலைத் திட்டத்தின் ஐந்து பிரிவுகளில் ஒன்றை முழுமையாக வளர்ச்சியடையச் செய்வதற்கு கணிசமான ஏற்பாடு ஆகிவிடும்.

இந்த நாட்டைப் பற்றிக் கூறுகிறேன். இந்தியாவே! உன்னிடம் பொருள் வசதி படைத்த – குறைந்த பட்சம் இந்த ஒரு பிரிவுக்கு ஆகும் செலவை மட்டுமாவது தானே ஏற்றுக் கொள்வதற்கு முன்வரும் அளவுக்கு தைரியமுள்ள செல்வந்தர் ஒருவர் கூட இல்லையா? ஐந்து நல்ல நம்பிக்கை கொண்டவர்கள் இந்த காலத்தைப் புரிந்து கொண்டால், இந்த ஐந்து பிரிவுகளையும் தத்தமது சொந்த பொறுப்பில் ஏற்று நடத்தலாம். இறைவனே! உறங்கிக் கொண்டிருக்கும் இந்த உள்ளங்களை உனது கைகளாலேயே தட்டி எழுப்புவாயாக. இஸ்லாம் அவ்வளவு ஏழ்மையானதல்ல. உள்ளத்திலும் உறுதிப்பாட்டிலும் அது ஏழ்மையானதாய் இருக்கின்றதே தவிர திறமையிலும் மூலப்பொருள் வளத்திலும் அது ஏழையல்ல. செலவினத்தின் முழுப் பகுதியையும் தந்துதவ முடியாதவர்கள் இருக்கிறார்கள். அவர்களும் இத்திட்டத்திற்கு உதவ முடியும். ஒவ்வொரு மாதமும் ஒழுங்காக, அவர்களால் முடிந்த அளவுக்குப் பண உதவியைத் தாராளமாகச்

செலுத்த முடியும். வேலைத் திட்டத்திற்குரிய நிதியில் இத்தொகைகள் வரவு வைக்கப்படும்.

சோம்பியிருப்பதும், இரண்டுங் கெட்டானாயிருப்பதும் அவநம்பிக்கை கொள்வதும் மார்க்கம் சம்பந்தமான ஒரு காரியத்துக்கு உதவாது. தப்பெண்ணம் குடும்பங்களின் அமைதியை அழித்து விடுகிறது. உள்ளங்களைப் பிரித்து விடுகிறது; எவர்கள் நபிமார்களின் காலத்தைப் பெற்றார்களோ அவர்கள் மார்க்கத்தைப் பரப்புவதற்காக எத்தகைய தியாகங்களைச் செய்தனர்! இவ்விஷயத்தில் செல்வந்தர்களும் ஏழைகளும் ஒன்றாகவே பங்கெடுத்தார்கள். ஒரு செல்வந்தர் தனது உடைமைகளை இழந்தால், ஒரு பிச்சைக்காரனும் அதற்குச் சமமாகத் தனது பிச்சைப் பாத்திரத்தை இழந்தான். எல்லாம் மார்க்கத்திற்காகவே இறைவன் புறமிருந்து வெற்றி வரும் வரை அவர்கள் இதனைத் தொடர்ந்து செய்து வந்தனர். ஓர் உண்மையான முஸ்லிமாக ஆவது - ஓர் உண்மையான நம்பிக்கைகொண்டவராக ஆவது எளிதல்ல. எனவே, மக்களே! நல்ல நம்பிக்கை கொண்டவர்கள் எப்போதும் செய்வதைப் போல உண்மையை நீங்கள் உண்மையிலேயே நேசிப்பவர்களாயிருந்தால் என்னுடைய இந்த அழைப்பை மேலோட்டமாகப் பார்க்காதீர்கள். நன்மையைப் பெறுவது பற்றி சிந்தியுங்கள். நீங்கள் இந்தத் தூதுச் செய்தியைக் கேட்டு என்ன பதில் கூறுகிறீர்கள் என்பதை இறைவன் வானத்திலிருந்து பார்த்துக் கொண்டிருக்கிறான்.

முஸ்லிம்களே! பெரும் விசுவாசிகளின் வாரிசுகளே! நல்லவர்களின், நேர்மையாளர்களின் சந்ததிகளாக இருந்து கொண்டு மறுப்பதற்கும் தப்பெண்ணம் கொள்வதற்கும் அவசரப் படாதீர்கள். உங்களைச் சுற்றிலும் பரவி வரும் பிளேக் நோய்க்கு அஞ்சுங்கள். ஏற்கனவே, பெரும் எண்ணிக்கையில் மக்கள் அதற்கு பலியாகிவிட்டார்கள். இஸ்லாம் மார்க்கத்தை அழிப்பதற்காக எவ்வளவு வலுவாக முயற்சிகள் நடைபெறுகின்றன என்பதைப் பாருங்கள்! நீங்களும் முயற்சி செய்வது உங்கள் மீது கடமையில்லையா? மனிதக் கரத்தால் அழிக்கப்படுவதற்கு இஸ்லாம், மனிதனால் உருவாக்கப்பட்ட மார்க்கமல்ல. அதனை அழிப்பதாக தீர்மானம் செய்து கொண்டிருப்பவர்கள் மீது





அனுதாபப்படுகிறேன். தமது பெண்களுக்காகவும், குழந்தைகளுக்காகவும், தமது ஆடம்பரத்திற்காகவும் அவர்களிடம் எல்லாம் இருக்கின்றன. ஆனால் இஸ்லாத்தின் தேவைகளுக்காகச் செலவு செய்வதற்கு ஏதுமில்லாதவர்களாக அவர்கள் இருக்கிறார்கள். அப்படிப்பட்டவர்கள் மீது நான் பரிதாபப்படுகிறேன்.

அவர்களுக்கு நான் கூறுவதாவது: சோம்பேறிகளே! இஸ்லாத்தின் கலிமாவை உயர்த்துவதற்கும் மார்க்கத்தின் ஒளிகளை எடுத்துக் காட்டுவதற்கும் உங்களிடம் எந்த சக்தியும் இல்லை. ஆனால் இஸ்லாத்தின் ஒளியை வெளிப்படுத்துவதற்காக இறைவனால் நியமிக்கப்பட்ட திட்டத்தை நன்றியுடன் ஒப்புக் கொள்ள முடியாதிருக்கும் உங்கள் மீது பரிதாபமே!

இன்றைய தினம் இஸ்லாம் ஒரு பெட்டியினுள் மறைத்து வைக்கப்பட்டிருக்கும் விளக்காக இருக்கிறது. அல்லது இலைகளாலும், கிளைகளாலும், குச்சிகளாலும் மூடப்பட்டிருக்கும் ஓர் இனிப்பான நீர் ஊற்றாக இருக்கிறது. இஸ்லாம் வீழ்ச்சியடைந்துள்ளது. அதனால் இஸ்லாத்தின் அழகான முகத்தைக் காண முடியவில்லை. இஸ்லாம் எவ்வளவு இனியது; அழகானது! என்று இவ்வுலகிற்கு எடுத்துக்காட்டுவதற்காகத் தம்மால் இயன்றவரை முயல்வது முஸ்லிம்களின் கடமையாகும். இந்தக் குறிக்கோளை அடைவதற்கு அவர்கள் தமது உடமைகளையும் தமது வாழ்வையும் தியாகம் செய்திருக்க முடியும். ஆனால் அவர்கள் அப்படிச் செய்யவில்லை. அவர்களோ அறியாமையினால் தவறில் சிக்கி அவதிப்படுகிறார்கள்.

பழைய புத்தகங்கள் போதாதா என்று அவர்கள் கேட்கிறார்கள். புதிய ஆபத்துகளைப் பற்றி அவர்களுக்கு ஒன்றும் தெரியாது. அவை விடுக்கும் புத்தம் புதிய சவால்களைப் புதிய முறைகளால் அன்றி வேறு எவற்றாலும் வீழ்த்த முடியாது என்பதை அவர்கள் அறியவில்லை. இருள் பரவுகின்ற ஒவ்வொரு கால கட்டத்திலும் நபி, ரஸூல், சீர்திருத்தவாதிகள் வந்திருக்கிறார்களே அந்த காலத்தில் முந்தைய வேதங்கள் இருந்ததில்லையா? எனவே சகோதரர்களே! இருள் பரவும் காலத்தில் வானத்திலிருந்து ஒளி இறங்குவது அவசியமானதாகும்.

இந்தச் சிறு நூலிலேயே திருக்குர்ஆனிலுள்ள சூரத்துல் கத்ர்-97ம் அத்தியாயத்தை நான் குறிப்பிட்டிருக்கிறேன். இந்த அத்தியாயத்தில் சர்வ வல்லமையுள்ள இறைவன் அவனது வசனங்களும், அவனது நபியும், லைலத்துல் கத்ரில் வானத்திலிருந்து இறக்கப்பட்டிருக்கிறது என்ற நற்செய்தியை நம்பிக்கை கொண்டவர்களுக்கு வழங்குகின்றான். உள்ளது உள்ளவாறு சொல்வதானால் இறைவனிடமிருந்து வரும் ஒவ்வொரு சீர்த்திருத்தவாதியும், மார்க்கத்தைப் புதுப்பிக்கும் ஒவ்வொருவரும் அத்தகைய வல்லமை மிக்க இரவிலேயே இறங்குகிறார்கள்.

லைலத்துல் கத்ர் இரவு என்றால் என்னவென்று உங்களுக்குத் தெரியுமா? லைலத்துல் கத்ர் என்பது, இருள் தன் முழு எல்லையை எட்டி விட்ட அந்த இருண்ட காலத்திற்குப் பெயராகும். எனவே அந்தக் காலம், அந்த இருளை அகற்றுவதற்கு ஓர் ஒளி இறங்க வேண்டும் என்பதை எதிர்பார்க்கிறது. அந்த காலத்திற்கு உருவகமாக லைலத்துல் கத்ர் (வல்லமைமிக்க இரவு) என்று பெயர் வைக்கப்பட்டுள்ளது. ஆனால் உண்மையில் அது இரவு அல்ல. அதனுடைய இருள் காரணமாகவே, அக்காலம் இரவென்றும் வர்ணிக்கப்பட்டுள்ளது.

ஒரு நபியின் அல்லது அவரது ஆன்மீக பிரதிநிதியின் மரணத்திற்குப் பிறகு ஆயிரம் மாதங்களுக்குப் பின்னர் அவ்விருள் படரத் தொடங்குகிறது. ஆயிரம் மாதங்கள் என்பது ஒரு மனிதனின் வாழ்நாளுக்கு சமமாகும். இக்கால கட்டத்தின் இறுதியில் மனிதனின் புலன்களும் தளர்ந்து ஓர் இறுதிக் கட்டத்திற்கு வருகின்றன. இவ்வளவு நீண்ட காலம் கழிந்த பின்னர், புதிய நூற்றாண்டின் தொடக்கத்தில் ஒரு சீர்திருத்தவாதி அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட சீர்திருத்தவாதிகள் தோன்றுவதற்கான விதையைப் பரலோகமானது விதைக்கின்றது.

இறைவனின் சொற்கள் இதையே இவ்வாறு சுட்டிக் காட்டுகிறது:

لَيْلَةُ الْقَدْرِ خَيْرٌ مِّنْ أَلْفِ شَهْرٍ

அதாவது வல்லமை மிக்க அந்த இரவானது ஆயிரம் மாதங்களைக் காட்டிலும் சிறந்தது. (திருக்குர்ஆன் 97:4)





வல்லமை மிக்க இரவில் தெய்வீக ஒளி இறங்குவதைக் காண முடிந்தவர்கள், இந்த ஒளி இறங்கி வரும் காலத்தில் இவ்வுலகில் இல்லாமறபோய்விட்ட எண்பது வயதுக்காரர்களை விடச் சிறந்தவர்கள் என்பது இதற்குப் பொருளாகும். இந்த இரவின்போது ஒரு கண நேரத்தில் பெறப்பட்ட ஒளியானது அந்த இரவுக்கு முந்திய ஓராயிரம் இரவுகளைக் காட்டிலும் மேலானது. ஏன் மேலானது? ஏனென்றால், அந்த இரவில் இறைவனிடமிருந்து வானவர்களும் பரிசுத்த ஆவியும் மாட்சிமை மிக்க இறைவனின் அமைதியுடன் அந்தக் காலத்திற்குரிய சீர்திருத்தவாதியோடு இறங்குகிறார்கள். வீணாக இறங்குவதில்லை. விரும்பும் இதயங்களை நெகிழச் செய்து ஆன்மீகப் பாதுகாவலுக்காகவே அவர்கள் இறங்கி வருகிறார்கள். அவர்கள் அதாவது, வானவர்களும் பரிசுத்த ஆவியும் புதிய பாதைகளைத் திறந்துவிட்டு மூடிய திரையை நீக்குகிறார்கள். ஆதலால் அலட்சிய மனோபாவம், அறியாமை ஆகிய இருள்கள் நீங்குகின்றன. நேர்வழி என்னும் விடியற்காலை உதயமாகி அவ்விடத்தில் ஆன்மீக ஒளி பரவத் தொடங்கி விடுகிறது.

ஆகவே முஸ்லிம்களே! இந்த வசனங்களைப் படித்துப் பார்த்து ஆழ்ந்து சிந்தியுங்கள். காலத்தின் தேவையை நிறைவேற்றும் வகையில் ஒரு சீர்திருத்த வாதியை இறைவன் உலகில் அனுப்பி வைக்கிறான். இந்த காலத்தை அந்த இறைவன் எவ்வளவு அருமையாக அடையாளமிட்டுக் கூறியிருக்கிறான்! நீங்கள் அந்தக் காலத்திற்கு மதிப்பளிக்க மாட்டீர்களா? இறைவனின் வாக்குறுதிகளை நீங்கள் ஏளனக் கண்கொண்டு பார்ப்பீர்களா? முஸ்லிம்களுக்குள் செல்வந்தர்களாய் இருப்பவர்களே! நான் உங்களுக்கு அறிவிக்கும் தூதுச் செய்தியை உறுதியாய்த் தெரிந்து கொள்ளுங்கள். மக்களைச் சீர்திருத்துவதற்காக சர்வ வல்ல இறைவன் ஒரு செயல் திட்டத்தை அமைத்திருக்கிறான் என்பதுதான் அது. இந்தச் செயல் திட்டத்திற்கு உங்களுடைய முழு மனதுடனும் அன்புடனும் உதவ வேண்டியது உங்களுடைய பொறுப்பாகும். இச்செயல் திட்டத்தின் எல்லாப் பிரிவுகளையும் கண்ணியத்துடன் பார்த்து சீக்கிரம் தொண்டு செய்ய வேண்டும்.

ஒவ்வொரு மாதமும் ஒரு குறிப்பிட்ட தொகையை ஒழுங்காக, எவ்விதத் தூண்டுதலும் தேவைப்படா வண்ணம் தந்து வருவது அவர்களின் பொறுப்பாகும். அவர்கள் இறைவனுக்குச் செலுத்த வேண்டிய ஒரு கடமையாக அதனைக் கொள்ள வேண்டும். அதிலிருந்து தவறுவதை அவர்கள் அனுமதிக்கவே கூடாது. மொத்தமாகப் பெருந் தொகை தருபவர்களையும் நாம் வரவேற்கிறோம். ஆனால் இந்த வேலை எவ்விதத் தடையுமின்றித் தொடர்ந்து நடைபெறவேண்டும் என்பதுதான் உண்மையில் விரும்பப்படுகிறது என்பதை ஞாபகத்தில் வைத்துக் கொள்ள வேண்டும். எனவே, மார்க்கத்தை நேசிப்பவர்கள் வாக்களித்து அதன்படித் தங்களின் வசதிக்கு உட்பட்டு மாதாமாதம் நன்கொடைகள் அனுப்பித் தர வேண்டும். மேலும் அவர்கள் ஏதேனும் ஓர் இக்கட்டான சந்தர்ப்பத்தினால் தடை ஏற்பட்டால் ஒழிய ஒவ்வொரு மாதமும் ஒழுங்காக நன்கொடைகளைச் செலுத்தி வர வேண்டும். வசதிகள் இருந்து நன்கொடையளிப்பதன் அவசியத்தை உணர்பவர்கள் மாதாமாதம் தரும் நன்கொடைகள் தவிர அவற்றுடன் இக்காரியத்திற்கென்றே விசேட நன்கொடைகளும் அனுப்பித் தர வேண்டும்.

என்னுடைய நண்பர்களே! என் அன்புக்குரிய தோழர்களே! எனது மரத்தின் பசுங் கிளைகளே! நீங்கள் இறைவனின் அளப் பெருங் கருணையினால் பைஅத்தின் மூலம் என்னுடன் சேர்ந்து உங்கள் உயிரையும், ஓய்வு நேரத்தையும், உடைமைகளையும் இந்த நோக்கத்திற்காக அர்ப்பணிக்க ஆயத்தமாயிருக்கிறீர்கள்.நான் உங்களிடம் எதைக் கூறினாலும் அதை ஏற்றுக் கொள்வதை உங்களுடைய நற்பாக்கியமாகக் கருதுவீர்கள் என்பதும் உங்களது சக்திக்கேற்ப இவ்வழியில் தியாகம் செய்யத் தயங்க மாட்டீர்கள் என்பதும் எனக்குத் தெரியும். இருப்பினும் என் விருப்பத்தின் பேரில் எதையும் நீங்கள் செய்யும்படி நான் குறிப்பிடவில்லை. ஏனெனில் நீங்கள் செய்யும் தியாகங்கள் எந்தக் கட்டுப்பாடுமின்றி உங்களுடைய விருப்பத்துடன் செய்யப்பட வேண்டும்; எனது வேண்டுதலுக்காகச் செய்யப்படக் கூடாது.

என்னுடைய நண்பர் யார்? என்னிடத்தில் அன்பு கொண்டவர் யார்? என்னை அடையாளம் கண்டு கொண்டவர்தான். என்னை





அடையாளம் கண்டு கொண்டவர் யார்? நான் இறைவனால் அனுப்பப்பட்டிருக்கிறேன் என்று உறுதியாக நம்புகிறவர்தான். அதாவது, முன்பு இறைவனால் அனுப்பப்பட்டவர்கள் எவ்வாறு விசுவாசிக்கப்பட்டார்களோ அதேவிதம் என்னையும் விசுவாசிப்பவரே என்னை அடையாளம் கண்டு கொண்டவராவார். **இந்த உலகு என்னை ஏற்றுக் கொள்ளாது. ஏனெனில் நான் இவ்வுலகத்தைச் சேர்ந்தவன் அல்லன். ஆனால் மறுவுலகோடு யாருடைய ஆன்மாக்கள் தொடர்பு கொண்டுள்ளனவோ அவர்கள் என்னை ஏற்றுக் கொள்கிறார்கள்; ஏற்றுக் கொள்ளவே செய்வார்கள்! என்னை விட்டு விலகிச் செல்பவர், என்னை அனுப்பி வைத்திருப்பவனைத் தான் விட்டு விலகிச் செல்கிறார். என்னுடன் சேர்ந்து கொள்பவர், நான் எவனிடமிருந்து வந்தேனோ அவனோடுதான் சேர்ந்து கொள்கிறார்.**

நான் என் கையில் ஒரு விளக்கை ஏந்தியிருக்கிறேன். என்னிடம் வருகின்றவர் அந்த ஒளியிலிருந்து கண்டிப்பாக பங்கைப் பெறுவார். ஆனால் பொய்த் தோற்றங்களால் கவரப்பட்டும் நம்பிக்கையிழந்தும் என்னை விட்டு விலகி ஓடுபவர்களோ இருளினுள்ளே நுழைந்து விடுவார்கள். நான் இக்காலத்தின் உறுதி வாய்ந்த கோட்டையாக இருக்கிறேன். எனக்குள்ளே நுழைகிறவர் திருடர்களிடமிருந்தும், கொள்ளைக் காரர்களிடமிருந்தும், கொடிய விலங்குகளிடமிருந்தும் தன் உயிரை காப்பாற்றிக் கொள்கிறார். ஆனால் எனது சுவர்களிலிருந்து தொலைவில் இருக்க விரும்புகிறவருக்கு எல்லாத் திசைகளிலும் மரணம் காத்திருக்கிறது. உயிரற்ற அவரது சடலம்கூட நிம்மதியாக இருக்காது.

என்னுள்ளே நுழைபவர் யார்? தீய வழிகளைக் கைவிட்டு நற்பண்புகளின் வழிமுறைகளைப் பின்பற்றுகிறவரும் கோணலை விட்டு விட்டு நேர்வழியில் காலெடுத்து வைப்பவருமாவார். அதாவது ஷைத்தானின் அடிமைத்தனத்திலிருந்து தன்னை விடுவித்துக் கொண்டு இறைவனுக்கு கீழ்ப்படிந்துள்ள அடியார்களில் ஒருவராக சேர்ந்து கொள்பவருமே ஆவார். இவ்வாறு செய்பவர் ஒவ்வொருவரும் என்னைச் சேர்ந்தவர் ஆவார்; நானும் அவரைச் சேர்ந்தவன் ஆவேன்.

இவ்வாறு செய்வதில் வெற்றியடைபவர் யார்? மனதைத் தூய்மைப்படுத்தி அதன் சொந்த நிழலில் நடப்பதற்கு இறைவனால் உதவப்பட்டவர் மட்டுமே வெற்றி பெற்றவர் ஆவார். அப்போது அவர் தனது மன இச்சை என்னும் நரகத்திற்குள் தன் கால்களை வைத்து விடுகின்றார். பிறகு அதில் ஒருபோதும் நெருப்பு இருந்ததில்லை என்ற அளவுக்கு அது குளிர்ந்து விடுகிறது. அவரோ ஆன்மீகப் படித்தரத்தில் மேன்மேலும் முன்னேறிச் செல்லத் தொடங்குகிறார். இறைவனின் பரிசுத்த ஆவி அவரிடத்தில் வந்து தங்குகிறது. ஒரு சிறப்பான இறை வெளிப்பாட்டின் மூலம் உலகங்களின் அதிபதியினால், தான் படைக்கப்பட்டுள்ளதன் நோக்கத்தை அவர் கண்டறிந்து கொள்கிறார். அவரது பழைய உள்ளம் அழிந்து ஒரு புதிய மனவெழுச்சியுடன் அவர் எழுதுகிறார். ஒரு புதிய இறைவன் இப்போது அவரை நெருங்கிவிடுகிறான். அவ்விறைவன் அவருடன் பழகும் முறையோ புத்தம் புதியது. ஆதலால் அவர் இவ்வுலகிலேயே சுவர்க்கத்தைக் காண்கிறார்.

இறைவனுடைய அருளினாலும், கருணையினாலும் நான் தனித்து விடப்படவில்லை என்பதை இவ்விடத்தில் கூறிக் கொள்கிறேன். அத்துடன் இறைவனுக்கு நன்றி கூறிக் கொள்வதையும் என்னால் விட்டுவிட முடியாது. என்னுடன் சகோதர உறவை உருவாக்கிக் கொண்டு சர்வ வல்லமையுள்ள இறைவனால் அவனது கரங்களாலேயே உருவாக்கப்பட்ட இந்த அமைப்பில் நுழைந்து விட்டவர்கள் என்மீது ஓர் அபூர்வமான நேசத்தையும் உறுதியான பற்றையும் தம் மனதில் நிரப்பி வைத்திருக்கிறார்கள். இந்தத் தகுதியைப் பெறுவதற்கு நான் எந்த உழைப்பும் செய்யவில்லை. வல்லமை மிக்க இறைவன் தனது சிறப்பான உண்மையான ஆன்மீகத் தோழர்களை வழங்கி இருக்கிறான்.

அவர்கள் அனைவரிலும் முதன்மையானவராக, என்னுடைய ஆன்மீக சகோதரர் ஒருவரை இங்கு குறிப்பிடும்போது என் மனம் பெரிதும் நெகிழ்ந்து விடுகிறது. அவருடைய நேர்மையின் நூரைப் போலவே (- ஒளியைப் போலவே) அவருடைய பெயரும் நூருத்தீன் (-மார்க்கத்தின் ஒளி) என்பதாகும். இஸ்லாத்தை பரப்பும் பணிக்காக தாம் சம்பாதித்த தூய்மையான பணத்தைக் கொண்டு





அவர் செய்து கொண்டிருக்கும் ஊழியங்களைக் காணும்போது நானும் அவ்வாறு செய்ய முடியாதிருப்பதை எண்ணி ஏங்க வேண்டியதாயிருக்கிறது. அத்தகைய சேவைகளை என்னாலும் செய்ய முடியுமானால் எவ்வளவு நன்றாக இருக்கும் என்று ஏக்கத்துடன் பார்க்கிறேன். மார்க்கத்திற்காக ஊழியம் புரிந்து அதனை ஆதரிப்பதற்குரிய அரும்பெரும் சந்தர்ப்பங்களை அவர் எவ்வளவு ஆர்வத்துடன் பற்றிப் பிடித்துக் கொண்டிருக்கிறார் என்பதை எண்ணிப் பார்க்கும்போது இறை வல்லமையின் காட்சி என் கண்களுக்கு முன்னால் வந்து நிற்கிறது. இறைவன் தனது உண்மையான அடியார்களை எவ்வாறு தன்பக்கம் ஈர்த்துக் கொள்கின்றான்!

இறைவனுக்கும் அவனது தூதருக்கும் கட்டுப்படுவதன் மூலம் எவையெல்லாம் செய்ய வேண்டுமோ அவையெல்லாம் செய்வதற்கு எல்லா வேலைகளிலும் தனது சேமிப்புத் தொகை அனைத்தையும் செலவிட்டுத் தனது உடல் வலிமை, வழிவகைகள், வளம் ஆகியவற்றையும் அர்ப்பணிக்க நூருத்தீன் ஆயத்தமாக இருக்கின்றார். அவர் தமது செல்வத்தை என்ன, தனது உயிரையும் கண்ணியத்தையும் சுய கௌரவத்தையும் கூட என் பொருட்டு தியாகம் செய்வதற்கு அவர் தயங்க மாட்டார் என்ற விஷயம் எனக்கு நன்றாகத் தெரியும். இதனை நான் அவர் மீது கொண்டிருக்கும் நல்லெண்ணத்தினால் மட்டுமின்றி அவரைப் பற்றிய சரியான ஞானத்தினால் கூறுகிறேன். நான் மட்டும் ஒப்புக் கொண்டிருந்தால் அவர் தன்னிடமுள்ள ஒவ்வொரு பொருளையும் கைவிட்டு விட்டு இங்கு என்னோடு வாழ்வதற்கு வந்திருப்பார். அதாவது, ஏற்கெனவே, ஆன்மீக ரீதியில் எனக்கு அருகே இருப்பதைப் போன்று உடலாலும் அவர் எனக்கு அருகே வந்திருப்பார்.

அவரது கடிதத்திலிருந்து சில வரிகளை என் வாசகர்களுக்காக நான் எடுத்துத் தருகிறேன். பேரா என்ற ஊரைச் சேர்ந்த எனது அன்புக்குரிய சகோதரர், ஜம்மு காஷ்மீர் அரசின் மருத்துவர் மௌலவி ஹக்கீம் நூருத்தீன் எவ்வளவு தூரம் நேசத்திலும் வாய்மை தவறாத பண்பிலும் முன்னேறியிருக்கிறார் என்பதை அதன் மூலம் அவர்கள் முடிவு செய்து கொள்ள இயலும். இதோ அந்த வரிகள்:

''எங்கள் எஜமானரும், வழிகாட்டியும், தலைவருமானவரே! அஸ்ஸலாமு அலைக்கும் வரஹ்மத்துல்லாஹி வபரகாத்துஹூ. மேன்மையானவரே! என்னுடைய பிரார்த்தனை என்னவென்றால், நான் தங்களுடைய முன்னிலையில் எப்போதும் இருந்து வர வேண்டும். இக்காலத்தின் சீர்திருத்தவாதி எவற்றைக் கற்பிப்பதற்காக நியமிக்கப்பட்டிருக்கிறாரோ அவை ஒவ்வொன்றையும் நான் கற்றுக் கொள்ள வேண்டும். எனக்கு அனுமதி தந்தால் நான் என்னுடைய பதவியை ராஜிநாமா (பணி துறப்பு) செய்துவிட்டு இரவும் பகலும் தங்களின் குரலுக்குச் செவி சாய்ப்பவனாக இருப்பதற்கு ஆயத்தமாக இருக்கிறேன். அல்லது எனக்குத் தாங்கள் கட்டளையிட்டால் நான் உலகம் முழுவதும் பயணம் செய்து மக்களை உண்மையான மார்க்கத்தின்பால் அழைப்பேன். என்னுடைய உயிரை விடும் வரை நான் இவ்வாறே தொடர்ந்து செய்து வருவேன். தாங்கள் காட்டும் வழியில் என்னை அர்ப்பணித்துக் கொள்வேன். என்னிடமுள்ள எதுவும் என்னுடையதல்ல; அது தங்களுடையதே.

மதிப்பிற்குரிய தலைவரே! வழிகாட்டியே! மார்க்கத்தைப் பரப்புவதற்காக என்னுடைய முயற்சியாலான எல்லா சம்பாத்தியமும் செலவிடப்படுமானால் எனது வாழ்வின் குறிக்கோள் நிறைவேறிவிட்டதாக நான் கருதுவேன் என்று நான் உண்மையாகக் கூறுகிறேன். பராஹீனே அஹ்மதிய்யா நூலுக்கு சந்தா வாக்களித்திருப்பவர்களால் அதனை அச்சிடுவதில் கால தாமதம் ஏற்பட்டால் இந்தச் சிறிய ஊழியத்தைச் செய்வதற்கு எனக்கு அனுமதி வழங்குங்கள். என்னுடைய கையிலிருந்து அவர்களுடைய சந்தா தொகையை நானே தந்து விடுகிறேன்.

மதிப்புக்குரிய வழிகாட்டியே! அறிவுறுத்தும் பெருந் தகையே! இந்தத் தகுதியற்ற எளியவனுக்கு இன்னொரு வேண்டுகோளும் இருக்கிறது. அதனைத் தாங்கள் ஏற்றுக் கொண்டால் அது என்னுடைய நற்பேறு ஆகும். அதாவது பராஹீனே அஹ்மதிய்யா நூலை அச்சிடுவதற்கு ஆகும் செலவு அனைத்தையும் என்னிடமிருந்து வசூலித்துக் கொள்ளும்படி நான் வேண்டுகிறேன். அதாவது, புத்தக விற்பனையால் கிடைக்கும் தொகையைத்





தங்களுடைய தேவைகளை நிறைவேற்றும் வகையில் செலவிட்டுக் கொள்ளலாம். தங்களின் பேரில் நான் கொண்டுள்ள மதிப்பு ஃபாரூக்குடைய மதிப்பை ஒத்ததாகும். இந்நோக்கத்திற்காக என்னிடமுள்ள யாவற்றையும் அர்ப்பணித்து விடுவதற்கு நான் ஆயத்தமாயிருக்கிறேன். எனது மரணம் சித்தீகுகளின் மரணமாக இருக்க துஆ செய்யுங்கள்.''

மௌலவி சாஹிபுடைய நேர்மையும், வலிமையும், அவரது அனுதாபமும், சுயநலமற்ற தன்மையும், உயிரையும் தியாகம் செய்யும் மனப்பான்மையும் அவரது சொற்களின் மூலமாக வெளிப்படுவதைப் போன்று - ஏன் அதைவிட அதிகமாக அவர்களுடைய நிலையினாலும், தன்னலமற்ற தொண்டு களினாலும் வெளிப்படுகின்றது. நமது நோக்கத்திற்காகத் தம்மையே அர்ப்பணித்து அவர் செய்து வரும் பக்தி மிக்க பணிகளிலிருந்து இது நிரூபணமாகின்றது. நமது நோக்கத்திற்காகத் தம்மிடமுள்ள யாவற்றையும், தமது வீட்டுக் காரியங்களைக் கூட அவர் கைவிட்டு விடுவார். எல்லையற்ற நேசம் அவரது தகுதியையும் மிஞ்ச முயல்கிறது. அவரது ஒவ்வொரு கணநேரமும் ஊழியத்திற்கே ஒதுக்கப்படுகிறது. ✸(அடிக்குறிப்பு 5)

---

✸அடிக்குறிப்பு 5: ஹஸ்ரத் மௌலவி ஸாஹிப், ஃபிக்ஹ் (மார்க்கச்சட்டம்), ஹதீது (நபி மொழிகள்), தஃப்ஸீர் (திருக்குர்ஆன் விளக்கவுரைகள்) ஆகியவற்றைக் கற்றுத் தேர்ந்தவராவார். தத்துவார்த்தத்திலும், இயற்கை விஞ்ஞானத்திலும் - இவை பழங்காலத்ததாயினும், நவீன காலத்ததாயினும் சரியே - அன்னாருக்கு ஒரு ஆழ்ந்த பற்றுதல் உண்டு. அன்னார் ஒரு தேர்ச்சி மிக்க மருத்துவரும் கூட. அவரது சொந்த நூலகம் என்பது எல்லாக் கல்வி பிரிவுகளையும் சேர்ந்த இணையற்ற புத்தகங்களின் தொகுப்பு ஆகும். அந்த நூல்களை எகிப்து, அரேபியா, ஸிரிய்யா, ஐரோப்பியா ஆகிய நாடுகள் நெடுகிலிருந்தும் அவர் இறக்குமதி செய்து ஆயத்தமாக்கி வைத்திருக்கிறார். அவர் மற்ற விஞ்ஞானத் துறைகளைக் கற்றுத் தேர்ந்திருப்பது போலவே, மார்க்க சம்பந்தப்பட்ட விவாதக் கலையிலும், விஞ்ஞானத்திலும் தேர்ச்சி பெற்றிருக்கிறார். அவர் சமீப காலத்தில் எழுதிய தஸ்தீகே பராஹீனே அஹ்மதிய்யா என்னும் நூல் தரமான, மார்க்க ஆராய்ச்சியில் ஆர்வமுள்ளவர்களின் கண்களில் நவ ரத்தினத்தை விட அதிக விலை மதிப்புள்ளதாகும்.

தியாகத்தின் முழுப் பளுவையும் தன்னலமற்ற ஒரு பக்தனின் தோள்களின் மீது சுமத்துவது கருணையற்ற செயலாகும். இப்பளு ஒரு பெருங் கூட்டத்தினரால் சுமக்கப்படவேண்டுமேயொழிய தனிப்பட்டவர்களால் அல்ல. மௌலவி சாஹிபைப் பொருத்தவரை அவருக்குச் சொந்தமான எல்லா உடைமைகளையும் விட்டுப் பிரிந்து விடுவதற்கு அவர் ஆயத்தமாகவே இருக்கிறார் என்பது உண்மைதான். அய்யூப் நபியைப்போல, ‘நான் தனித்தவனாகவே வந்தேன்; தனித்தவனாகவே திரும்புவேன்’ என்று அறிவித்து விட அவர் ஆயத்தமாகவே இருப்பார். ஆயினும் ஒரு நல்ல குறிக்கோளுக்காக ஊழியம் புரியும் கடமை முழுச் சமுதாயத்தின் மீது சுமத்தப்பட்டுள்ளது. காலங்கள் பயங்கரமானவை என்பதற்கு தீய அறிகுறிகள் அடையாளங்களாய்த் தோன்றுகின்றன. மதத்தின் அடித்தளங்கள் ஆட்டம் கண்டுள்ளன. இறைவனுக்கும் மனிதனுக்கும் உள்ள உறவு மோசமாகப் பழுதுபட்டுக் கடும் நெருக்கடிக்கு உள்ளாகிக் கொண்டிருக்கிறது. இத்தகைய கால கட்டத்தில் நல்ல நம்பிக்கை கொண்டவர்கள் தமது கடமைகளைக் கண்டு பிடித்து உணர வேண்டியது அவர்களின் பொறுப்பாகும்.

இரட்சிப்பைப் பெறுவதற்கு நேர்மையும் பொருத்தமும் நிறைந்த செயல்கள் தேவை. இன்றைய தினம் தியாகச் செயல்கள்தான் நேர்மையும் தகுதியுமுடைய செயல்களாகும். அதாவது, ஒருவரது உடைமையையும் ஒருவரது நேரத்தையும் தியாகம் செய்வதாகும். ஒவ்வொரு நல்ல விசுவாசியும் திருக்குர்ஆனில் கீழ்க்கண்டவாறு அடங்கியுள்ள எச்சரிக்கையில் கவனம் செலுத்த வேண்டும். அதாவது

لَنْ تَنَالُوا الْبِرَّ حَتّٰى تُنْفِقُوْا مِمَّا تُحِبُّوْنَ

உங்களுக்குப் பிரியமான பொருளை நீங்கள் அல்லாஹ்வுடைய பாதையில் செலவு செய்யாத வரையில் நீங்கள் நன்மை புரிவோராக மாட்டீர்கள். (திருக்குர்ஆன் 3: 93)

இவ்விடத்தில் வேறு நேர்மையான நண்பர்களின் பெயர்களையும் குறிப்பிட வேண்டியது பொருத்தமானது எனக் கருதுகிறேன். இவர்கள் இந்த இறை இயக்கத்தைச் சேர்ந்தவர்களாய் இருப்பதுடன்





உண்மையான நேசத்தினால் என்னோடு சேர்ந்து கொண்டவர் களாயும் இருக்கிறார்கள். அவர்களில் ஒருவர் முராதாபாத்தைச் சேர்ந்த ஷெய்கு முஹம்மது ஹுஸைன்; இவர் முராதாபாதிலிருந்து காதியானுக்கு வந்து இறைவனுக்காகவே என்னுடைய இச்சிறு நூலை எழுதி ஆயத்தம் செய்து கொண்டிருக்கின்றார்; ஒரு கண்ணாடியில் தெரிவதுபோல் ஷெய்கின் தூய உள்ளத்தை என்னால் காண முடிகிறது. அவர் என்மீது ஆழ்ந்த பற்று கொண்டிருக்கின்றார். யாவும் இறைவனுக்காகவே.

அவரது எண்ணங்கள் யாவும் இறைவனையே மையமாகக் கொண்டவை. அவரது நல்ல இயல்பு சாதாரணமாகக் காணக் கூடியதல்ல. முரதாபாதின் ஒளி விளக்காகவே நான் அவரைக் கருதுகிறேன். அவரிடத்தில் பிரகாசிக்கும் நேசம், நேர்மை என்னும் ஒளி ஒரு நாள் மற்றவர்களுக்கும் போய்ச் சேரும் என்று நான் நம்புகிறேன்.ஷெய்குக்கு மிகக் குறைவான வசதிகளேயுள்ளன. ஆனால் அவரிடத்தில் ஒரு பெரிய இதயம், பரந்த உள்ளம் இருக்கின்றது. எவ்வித ஊழியமும் செய்வதற்கு எப்போதும் ஆயத்தமாக அவர் என்னுடன் தங்கி இருக்கின்றார். அவரது நம்பிக்கை ஆழமானது; நேசத்தினால் நிறைந்து பூரித்தது.

இவரைப் போன்ற மற்றொரு நண்பர் பேராவைச் சேர்ந்த ஹகீம் ஃபஸ்ல் தீன் என்பவர் ஆவார். ஹகீம் சாஹிப் என்னிடத்தில் கொண்டுள்ள அன்பு, பற்று, மரியாதை ஆகியவற்றை விளக்குவது என்னால் இயலாத காரியமாகும். அவர் என்னிடம் உண்மையான நல்லெண்ணம் கொண்டவர்; அனுதாபம் மிக்கவர்; என்னை நன்கு புரிந்து கொண்டவர். இதோ இந்த அழைப்பு எழுதும்படி இறைவன் ஏவியதாக நான் உணர்ந்து கொண்டு இப்பணியை மேற்கொள்ளும்படி என்னை உற்சாகப்படுத்தும் ஒரு வெளிப்பாடு இறைவனிடமிருந்து எனக்குக் கிட்டியபோது, நான் இதனைப் பலரிடமும் குறிப்பிட்டேன். ஒருவரும் என்னுடன் ஒருமித்த கருத்து கொள்ளவில்லை. ஆனால் அன்பிற்குரிய இந்த நண்பரோ விஷயம் என்னதென்று கூட நான் குறிப்பிடாமலேயே இந்த அழைப்பை எழுதும்படி என்னைத் தூண்டினார். அத்துடன் இதனை அச்சிடுவது போன்ற காரியங்களுக்காக நூறு ரூபாயையும் நன்கொடையாகத் தந்தார். அவரது ஆன்மீக நுண்ணறிவைக் கண்டு வியந்து

நிற்கிறேன். அவரது விருப்பம் இறைவனின் விருப்பத்துடன் பொருந்தியுள்ளது. மௌன ஊழியமே அவர் கையாளும் முறையாகும். இரகசியமாக நூற்றுக்கணக்கான ரூபாய்களை இறைவனின் மகிழ்ச்சியையும் இசைவையும் சம்பாதிப்பதற்காகவே அவர் நன்கொடையாக வழங்கியுள்ளார். இறைவன் மேலான நற்கூலி வழங்குவானாக.

இத்தகைய நண்பர்களில் இன்னொருவர் அன்புக்குரிய சகோதரர் மிர்ஸா அஸீம் பேக் ஆவார். பட்டியாலாவின் தலைவரான இவரது பிரிவு நமக்கு மிகுந்த வருத்தத்தைத் தந்துள்ளது. இப்போது அன்னார் இறைவனின் அருளையும் கருணையையும் மன்னிப்பையும் அனுபவித்துக் கொண்டிருக்கின்றார். அவர் ஹிஜிரி 1308 ரபீவுஸ் ஸானீ பிறை 2-ல் காலமானார்.

إِنَّا لِلّٰهِ وَإِنَّا إِلَيْهِ رَاجِعُوْنَ

الْعَيْنُ تَدْمَعُ وَالْقَلْبُ يَحْزَنُ وَإِنَّا بِفِرَاقِهِ لَمَحْزُوْنُوْنَ

அல்லாஹ்வுக்காக நாம் வாழ்கிறோம்; அவனிடமே நாம் அனைவரும் திரும்புகிறோம். நமது கண்கள் பனிக்கின்றன. நமது இதயம் துக்கிக்கின்றது. அவரது பிரிவுக்காக நாம் துயரம் அனுபவித்துக் கொண்டிருக்கின்றோம்.

என்னிடத்தில் மேற்படி நண்பர் எவ்வளவு பெரும் பாசம் கொண்டிருந்தார்; என் பொருட்டு அவர் எவ்வாறு தம்மையே அர்ப்பணித்துவிட விரும்பினார் என்பவற்றை வெளியிட என்னிடம் வார்த்தைகள் இல்லை. கடந்த பல வருடங்களில் எவருடைய மரணத்தாலும் நான் அனுபவித்திராத அளவுக்குத் துயரத்தை அவருடைய அகால மரணம் எனக்குத் தந்திருக்கிறது. அவர் நமக்கு முன்னே சென்று விட்டார். ஆதலால் நாம் பின் பற்றிச் செல்ல வேண்டியவர்களாய் இருக்கிறோம். நமக்குத் தெரியாது! நாம் இவ்வாறு எதிர் பார்த்திருக்கவுமில்லை. ஆனால் நம்மை விட்டு அகன்று சென்றுவிட்டார். நாம் வாழ்ந்து கொண்டிருக்கும் காலமெல்லாம் அவரது பிரிவுத் துயரம் நம்மோடு இருந்துவரும்.





دردیست در دلم کہ گر از پیش آب چشم : بردارم آستیں برود تا بدامنم

என்னுடைய உள்ளத்தின் துயரத்தை என்னவென்பேன்? நான் வடிக்கும் கண்ணீர் எத்தகையது? நான் அவற்றை என் சட்டை விளிம்பினால் தடுத்து நிறுத்தாவிடில் அவை என் சட்டையின் மீது அருவியாய்ப் பாய்ந்தோடும்!

அவரது ஞாபகம் மன வருத்தத்தைத் தருகிறது. மனத்துயரம் நம்மைத் திணறடித்து வேதனையைத் தருகிறது. மனம் துயருற்று கண்களிலிருந்து கண்ணீர் தொடர்ந்து ஓடிக் கொண்டிருக்கிறது. அவர் அன்பு நிறைந்தவர். அதனை வெளியிடுவதிலே துணிச்சல் மிக்கவர். அவர் தம் முழு வாழ்க்கையையும் இந்த வழியிலேயே அர்ப்பணித்து விட்டிருந்தார். வேறு எதைப் பற்றியாவது எப்போதாவது அவர் கனவு கண்டாரா என்பது எனக்குத் தெரியாது. அந்த நண்பர் குறைந்த வசதியைக் கொண்டு வாழ்ந்த ஒரு மனிதர். ஆனால் மார்க்கம் சம்பந்தப்பட்ட இடங்களில் செல்வத்தை துச்சமாகக் கருதினார். பொருள் பொதிந்த மார்க்க உண்மைகளை அவரது மதி நுட்ப மூளை விரைவாக உணர்ந்து கொள்ளும். இந்த எளியவனிடத்தில் அவர் காட்டிய நம்பிக்கையை, நேசத்தோடு இணைந்த விசுவாசத்தை இறைவனின் முழுமையான ஆதிக்கத்தின் கீழ் உள்ள ஓர் அற்புதம் என்றுதான் வர்ணிக்க வேண்டும். மலர்களாலும் பழங்களாலும் நிறைந்த ஒரு தோட்டத்தைப் பார்த்து உள்ளம் மகிழ்ச்சியடைவதைப் போன்று அவரைப் பார்ப்பதனால் உள்ளம் மகிழ்ச்சி அடைந்தது.

ஒரு பச்சிளங் குழந்தை உட்பட தன்னை நம்பியிருந்தோர் யாவரையும் அவர் விட்டுப் பிரிந்து சென்று விட்டார். வெளிப் படையான ஆதரவு அவர்களுக்கு இல்லை. எல்லாம் வல்ல இறைவா! நீயே அவர்களுக்கு ஆதரவாளனாகவும், உதவி புரிவோனாகவும் இருப்பாயாக; அத்துடன் என்னுடைய மற்ற நண்பர்களும் முன் வந்து, துணையின்றித் தவிப்போருக்கு செயல் முறையில் அனுதாபம் காட்டும் படியும் தெய்வீக ஊக்கமளிப்பாயாக.

اے خدا اے چارہ ساز ہر دل اندوہگیں    اے پناہ عاجزان آمرزگار مذنبیں

از کرم آں بندۂ خود را بہ بخشش ہا نواز    واں جدا افتادگاں را از ترحم ہا بہ بیں

இறைவனே! துயருறும் உள்ளங்களைத் தேற்றுபவனே! எளியோர் உன்னிடம் அடைக்கலம் தேடுகிறார்கள். பாவிகளோ உனது மன்னிப்புக்காக உன்னை வந்தடைகிறார்கள்.

அவ்வாறானால் உனது அடியானாகிய அவரை உனது அருளினால் மன்னித்தருள்வாயாக. துணையின்றிப் பின் தங்கித் தவிப்போருக்குக் கருணை புரிவாயாக.

இங்கு நான் உதாரணத்திற்கு ஒரு சில நண்பர்களின் பெயர்களையே குறிப்பிட்டிருக்கின்றேன். என்னுடன் சேர்ந்து கொண்டு இதே விதமான நேர்மையுடன் ஊழியம் புரியும் இதர நண்பர்களும் உள்ளனர். மற்றொரு சந்தர்ப்பத்தில் அவர்களைப் பற்றித் தனியாக எழுத நாடுகிறேன். இன்ஷா அல்லாஹ். இப்போது விஷயம் நீண்டுவிடும். எனவே இத்தடன் நிறுத்திக் கொள்கிறேன்.

பைஅத் செய்து என்னோடு சேர்ந்து கொண்ட யாவரும் பாராட்டுதலுக்கு உரியவர்கள்தான் என்று கூற முடியாது என்பதையும் இங்கு நான் தெளிவு படுத்திவிட வேண்டியது முறையானதென்றே எனக்குத் தோன்றுகிறது. அனைவருக்கும் அத்தகுதி இன்னும் வரவில்லை. அவர்களில் சிலர் ஒரு மரத்தின் காய்ந்த கிளைகளைப் போலத் தோன்றுகிறார்கள். இவர்களை என் இறைவன், என் எஜமானன் என்னிடமிருந்து வெட்டி எடுத்து எரிகின்ற விறகுகளில் தூக்கி எறிந்து விடுவான்.

வேறு சிலர் இருக்கிறார்கள். அவர்கள் ஆரம்பத்தில் பற்றுதலும் நேர்மையும் காட்டினார்கள். ஆனால் அவர்களோ இப்போது அக்கறையற்றவர்களாய் இருக்கிறார்கள். என்னை உண்மையுடன் பின்பற்றுவோர் காட்ட வேண்டிய அன்பையும் உற்சாகத்தையும் அவர்கள் இழந்து விட்டார்கள். பல்அம் என்பவனைப் போல உட்கிளர்ச்சிகளிலும் பொய்த் தோரணைகளிலும் திறமை யாளர்களாக இருக்கிறார்கள். அல்லது வெளியே பிடுங்கி





எடுக்கப்பட்டு கால்களுக்கடியில் போட்டு மிதிக்கப்படுவதற்காகக் காத்திருக்கும் சொத்தைப் பற்களைப் போல இருக்கிறார்கள். அவர்கள் களைப்படைந்து விட்டார்கள். அத்துடன் இந்த வீணான உலகத்தினால் கெடுக்கப்பட்டும் விட்டார்கள். இறைவனின் அருள் எவர்களுடைய கையைப் பற்றிப் பிடித்துக் கொள்கிறதோ அவர்களைத் தவிர மற்றவர்கள் சீக்கிரம் என்னிடமிருந்து துண்டிக்கப்படுவார்கள் என உண்மையாகவே நான் கூறுகிறேன். உண்மையில் இறைவன் எனக்கு நிரந்தரமாகத் தந்து விட்டவர்களில் பலர் இருக்கின்றனர். அவர்கள் என்னுடைய மரத்தின் பசுங் கிளைகளாவர். அந்த மரமோ நானாக இருக்கிறேன். வேறொரு சந்தர்ப்பத்தில் நான் அவர்களைக் குறித்து எழுதுவேன். இன்ஷா அல்லாஹ். அல்லாஹ் உதவி புரியட்டும்.

நான் இந்த விஷயத்தைப் பற்றிக் கூறிக் கொண்டிருக்கை யிலேயே சில செல்வந்தர்களின் தப்பெண்ணத்தை அகற்றவும் விரும்புகிறேன். இவர்கள் தங்களின் மதப்பற்றையும் தங்களின் பெருந்தன்மையையும் பற்றிப் பெருமையடித்துக் கொண்டிருக் கிறார்கள். ஆனால் இவர்களோ பொருத்தமான நோக்கத்திற்காகத் தம் பணத்தைச் செலவிடுவதில்லை. மார்க்கத்தை வளர்க்கும் பொருட்டு இறைவனிடமிருந்து வரக்கூடிய உண்மையான இறையடியார் ஒருவருக்காக, தாம் காத்திருப்பதாக அவர்கள் கூறுகிறார்கள். அத்தகைய ஒருவர் வந்தால் உதவி புரிவதற்கும், அன்னாரிடத்தில் தங்களை அர்ப்பணம் செய்வதற்கும் அவர்கள் முன் வருவார்களாம். ஆனால் பரிதாபம்! அத்தகைய மனிதர்தான் வரவில்லையாம். நீங்கள் பார்க்குமிடமெல்லாம் ஏமாற்றுக் காரர்களும் போலி அறிஞர்களுமே நிறைந்திருக்கிறார்கள்.

இந்நிலையில் உங்களுக்கு நான் கூறுவேன்: உறுதியாகத் தெரிந்து கொள்ளுங்கள்! மார்க்க சம்பந்தமான காரியங்களைச் சீர் படுத்தி விருத்தி செய்வதற்காக ஒருவர் உங்களிடம் வந்து விட்டார். ஆனால் நீங்கள் அவரை அடையாளம் கண்டு கொள்ளவில்லை. இதோ உங்கள் முன்னால் உங்களோடு பேசிக் கொண்டிருப்பவர் அவரே. உங்களுடைய கண்கள் கனத்த திரையினால் மூடப்பட்டுள்ளன. உங்கள் உள்ளங்கள் உண்மையைத்

தேடுகிறதென்றால் இறைவனோடு உரையாடுவதாக வாதம் புரியும் ஒருவரை சோதிப்பது மிகவும் எளிதாகும். அவரிடம் வாருங்கள்; அவருடன் இரண்டு மூன்று வாரங்கள் வாழ்ந்து பாருங்கள். இறைவன் நாடினால் அவர் மீது பொழிந்து கொண்டிருக்கும் இறையருள்களின் மழையையும், அவர் மீது இறங்கிக் கொண்டிருக்கும் உண்மையான இறைவெளிப்பாட்டின் ஒளிகளையும் நீங்கள் உங்கள் கண்களாலேயே கண்டு கொள்வீர்கள். தேடுகிறவன் கண்டு கொள்வான். தட்டுகிறவனுக்கு கதவு திறக்கப்படும். மூடப்பட்ட ஓர் இருண்ட அறையினுள் ஒளிந்து கொண்டு சூரியன் எங்கிருக்கிறது என்று குற்றம் சாட்டினால் அது வீணானது. முழுக்க முழுக்க நீயே வீணாக்கிய காரியமாகும். முட்டாளே! உனது கண்களை மறைக்கும் திரையை அகற்று. அப்போது நீ சூரியனைக் காண்பது மட்டுமல்லாமல் அதனால் ஒளியூட்டவும் பெறுவாய்.

சங்கங்களை நிறுவுவதும் பள்ளிக்கூடங்களைத் திறப்பதும் மார்க்கத்தை வளர்ப்பதற்குப் போதுமானவை என்று சிலர் கூறுகிறார்கள். உண்மையில் மார்க்கம் என்ன என்றும், மனிதர்கள் எதற்காகப் படைக்கப் பட்டிருக்கிறார்கள் என்றும், இவ்வுலகில் அந்த நோக்கத்தை எந்த வழி வகைகளைக் கொண்டு எவ்வாறு அடைவது என்றும் அவர்களுக்குத் தெரியாது. இவ்வுலகில் நமது வாழ்வின் உறுதியான இறுதி நோக்கம் யாதென்றால் இறைவனோடு ஓர் உண்மையான உறவை உருவாக்குவது தான் என்பதை அவர்கள் அறிந்து கொள்ள வேண்டும். அதுவே நம்மை எல்லாத் தன்னல உறவுகளை விட்டும் விடுவித்து இரட்சிப்பு என்னும் ஊற்றுக்கு இட்டுச் செல்லும். இறைவனுடனுள்ள இத்தகைய தொடர்பு திடமான நம்பிக்கையில் இத்தகைய உறுதிப்பாடு ஆகியன மனிதன் உண்டாக்கிய அமைப்புகளால் வராது. மனிதனால் புனையப்பட்ட தத்துவங்கள் இங்கு பயன் படாது. இருள் படர்ந்த காலத்தில் உங்களுக்குத் தேவையான ஒளியை, இறைவன், தான் தேர்ந்தெடுத்த ஊழியர்களின் மூலம் வானத்திலிருந்து பூமிக்கு இறக்குகிறான். வானத்திலிருந்து வருகிறவரால் மட்டுமே உங்களை வானத்திற்கு வழி நடத்திச் செல்ல முடியும்.





எனவே, மனிதர்களே! சந்தேகங்களும் பொய்த் தோற்றங்களும் நிறைந்துள்ள இருட் குழிகளில் வாழ்கின்றவர்களே! தங்களுடைய தன்னல ஆசைகளுக்கு அடிமைப்பட்டுக் கிடப்பவர்களே! வாயினால் ஏதோ உச்சரிப்பதும் ஏதோ சில வெளிப்புற நடத்தைகளும் போதும் என்று நினைக்காதீர்கள். அல்லது நீங்களே கண்டு பிடித்த சாதனங்களும் உங்களின் பள்ளிக்கூடங்களும் உங்களின் இதர நிறுவனங்களும் உங்களை மகிழ்ச்சிக்கும் நல்வழிக்கும் அழைத்துச் செல்லும் என்றோ இரட்சிப்பிற்கும் வெற்றிக்கும் வழிகோலும் என்றோ நினைக்காதீர்கள்.

இவை ஆரம்பப் படிகளாக மட்டுமே பயன் படும். ஆனால் இவை தமது உண்மையான நோக்கத்தை விட்டும் வெகு தொலைவில் இருக்கின்றன. இவ்வழி முறைகள் சிறிதளவு கல்வியையும், சிறிதளவு பண்பாட்டையும், புரிந்துகொள்வதில் சிறிது திறமையையும், விவாதிக்கும் கலையிலும் சமய தர்க்க நூலிலும் சிறிதளவு அறிவையும், நவீன கல்வி கற்ற சில பட்டதாரிகளையும் பரவலாக உண்டாக்கியிருக்கிறது. ஒரு வேளை, நீண்டதொரு காலத்திற்குப் பின் நாம் பெற்றுக் கொண்ட இத்தகைய நற்பேறுகளின் விளைவுகளினால் நமது இறுதி நோக்கத்திற்குப் பயன் கிடைக்கலாம்; ஆனால் நம்மால் காத்துக் கொண்டிருக்க வகை செய்ய முடியாது. பாம்பு கடித்த ஒருவனுக்கு வெகு தொலையிலிருந்துதான் மருந்து வர வேண்டுமானால் அவன் விஷத்துக்கு பலியாகிப் போவானல்லவா? எனவே, விழித்தெழுங்கள். சுறுசுறுப்படையுங்கள். இல்லையேல் நீங்கள் தடுமாறிப் போவீர்கள். மேலும் இவ்வுலகை விட்டும் நீங்கள் பிரியும்போது விசுவாசம் அற்றவர்களாகவும் உங்களுடைய இறைவனைப் பற்றிய உணர்வு அற்றவர்களாகவும் இருப்பீர்கள். உறுதியாகத் தெரிந்து கொள்ளுங்கள்; மறு உலகாகிய வருங்கால உலகில் நாம் பெறவிருக்கும் வெற்றி, வழக்கமான பழைய மரபிலுள்ள விஞ்ஞானங்களையும் பண்பாட்டையும் நாம் பெறுவதைப் பொறுத்ததல்ல.

சந்தேக அழுக்கையும் நம்பிக்கைக் குறைபாட்டையும் போக்குவதற்கு இவையெல்லாம் தவிர வானத்திலிருந்து நமக்கு ஒளி

தேவை. இதுவே தன்னல ஆசைகளைக் குளிரச் செய்து உண்மையான இறை நேசத்திடம் மனிதர்களை இழுத்துச் சென்று அவனிடம் உண்மையான கீழ்ப்படிதலை உண்டாக்கி அவனிடமே சரணடையச் செய்கிறது. உங்களுடைய மன சாட்சியை கேட்டுப் பாருங்கள். ஆன்மீக உயர் மாற்றத்திற்கு வழி வகுக்கின்ற மன நிறைவும் சாந்தியும் உங்களிடமில்லை என்று பதில் கிடைக்கும். அவையெல்லாம் இன்னும் உங்களுக்கு கிட்டவில்லை. எனவே, காலா காலமாகச் செய்து வரும் பாரம்பரியக் கிரியைகளிலும், கலைகளையும், விஞ்ஞானங்களையும் கற்பதிலும் நீங்கள் பெரும் உற்சாகம் காட்டுகிறீர்கள். ஒரு தெய்வீகச் செய்திக்கும், ஒரு தெய்வீகத் திட்டத்திற்கும் நீங்கள் இந்த உற்சாகத்தில் ஒரு அற்ப பகுதியைக் கூட காட்டவில்லையே என்பது பரிதாபத்திற் குரியதாகும். ஆன்மாவுடன் கொஞ்சமும் உறவு இல்லாத விஷயங்களுக்கு உங்கள் வாழ்க்கை முழு அளவில் அர்ப்பணிக்கப்பட்டிருக்கிறது. உண்மையில் இத்தகைய உறவு ஏதேனும் இருக்குமானால் அது முக்கியத்துவம் பெற்றதல்ல. உண்மையான இறுதி நோக்கத்தை, உறுதியாகத் தெளிவாக உணர்ந்து கொள்வதற்குத் தேவையான அறிவும் புரிந்து கொள்வதற்கு திறனும் உங்களிடமிருந்தால் இக்குறிக்கோளை அடையும் வரை நீங்கள் ஓய்ந்திருக்க மாட்டீர்கள்.

மக்களே! நீங்கள் வணங்குகின்ற, நீங்கள் அறிந்து கொண்ட, நீங்கள் நேசித்துக் கீழ்ப்படிகின்ற உங்களைப் படைத்தவனை நீங்கள் நன்கு அறிந்து கொள்ள வேண்டும். இதற்காகவே நீங்கள் படைக்கப்பட்டிருக்கிறீர்கள் என்பதை அறிந்து கொள்ளுங்கள். இதனை, அதாவது உங்களுடைய படைப்பின் உறுதியான இறுதி நோக்கத்தை நீங்கள் உணர்ந்திருப்பதை உங்கள் சொல்லாலும் செயலாலும் காட்டவேண்டும். அவ்வாறு நீங்கள் செய்யாத வரை உண்மையான இரட்சிப்பிலிருந்து நீங்கள் வெகு தூரத்தில் இருப்பீர்கள். உங்களுடைய உள்ளங்களை உட்பக்கமாகத் திருப்பி நியாய உணர்வோடு பார்ப்பீர்களானால் நீங்களே உங்களுக்குச் சாட்சியாக அமைய முடியும்.

நீங்கள் வணங்குவது இறைவனையல்ல, இவ்வுலகத்தைத் தான் என்பது உண்மையல்லவா? ஒரு பெரும் சிலை இவ்வுலகத்தைத்





திரட்டி உருவாக்கப்பட்ட நிலையில் உங்களின் மனக் கண்ணுக்கு முன்னால் எப்போதும் – உங்கள் வாழ்வில் ஒவ்வொரு கணத்திலும் நின்று கொண்டிருக்கிறது. இந்த சிலையைத்தான் நீங்கள் வணங்கி வருகிறீர்கள். ஒவ்வொரு கணத்திற்கும் ஓராயிரம் முறைகள் நீங்கள் அதன் முன் நெடுஞ்சாண்கிடையாக விழுகிறீர்கள். விலை மதிக்க முடியாத உங்கள் நேரமெல்லாம் இவ்வுலகக் காரியங்களுக்கே செலவிடப்படுகிறது; வேறு எதற்காகவாவது சிறிது பொழுதைக் கூடச் செலவு செய்வதில்லை.

இவை யாவற்றிற்கும் முடிவு என்ன என்ற நினைவே உங்களுக்கு ஒருபோதும் இல்லை. உங்களிடம் எங்கே நியாயம் இருக்கிறது? திருக்குர்ஆன் அழைக்கின்ற நேர்வழி, இறையச்சம், நேர்மை, பணிவு ஆகியவை உங்களிடம் எங்கே இருக்கின்றன? ஆண்டுகளோ கழிந்து செல்கின்றன. நீங்கள் உங்கள் இறைவனைப் பற்றியோ, அவனுக்கு எந்த அளவுக்குக் கடமைபட்டிருக்கிறீர்கள் என்பதை பற்றியோ ஒருபோதும் சிந்திப்பதில்லை. யாவற்றிலும் மேலாக ஏகனான இறைவனுக்கும் உங்களுக்கும் எந்தவொரு சம்பந்தமும் இல்லை என்பது தான் உண்மை! நீங்கள் எத்தனை முறை அவனைப் பற்றிச் சிந்திக்கிறீர்கள்? அவனது பெயரைக் குறிப்பிடுவது கூட உங்களுக்கு கடினமாகத் தெரிகின்றது.

இப்போது நீங்கள் சண்டையிட்டு கெட்டிக்காரத்தனமாக வாதாடுகிறீர்கள் ; அப்படியெல்லாம் இல்லையென்று சொல்வீர்கள். ஆனால் இயற்கைச் சட்டம், இறைவனின் சட்டம் உங்களைப் பொய்யராக்குகிறது. இறை நம்பிக்கையாளரிடம் குறிப்பிட்ட சில அடையாளங்கள் உள்ளன. அவற்றால் அவர்களை இனம் கண்டு கொள்ளலாம் என்று நியாயப் பிரமாணம் கூறுகின்றது. அந்த அடையாளங்கள் உங்களிடம் இல்லை. இவ்வுலகம் சம்பந்தப்பட்ட உங்களின் காரியங்களில் உங்களின் அறிவையும் சிந்தனைத் திறனையும் காட்டுகிறீர்கள். ஆனால் உங்களின் திறமை எல்லாம் இவ்வுலகம் சம்பந்தப்பட்ட பிரச்சனைகள் முடிவுறும் இடத்திலேயே முடிவுற்று விடுகின்றன. எல்லா ஆன்மாக்களுக்கும் இறுதியாக விதிக்கப்பட்ட இருப்பிடமான வருங்கால உலகைப் பற்றிய பிரச்சனைகளுக்கு உங்களுடைய அறிவுத் திறனை நீங்கள் பயன் படுத்துவதில்லை. இவ்வுலகமே என்றென்றைக்கும்

நிலைத்திருக்கப் போவதைப் போன்று நீங்கள் இவ்வுலக வாழ்வில் மகிழ்ந்து மனநிறைவு பெற்று விடுகிறீர்கள். வரவிருக்கின்ற வாழ்வைப் பற்றி ஒருமுறை கூட நீங்கள் சிந்திப்பதில்லை. அந்த வாழ்வின் மகிழ்ச்சியே உண்மையான மகிழ்ச்சியாகவும், நீடித்திருக்கும் மகிழ்ச்சியாகவும் இருக்கும் என்பதை நீங்கள் இன்னும் உணரவில்லை. அந்த உலகத்தைப் பற்றி உங்கள் முழு வாழ்விலும் ஒருமுறை கூட உங்களுக்கு ஞாபகம் வருவதில்லை.

இது என்ன துரதிஷ்டம்! வாழ்க்கையின் மிக முக்கியத்துவம் வாய்ந்த விஷயத்தைப் பற்றி நீங்கள் சிந்திப்பதில்லை. உண்மையில் நீங்கள் இவ்விஷயத்தில் முழுக் குருடர்களாய் இருக்கிறீர்கள். எளிதில் அழிந்துபோகிற, முக்கியத்துவம் இல்லாத காரியங்களில் இரவும் பகலும் மூழ்கிப் போயிருக்கிறீர்கள். ஒரு நொடிப் பொழுதில் உங்கள் வாழ்வையும் உங்களின் எல்லா ஆசைகளையும் முடிவுக்குக் கொண்டு வரும் அந்த நேரம் உங்களுக்கும் வரும் என்று உங்களுக்குத் தெரியும். ஆனால், நீங்களோ எவ்வளவு உணர்ச்சியற்றவர்களாய் இருக்கிறீர்கள்!

இவை எல்லாவற்றையும் அறிந்து கொண்டு உங்களின் நேரத்தையும் சக்தியையும் இவ்வுலகக் காரியங்களிலேயே நாசமாக்கிக் கொண்டிருக்கிறீர்கள். உங்களுடைய திட்டங்கள் எப்போதும் தூய வழிகளில் செயல்படுத்தப் படவில்லை. பொய் சொல்லுதல், ஏமாற்றுதல், துன்புறுத்தல், கொலை செய்தல் போன்ற அநேக காரியங்களை ஹலால் (ஆகுமானவை) ஆக்கிக் கொண்டுள்ளீர்கள். வெட்கக் கேடான இந்த எல்லா குற்றங்களையும் செய்து கொண்டு இறைவன் புறமிருந்து எவ்வித ஒளியும் உங்களுக்கு வரத் தேவையில்லையென்று நீங்கள் நினைக்கிறீர்கள். இல்லை, அந்த எண்ணத்தையே நீங்கள் வெறுக்கிறீர்கள். இறைவன் புறமிருந்து வந்துள்ள இத்தூதை நீங்கள் மிகவும் அற்பமாகக் கருதிக் கொண்டீர்கள். அதை குறிப்பிட நேரும்போது உங்கள் முகத்தில் கர்வம் பொங்குகிறது. இருப்பினும் இந்த இயக்கம் இறைவனிடமிருந்துள்ளது என்பதற்கு நீங்கள் அத்தாட்சி கேட்கிறீர்கள். நான் இந்தக் கேள்விக்கு விடை தந்திருக்கிறேன் . அவ்விடையாவது: இந்த மரத்தை அதன் கனியைக் கொண்டும்,





இந்த சூரியனை அதன் ஒளியைக் கொண்டும் நீங்கள் அடையாளம் கண்டு கொள்வீர்கள்.

இறைவனின் இந்தத் தூதை ஒருமுறை நான் உங்களுக்கு அறிவித்து விட்டேன். நான் சொல்வதை ஏற்றுக் கொள்வதும் மறுப்பதும், காது கொடுத்துக் கேட்பதும் கேட்காதிருப்பதும் உங்களைப் பொருத்தது.

جیتے جی قدر بشر کی نہیں ہوتی پیارو
یاد آئیں گے تمہیں میرے سخن میرے بعد

பொருள் : அன்பிற்குரியவர்களே! மனிதன் வாழ்ந்துக் கொண்டிருக்கும் போது அவனைப் பற்றிய மதிப்பு மக்களுக்குத் தெரிவதில்லை. எனக்குப் பிறகு எனது பேச்சுகள் உங்களுக்கு நினைவிற்கு வரும்.

## இஸ்லாத்தில் ஏற்பட்ட பிரிவினையின் அவல நிலையை வெளிப்படுத்தும் கவிதை

1)இஸ்லாத்தின் கவலைக்குரிய நிலைமையையும் முஸ்லிம்களின் பஞ்சத்தின் நிலைமையையும் கண்டு மார்க்கப் பற்றுள்ள ஒவ்வொருவரது கண்ணும் இரத்தக் கண்ணீர் வடிப்பது தான் பொருத்தமான செயலாகும்.

2)இறைவனது மார்க்கத்தின்மீது மிகவும் பயங்கரமானதும், ஆபத்துகள் நிறைந்ததுமான சுழற்சி வந்துள்ளது. நிராகரிப்பு மற்றும் பாக்கியமற்ற நிலை காரணமாக உலகில் கடுமையான குழப்பம் வெளிப்பட்டுள்ளது.

3)எந்த நபரது மனம் ஒவ்வொரு நன்மையிலிருந்தும் சிறப்பிலிருந்தும் விலகியுள்ளதோ அவரும் தூதர்களில் சிறந்தவரான ஹஸ்ரத் முஹம்மது (ஸல்) அவர்கள் மீது குற்றங் குறைகளை சுமத்துகின்றார்.

4)எவர் தூய்மையற்ற சிறைச்சாலையில் சிறைப் பிடிக்கப்பட்டி ருக்கின்றாரோ அவரும் தூய்மையாளர்களின் தலைவரான ஹஸ்ரத் முஹம்மத் (ஸல்) அவர்களின் மகிமை பற்றி ஆட்சேபனைகளை செய்கின்றார்.

5) தீயவனும் கீழ்த்தரமான மனிதனும் அந்த பாவமற்றவர் மீது அம்புகளை எய்துகின்றான். இந்நிலையில் பூமியின் மீது கல்மழை பொழிவது வானத்திற்கு பொருத்தமான செயலாகும்.

6)உங்களது கண்களுக்கு முன்னால் இஸ்லாம் மண்ணுடன் கலந்து விட்டது. எனவே, செல்வந்தர்களின் பிரிவினரே! நீங்கள் உங்களது இறைவன் முன்னிலையில் என்ன சாக்குப்போக்கு கூறப் போகின்றீர்கள்?

7) யஸீதின் படைகள் போல எல்லா பக்கமும் நிராகரிப்பு வேகமாக இருக்கின்றது.மேலும் உண்மையான மார்க்கம் ஸெய்னுல் ஆபிதீனைப் போன்று நோயாளியாகவும் சக்தியற்றும் இருக்கின்றது.

8) செல்வந்தர்கள் அழகிய பெண்களுடன் உறவாடி இன்பத்திலும் மகிழ்ச்சியிலும் திளைத்த நிலையில் அமர்ந்துள்ளனர்.

9) ஆலிம்கள் தங்களது மன உணர்ச்சியின் காரணமாக இரவு பகலாக ஒருவருக் கொருவர் சண்டையிட்டுக் கொண்டிருக்கின்றனர்.





தூய்மையானவர்கள் மார்க்கத் தேவைகளைப் பற்றி முற்றிலும் கவனமற்றவர்களாக இருக்கின்றனர்.

10) ஒவ்வொரு நபரும் தனது மனதின் விருப்பத்தை நிறைவேற்றுவதற்காக ஒரு பக்கமாக சாய்ந்து விட்டார்கள். இதனால் மார்க்கத்தின் அம்சம் காலியாகிவிட்டது. ஒவ்வொரு எதிரியும் வேட்டைக்காகப் பதுங்கியிருக்கும் இடத்திலிருந்து குதித்துள்ளனர்.

11)முஸ்லிம்களே! முஸ்லிம் என்பதன் அடையாளங்கள் இவை தானா? மார்க்கத்தின் நிலை இவ்வாறிருக்கும்போது நீங்கள் உலக ஆசையுடன் ஒன்றியிருக்கின்றீர்களே!

12) உங்களது பார்வையில் உலகத்தின் கோட்டை மிகவும் வலுவானதா என்ன? அல்லது ஒருவேளை முன்னோர்கள் மரணித்துப் போனதைப் பற்றிய எண்ணம் உங்கள் உள்ளங்களிலிருந்து வெளியேறி விட்டதா?

13) கவனமற்றவர்களே! மரணத்தின் நேரம் அருகில் வந்துவிட்டது. அதற்காக கவலைப் படுங்கள். அழகான தோற்றமும் அழகிய நெற்றியையுமுடைய காதலிகளுடன் மது அருந்தியவாறு எதுவரை உங்கள் காலம் கழியும்?

14) அறிவுள்ளவர்களே! உங்கள் மனதை உலகத்தின் கைதியாக ஆக்காதீர்கள். இல்லையென்றால் மரணிக்கின்ற சமயத்தில் பல கடினங்களை நீங்கள் சகிக்க வேண்டியது வரும்.

15) என்றும் அழியாத அழகுடைய அந்த இறைவனைத் தவிர எவருக்கும் நீ உனது உள்ளத்தைப் பறி கொடுத்து விடாதே. அப்போதுதான் நீ நிரந்தரமான மகிழ்ச்சியை அருள் செய்கின்ற இறைவனிடமிருந்து பெற முடியும்.

16) அந்த இறைவனது வழியில் பைத்தியக்காரனாக இருக்கும் அந்த மனிதன் அறிவுள்ளவன் ஆவான். அந்த அன்பிற்குரிய அழகிய இறைவனின் முகத்தைப் பார்க்கத் துடிக்கும் அந்த நபர்தான் மதி நுட்பம் மிக்கவராவார்.

17) அவன் மீது கொள்ளும் பேரன்பு எனும் மது என்றும் அழியாத வாழ்வை வழங்குகின்ற தண்ணீராக இருக்கின்றது. எவர் அதனை அருந்தினாரோ அவர் அதற்குப் பிறகு ஒருபோதும் மரணிக்கமாட்டார்.

18) சகோதரரே! இந்த இழிவான உலக செல்வத்திடம் உள்ளத்ததை பறிகொடுத்துவிடாதீர்! இந்த தேனின் ஒவ்வொரு துளியிலும் நாசமாக்கும் விஷம் நிறைந்துள்ளது.

19) உம்மால் முடிந்தவரை உமது உயிருடனும் பொருளுடனும் மார்க்கத்திற்காக நீர் முயற்சியை மேற்கொள்வீராக! அதன் மூலமாக இறைவனின் அரியணையிலிருந்து நீர் அவனது திருப்தியின் ஆடையை பெற்றுக்கொள்வீர்.

20) உமது ஈமானில் உள்ள அந்த ஒளியை உமது செயலால் நிரூபித்துக்காட்டுவீராக. யூசுஃபிடம் நீர் உமது உள்ளத்தை கொடுத்து விட்ட பிறகு குர்ஆனின் வழியையும் மேற்கொண்டு நடப்பீராக.

21) எல்லா மதங்களை சார்ந்தவர்களும் திரும்புகின்ற இடமாக இந்த ( இஸ்லாம்) மார்க்கம் இருந்த அந்த நாட்கள் நினைவிற்கு வருகின்றன. மேலும் சபிக்கப்பட்ட ஷய்தானின் வழியிலிருந்தும் அது ஒரு உலகத்தையே விடுதலையடையச் செய்திருந்தது.

22) இந்த மார்க்கம் அறிவின் ஒளி காரணமாக உலகில் நல்ல மார்க்கப் பயிற்சி எனும் நிழலை விரித்திருந்தது. அது தனக்குரிய கண்ணியம் மற்றும் தகுதியின் காரணமாக தன் பாதங்களை விண்ணில் பதித்திருந்தது.

23) ஒவ்வொரு முட்டாளும் தனது முட்டாள்தனத்தால் இந்த உறுதி மிக்க மார்க்கத்தைப் பொய்ப் படுத்துகின்றான். அப்படிப்பட்ட ஒரு கால கட்டம் இப்போது வந்து விட்டது.

24)இலட்சக்கணக்கான முட்டாள்கள் மார்க்கத்தைவிட்டு வெளியே சென்று விட்டார்கள். இலட்சக்கணக்கான அறிவீனர்கள் சூழ்ச்சி செய்பவர்களின் வேட்டைக்கு பலியாகி விட்டார்கள்.

25) மார்க்க விவகாரங்களில் முஸ்லிம்களின் தைரியம் அவர்களது தன்மான உணர்வுடன் ஒத்துழைக்காததன் காரணத்தினால்தான் முஸ்லிம்களுக்கு எல்லா இழிவும் ஏற்பட்டது.

26) முஸ்தஃபா (ஸல்) அவர்களது மார்க்கத்தை விட்டு ஒரு உலகமே முகந்திருப்பிவிட்டு சென்றாலும் தன்மான உணர்வின் காரணமாக கருவிலுள்ள ஒரு குழந்தை துடிப்பது போன்று கூட மார்க்கத்திற்காக எவரும் துடிப்பதில்லை.





27) அவர்கள் ஒவ்வொரு நொடியும் இந்த இழிவான உலகத்தின் கவலையில் ஆழ்ந்து கிடக்கின்றனர். அவர்களது செல்வம் பெண்களுக்காகவும் பிள்ளைகளுக்காகவும் செலவாகிக் கொண்டிருக்கிறது.

28) எந்த சபைகளில் தீமைகளும், குழப்பங்களும் இருக்குமோ அதற்கு அவர்கள் தலைவர்களாக இருக்கின்றார்கள். பாவிகளின் கூட்டத்தில் அவர்கள் மாணிக்கங்களைப் போன்று இருக்கின்றார்கள்.

29)மதுவை ரசித்துக் குடிப்பவர்களாக இவர்கள் இருக்கின்றார்கள். ஆனால், நேர்வழியை அறியாதவர்களாக இவர்கள் இருக்கின்றார்கள். மார்க்க அறிஞர்கள் மீது இவர்களுக்கு வெறுப்பு இருக்கின்றது. மது அருந்துபவர்களுடன் இவர்களுக்கு நட்பு இருக்கின்றது.

30) தனது சமுதாயத்தின் உள்ளத்தில் தூய்மையாளர்களிடம் இருக்கும் நன்றியுணர்வைக் காணாதபோது இதற்கு முன்னர் அவர்கள் மீது அன்பு காட்டிய நேசமிக்க இறைவன் அவர்களிடமிருந்தும் முகந்திரும்பிச் சென்றுவிட்டான்.

31) செல்வமும் மகிழ்ச்சியும் இருந்த அவர்களது கால கட்டம் கழிந்து விட்டது. இப்போது அவர்களது செயல்களின் தீய விளைவுகள் இப்படிப்பட்ட மோசமான நாட்களை கொண்டு வந்திருக்கின்றன.

32)இதற்கு முன்னர் ஏற்பட்ட முன்னேற்றமும் மார்க்கத்தைப் பின்பற்றியதன் மூலமே ஏற்பட்டது. இதற்குப் பிறகும் எப்போது முன்னேற்றம் ஏற்பட்டாலும் நிச்சயமாக அதுவும் இந்த வழியின் மூலமே நடக்கும்.

33) இறைவா! உன் தரப்பிலிருந்து மீண்டும் உதவியின் நேரம் எப்போது வரும்? மீண்டும் அந்த அருளுக்குரிய நாளையும் வருடத்தையும் நாங்கள் எப்போது பார்ப்போம்?

34) அஹ்மது (ஸல்) அவர்களின் மார்க்கத்தின் விரோதிகள் அதிகமாக இருப்பதும், மார்க்கத்திற்கு உதவி செய்பவர்கள் குறைவாக இருப்பதும் ஆகிய இந்த இரு கவலைகளும்தான் என் உயிரை உருக்கிவிட்டது.

35)இறைவா! விரைவாக வருவாயாக! எங்கள் மீது உனது உதவியின் மழையை பொழியச் செய்வாயாக. அவ்வாறில்லை

யென்றால் என் இறைவா! இந்த அக்கினி நிறைந்த இடத்திலிருந்து என்னை உயர்த்தி விடுவாயாக!

36)இறைவா! நேர்வழியின் ஒளியை உனது கருனையால் கிழக்கிலிருந்து உதிக்கச் செய்வாயாக! உனது தெளிவான அடையாளங்கள் மூலம் வழிதவறிச் செல்பவர்களின் கண்களை ஒளிமயமானதாக ஆக்குவாயாக!

37) நீ எனக்கு இந்த வேதனையிலும் உருக்கத்திலும் உண்மையாக நிலைத்திருக்கும் தன்மையை வழங்கி இருக்கும்போது இவ்விஷயத்தில் எனக்கு தோல்வியின் மரணத்தைத் தருவாய் என்ற நம்பிக்கை எனக்கு இல்லை.

38) உண்மையாளர்களின் பணி ஒருபோதும் அதன் முழுமையை அடையாமல் இருந்ததில்லை. உண்மையாளர்களின் ஆடையில் இறைவனின் கை மறைமுகமாக இருக்கின்றது .

*****





# ஆட்சேபணை செய்பவருக்கு ஒரு பொது அறிவிப்பு

தற்காலத்தில் பல்வேறு பிரிவுகளைச் சேர்ந்தவர்கள், மாற்றுக் கருத்து கொண்டவர்கள் இஸ்லாத்தின் மீதோ அல்லது திருக்குர்ஆன் போதனைகளின் மீதோ அல்லது நமது தலைவரும் எஜமானருமாகிய ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் மீதோ எந்த அளவுக்கு ஆட்சேபணைகளைச் செய்கின்றார்களோ, அல்லது நமது சொந்த விஷயங்களைப் பற்றி குற்றச்சாட்டுகள் செய்கின்றார்களோ, அல்லது நமது இறையறிவிப்புகள், இறையறிவிப்பின் படியான வாதங்கள், பற்றி அவர்களின் உள்ளங்களில் என்னென்ன சந்தேகங்கள், தவறான எண்ணங்கள் உள்ளனவோ அந்த அனைத்து ஆட்சேபணைகளையும் வரிசையாக ஒரு நூல் வடிவில் அச்சிட்டு அந்த ஒவ்வோர் ஆட்சேபணைக்கும் வரிசையாக பதில் கொடுக்க வேண்டும் என நாம் நாடியுள்ளோம்.

எனவே எல்லா கிறித்தவர்களையும், இந்துக்களையும், ஆரியர்களையும், யூதர்களையும், மஜூஸிகளையும் (நட்சத்திரங்களை வணங்குபவர்களையும்), நாத்திகர்களையும், பிரம்ம சமாஜிகளையும், இயற்கை வாதிகளையும், தத்துவ வாதிகளையும், மாற்றுக் கருத்துக் கொண்ட முஸ்லிம்களையும் ஆகிய அனைவரையும் பொதுவாக விளித்து அறிவிப்பது என்னவென்றால், இஸ்லாத்தைப் பற்றியோ அல்லது திருக்குர்ஆனைப் பற்றியோ, நமது தலைவரும் பின்பற்றத் தகுந்தவரும், இறை தூதர்களில் சிறந்தவருமாகிய ஹஸ்ரத் முஹம்மது (ஸல்) அவர்களைப் பற்றியோ அல்லது எம்மைப் பற்றியோ, இறைவனால் நமக்கு வழங்கப்பட்ட அந்தஸ்தைப் பற்றியோ, நமக்கு இறங்கிய இறையறிவிப்புகளைப் பற்றியோ ஆட்சேபணை கொண்டுள்ள எவராக இருந்தாலும், அவர் உண்மையை நாடுபவராக இருந்தால், அவர் அந்த ஆட்சேபணைகளை அழகிய எழுத்தில் எழுதி எம்மிடம் அனுப்பி வைப்பது அவருக்கு கட்டாயமும் அவசியமும் ஆகும். அப்போது

அந்த எல்லா ஆட்சேபணைகளையும் ஓரிடத்தில் ஒன்று சேர்த்து ஒரு நூலில் வரிசையாக அச்சிட்டு வெளியிட்டு, பிறகு அவை ஒவ்வொன்றிற்கும் விரிவாக விடையளிக்கலாம்.

وَالسَّلَامُ عَلَى مَنِ اتَّبَعَ الْهُدَى

நேர்வழியைப் பின்பற்றியவருக்கு சாந்தி உண்டாவதாக!

எளியவன்

**மிர்ஸா குலாம் அஹ்மது**

காதியான், குர்தாஸ்புர் மாவட்டம், பஞ்சாப்

10, ஜமாதிஸ் ஸானீ ஹிஜ்ரி 1308





## அறிவிப்பு

இப்புத்தகத்துடன் இன்னும் இரண்டு புத்தகங்கள் இயற்றப்பட்டள்ளன. அவை உண்மையில் இதே புத்தகத்தின் பாகங்கள் தான். இதன் படி இப்புத்தகத்தின் பெயர் ஃபத்ஹே இஸ்லாம் ( இஸ்லாத்தின் வெற்றி), இரண்டாவது புத்தகத்தின் பெயர் தவ்ஸீஹே மராம் (குறிக்கோள்களின் விளக்கம்), மூன்றாவது புத்தகத்தின் பெயர் இஸாலே அவ்ஹாம் (தப்பெண்ணங்களின் நிவாரணம்) ஆகும்.

**மிர்ஸா குலாம் அஹ்மது**

காதியான்.